Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 256 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 24, வெள்ளி 09.08.2013

## செப். 9, 10 தபால் மூல வாக்களிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.9
நடைபெறவுள்ள மூன்று மாகாண சபைகளின் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் செப்ரெம்பர் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதென தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.
மாகாண சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் கடந்த 2 ஆம் திகதி வரை கோரப்பட்டிருந்தன. விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்கள் குறித்த திகதிகளில் வாக்களிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-400)

## அங்கர் பால்மா விற்கத் தடை

கொழும்பு,ஓக 09
நியுசிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும், அங்கர், மலிபன், டயமன்ட் பால்மா வகைகளை, விற்பனை செய்யக் கூடாது என்று அறிவித்துள்ள இலங்கை அரசு, பால்மா தொடர்பான அனைத்து விளம்பரங்களையும் தடைசெய்துள்ளது.
நேற்று முன்தினம் நடைமுறைக்கு வந்த இந்தத் தடை மறுஅறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும் என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
நியூசிலாந்தில் உற்பத்தி செய்யப்படும் பால்மாவில், ஆபத்தான பக்ரீரியா கிருமி இருப்பதாகத் தகவல்கள் வெளியானதையடுத்தே, 1980ஆம் ஆண்டின் உணவுச்சட்டத்தின் கீழ், இந்தத் தடைகளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் விதித்துள்ளார்.
அத்துடன், அனைத்துப் பால்மா வகைகளையும் பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதார அமைச்சின் உணவு ஆலோசனைக்குழு தீர்மானித்துள்ளது. (த)

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக நேற்றுத் திரண்டது தமிழகம்

சென்னை,ஓக.9
இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று வியாழக்கிழமை தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இலட்சக் கணக்கானோர் பங்கு பற்றி ஆதரவுக் குரல் எழுப்பினர்.
டெசோ அமைப்பின் ஏற்

தொடர்ச்சி: பக்கம் 21



## எந்தத் தடை வரினும் தமிழர் படை வெல்லும்
### ஆர்ப்பாட்டத்தில் கருணாநிதி

சென்னை,ஓக.9
இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சியில் எந்தத் தடைகள் வந்தாலும் தமிழர் படை நிச்சயம் வெல்லும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.
டெசோ அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக சென்னையில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரி

தொடர்ச்சி: பக்கம் 21

# காணி ஆக்கிரமிப்பை பேசித் தீர்க்கத் தயார்
## சபையில் சம்பந்தன் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 9
வடக்கு, கிழக்கில் காணி ஆக்கிரமிப்புகள், சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் அரசு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், காணிப் பிரச்சினைகளை பேசித் தீர்ப்பதற்கு தாம் தயார் என்றும் இதுவிடயத்தில் அரசின் பதிலை எதிர்ப்பார்க்கிறார் என்றும் தெரிவித்தார்.
வட மாகாணத்தில் தற்போது இடம்பெறும் காணி அபகரிப்புகள், சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை நேற்று சபையில் முன்வைத்து உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
சுமார் ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள் உரையாற்றிய அவர், வடக்கில் இடம்பெறும் காணி ஆக்கிரமிப்புகள் தொடர்பில் பல்வேறு புள்ளிவிவரங்களையும் முன்வைத்ததுடன், வடக்கில் யாழ். மாவட்டம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் திருகோணமலை முதலிய மாவட்டங்களில் எங்கெங்கு காணி அபகரிப்புகள், சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டினார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
வடமாகாணத்தில் காணி என்பது பாரிய விடயமாகும். தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இது பொருந்தும். இக் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசுடன் நாம் பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், பயனளிக்கவில்லை. அதனால் நாடாளுமன்றத்தில் அதற்கான தீர்வொன்றைக் காண விளைகிறோம். கலந்துரையாடல் மூலம் தீர்வைக் காண நாம் தயார். அரசின் பதிலைத் தான் எதிர்பார்க்

தொடர்ச்சி: பக்கம் 21




முடிவு மாறாது தெலுங்கானா குறித்து சோனியா 06
ரஷ்யா மீது அதிருப்தி கூறுகின்றார் அமெரிக்க ஜனாதிபதி 07
ஜமாய்த்தது ஜமைக்கா 23



சாவகச்சேரி பஸ் நிலைய வளாகத்தில் ஒட்டப்பட்டிருந்த வடக்கு மாகாணத் தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகள் நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையினால் அகற்றப்பட்டன. நகர சபைப் பணியாளர்கள் இதனை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். (ஓ-9)

## சுவரொட்டிகளை அகற்ற பொலிஸாருக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.9
வடக்கு மாகாணத்தில் தேர்தல் பிரசாரத்துக்காக கட்சிகளின் வேட்பாளர்களினால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள், விளம்பரப் பதாகைகள் அனைத்தையும் உடனடியாக அகற்றுமாறு வட மாகாணத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.
தேர்தல்கள் திணைக்கள உத்தரவின்படி சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் உடனடியாக இவற்றை அகற்ற வேண்டும் என்று வட மாகாணப் பிரதித் தேர்தல் ஆணையாளரும், யாழ். மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான

தொடர்ச்சி: பக்கம் 21

## காணி, பொலிஸ் அதிகாரங்களை கொடுத்தால் வடக்கில் தனி மாநில அரசு உருவாகிவிடும்
### பிரதமர் ஜயரத்ன கூறுகிறார்

கொழும்பு,ஓக 9
வடக்கு மாகாணத்துக்குப் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதானது, வடக்கில் மாநில அரசு ஒன்று உருவாகச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாகும் என பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அலுவலகம் ஒன்றை கம்பளையில் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
பாட்டன், முப்பாட்டன்மார் பாதுகாத்துக் கொடுத்த தாய் நாட்டை எந்தச் சந்தர்ப்பத்திலும் இரண்டாகப் பிரித்து வேறுபடுத்தப் போவதில்லை.
பௌத்த மத தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் 2 ஆயிரத்து 557 வருடங்கள் பேணிப் பாதுகாத்த இந்த நாட்டைத் துண்டுகளாகப் பிளவுபடுத்த வெளிநாட்டு சக்திகள் உட்பட பல சக்திகள் முயற்சித்து வருகின்றன.
வடக்கு மாகாணத்துக்குக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குமாறு அரசுக்குப் பலவிதமான முறையில் அழுத்தங்

தொடர்ச்சி: பக்கம் 21

## வாக்காளரின் விவரங்களை மீண்டும் கோரும் படையினர்
### திரிசங்கு நிலையில் கிராம அலுவலர்கள்

முல்லைத்தீவு, ஓக. 9
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர்களிடம் செல்லும் படையினர் அந்தப் பகுதி வாக்காளர்களின் விவரங்களைக் கட்டாயப்படுத்திப் பெற்று வருகின்றனர் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே'யிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
சீருடையில் கிராம அலுவலர்களின் அலுவலகங்களுக்குச் செல்லும் படையினர் கட்டாயப்படுத்தி வாக்காளர்களின் விவரங்களைப் பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
18 வயதுக்கு மேற்பட்டவர்களின் விவரங்கள் வாக்களிக்கத் தகுதியுடையோரின் எண்ணிக்கை ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ளவர்களின் எண்ணிக்கை தபால் மூலமாக வாக்களிக்கத் தகுதியுள்ளவர்களின் எண்ணிக்கை உட்படப் பல விவரங்களைப் படையினர் கட்டாயப்படுத்திப் பெற்று வருகின்றனர்

தொடர்ச்சி: பக்கம் 21

உதயன்
09/08/2013

## ஐ.நாவின் பெயரில் பண மோசடி நைஜீரியப் பிரஜை கைதானார்

கொழும்பு, ஓக. 9
ஐ.நா சபையால் வழங்கப்படும் 5 லட்சம் அமெரிக்க டொலர் பரிசாகக் கிடைத்துள்ளதென ஏமாற்றி மின்னஞ்சல் மூலம் நிதி மோசடி செய்த நைஜீரியப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பணப்பரிசு எனக் கூறி மின்னஞ்சல் அனுப்பி நபர்களின் தனிப்பட்ட தகவல்களை அறிந்து கொண்டு அவர்களுக்குக் கையடக்கத் தொலைபேசிகளிலும் குறுந்தகவல் அனுப்பி இவ்வாறு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பரிசுத் தொகையை இலங்கைக்குக் கொண்டுவரும் போது செலுத்த வேண்டிய சுங்க வரியை வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிடுமாறு கோரி நைஜீரியப் பிரஜை ஒருவர் இவ்வாறு மோசடி செய்துள்ளார்.

இது குறித்து விசாரணை செய்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கடந்த 5ஆம் திகதி வத்தளை பகுதியில் வைத்து நைஜீரியப் பிரஜையைக் கைது செய்து வத்தளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். அவரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்து வருவதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (த)

# வெலிவேரிய படுகொலையை மூடி மறைக்க அரசு முயற்சி

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 9
வெலிவேரிய - ரத்துபஸ்வேல தாக்குதல் குறித்த விபரங்களை மூடிமறைக்க ராஜபக்ஷ அரசு முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடிப்பதற்கு நீர்கேட்ட ரத்துபஸ்வெல நிராயுதபாணி மக்கள் மீது இராணுவம் மற்றும் கொலைகாரர்களை அனுப்பிப் பொல்லுகள் மற்றும் துப்பாக்கிகள் மூலம் மனிதாபிமானமின்றித் தாக்குதல் நடத்தி சில உயிர்களைப் படுகொலை செய்த சம்பவத்தை மூடிமறைக்க ராஜபக்ஷ அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு நம்பத் தகுந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

அதனை முறியடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ரத்துபஸ்வெல மக்கள் கொலைக்கு இராணுவ கொமாண்டோ படையோடு பிரதேச பிரபல அரசியல்வாதியின் குண்டர்களும் ஏவிவிடப்பட்டதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

அத்துடன், அப்பாவி ம்க்களைக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை விசாரணைக்கு வழங்காது மறைக்க ராஜபக்ஷ அரசு செயற்பட்டு வருவதாகத் தெரிகிறது.

அதனால் இப்படுகொலைகளுடன் தொடர்புடைய நபர்களின் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளதால் அதனை அடையாளம் காட்டப் பொது மக்கள் முன்வர வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி அனைத்து மக்களிடமும் கேட்டுக் கொள்கிறது- என்றுள்ளது. (த)

## வேட்பாளருக்கு கருத்தமர்வு

❝ தேர்தல்கள் திணைக் களத்திலிருந்து வரும் உயர் அதிகாரிகளால் இந்தக் கருத்தமர்வு நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், ஓக. 9
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அனைத்துக் கட்சிகளின் வேட்பாளர்களுக்குமான அறிவூட்டல் கருத்தமர்வு ஒன்று யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது என்று வட மாகாணப் பிரதித் தேர்தல் ஆணையாளர் சி.அச்சுதன் தெரிவித்தார்.

தேர்தல்கள் திணைக்களத்திலிருந்து வரும் உயர் அதிகாரிகளால் இந்தக் கருத்தமர்வு நடத்தப்படவுள்ளது. அனைத்துக் கட்சிகளின் வேட்பாளர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு அச்சுதன் கேட்டுள்ளார். (த-4)

## வெலிவேரிய தாக்குதல் குறித்து 100 படையினரிடம் விசாரணை



கொழும்பு, ஓக. 9
வெலிவேரிய, ரத்துபஸ் வெல துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் இதுவரை படையினர் 100 பேரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.ஆர். எல்.ரணவீர, கம்பஹா பிரதான நீதிவான் நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

அத்துடன், மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்களிடமிருந்தும் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் சம்பவ தினத்தன்று படையினர் 93 பேர் பயன்படுத்திய துப்பாக்கிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றில் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, சம்பவ தினத்தன்று ஊடக நிறுவனங்கள் பதிவு செய்த வீடியோக்கள், புகைப்படங்களின் உதவியுடன் சந்தேக நபர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுத்தமான குடிதண்ணீர் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடபட்ட ரத்துபஸ்வெல கிராம வாசிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் மூவர் கொல்லப்பட்டதுடன் 43பேர் காயமடைந்துள்ளனர் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்தார். (த)

## தெல்லிப்பழை மருத்துவர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்று வியாழக்கிழமை காலை மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தாதிய உத்தியோகத்தர் ஒருவரை சத்திரசிகிச்சைக் கூடத்தில் பணியாற்ற வருமாறு மருத்துவர்கள் அழைத்த போது குறித்த தாதி அங்கு வரவில்லையென்றும் அதனால் குறித்த தாதிய உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரியும் மருத்துவர்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அங்கு சென்ற யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். தனிப்பட்ட விடயம் காரணமாகக் குறித்த தாதிய உத்தியோகத்தர் சத்திர சிகிச்சைக் கூடத்துக்குச் செல்லவில்லை என்று தெரிவித்ததையடுத்து அவர் பிறிதொரு விடுதிக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

இதனையடுத்து மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டு பணிக்குத் திரும்பினர் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (த-4)

## நல்லூர்க் கந்தன் கொடிச் சேலைப் பவனி ஞாயிறன்று



யாழ்ப்பாணம், ஓக. 9
வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவுக்கான கொடிச்சேலை, சம்பிரதாயபூர்வமாக ஆலயத்துக்கு எடுத்துவரும் நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில், சம்பிரதாய முறைப்படி வருடந்தோறும் கொடிச் சீலை முதல்நாள் ஆலயத்துக்கு எடுத்துவரப்படுகின்றது.

செங்குந்தர் மரபில் வந்த சிவஞான முதலியாரின் பேரன் கந்தையா தர்மகுலசிங்கத்தால், திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியர் ந.சத்தியமூர்த்தியினது இல்லத்தில் இருந்து காலை 7.30 மணிக்கு மங்கல வாத்தியங்களுடன் எடுத்து வரப்பட்டு-

சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள வைரவநாதர் வல்லிபுர சாமியால் அமைக்கப்பட்டுள்ள கொடித்தேர் மடத்தில் எழுந்தருளி இருக்கும் முருகப் பெருமானுக்கு விசேட பூசைகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து பக்தர்கள் புடைசூழ, சம்பிரதாய முறைப்படி சித்திரத் தேரில் நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு காலை 8.30 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு ஆலய பிரதான சிவாச்சாரியாரிடம் கையளிக்கப் படும். (14)

## போலி நாணயத் தாள்களுடன் கிளிநொச்சியில் மூவர் கைது

கிளிநொச்சி, ஓக. 9
கிளிநொச்சியில் போலி நாணயத்தாள்களை அச்சிட்டதாகக் கூறப்படும் ஒருவரும் அவற்றை வைத்திருந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில், கிளிநொச்சி பிரதேசத்தில் போலி 1,000 ரூபா நாணயத்தாள்களுடன் ஒருவர் கைதானார்.

நேற்றுமுன்தினம் கைதான இவர் வசமிருந்து, 28 போலி 1,000 ரூபா நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் வவுனியா பிரதேசத்தில் 20 போலி 1,000 ரூபா நாணயத்தாள்களுடன் மேலு மொருவர் கைதுசெய்யப்பட்டார்.

இவர்கள் இருவரிடமும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டதில் வவுனியா கோனிக்கல் பிரதேசத்தில் போலி நாணயத்தாள்களை அச்சிடுபவர் எனச் சந்தேகிக்கப் படும் ஒருவர் கைதானார்.

மேலும் நாணயத்தாள்கள் அச்சிட பயன்படுத்தப்பட்ட கொன்கோட் வகைத் தாள்கள் 15, கணினி மற்றும் பிரிண்டர் உள்ளிட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர்கள் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (த-6)

## நளின் பண்டார எம்.பியாக பதவிப் பிரமாணம்

கொழும்பு, ஓக. 9
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக நளின் பண்டார நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த இவர், தயாசிறி ஜயசேகரவின் பதவி விலகலை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே நளின் பண்டார நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். (த)

## வடமாகாணத்தில் புதிதாக 7 தேசிய பாடசாலைகள்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளான கிளிநொச்சி மத்திய கல்லூரி, முழங்காவில் மகா வித்தியாலயம், முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளான வித்தியானந்தாக் கல்லூரி, மல்லாவி மத்திய கல்லூரி, சம்பத்நுவர மகா வித்தியாலயம், மன்னார் மாவட்ட பாடசாலைகளான முசலி மகா வித்தியாலயம், அல்-அஸ்ஹர் மகா வித்தியாலயம் ஆகிய 7 பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக 29.07.2013 முதல் செயற்படும்படியாக மத்திய கல்வி அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (த-400)

## நடமாடும் சேவை வலி. கிழக்கில் செவ்வாயன்று



அச்சுவேலி, ஓக.9

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை ஆறாவது தினமாக எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

'' கபே '' மற்றும் '' சீ ஏச் ஆர்'' நிறுவனங்களின் அனுசரணையுடன் நடைபெறும் நடமாடும் சேவையில் முத்திரை, புகைப்படம், பிறப்புச் சான்றிதழ் பிரதி, திருமணச் சான்றிதழ் பிரதி உட்பட அனைத்து ஆவணங்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

''நடமாடும் சேவையில் ஜி.சீ.ஈ சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் விண்ணப்பங்களையும் பாடசாலை அதிபர்கள் ஊடாக சமர்ப்பிக்கலாம். ஆள் பதிவுத் திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு விண்ணப்பங்களை நேரடியாக உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதால் தேசிய அடையாள அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு விரைவாகக் கிடைக்கும். எனவே இந்தச் சந்தர்ப்பத்தை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என வலி கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார். (ஒ-11)

## கரைச்சி பிரதேச செயலர் பிரிவில்

# மேலும் 6 கிராம அலுவலர் பிரிவில் சமூக நலனோம்பு அ.அட்டை

கிளிநொச்சி, ஓக. 9

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 42 கிராம அலுவலர் பிரிவுகளில் மேலும் 6 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மாற்று வலுவுள்ளோருக்கான சமூக நலனோம்பு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. இதற்கான வேலைத்திட்டம் எதிர்வரும் 12 ஆம், 15 ஆம் திகதிகளில் பின்வரும் கிராம அலுவலர் அலுவலகங்களில் நடத்தப்படவுள்ளன.

மாற்று வலுவுள்ளோரின் சகல விடயங்களையும் பதிவு செய்ய வேண்டியுள்ளதால் பிரிவுகளில் முன்னர் பதிவு செய்தவர்களும் இதுவரை பதிவு செய்யாதவர்களும் தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறும் ;

பதிவுகளை மேற்கொள்வதற்கு இயலாமை காரணமாக வருகை தர முடியாதவர்கள் முன்கூட்டியே கிராம அலுவலருக்கும் அறிவிக்குமாறும் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு கனகபுரம், முற்பகல் 11 மணிக்கு செல்வா நகர், பிற்பகல் 2 மணிக்கு அம்பாள் குளம், எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு உருத்திரபுரம் வடக்கு, முற்பகல் 11 மணிக்கு உருத்திரபுரம் மேற்கு, பிற்பகல் ஒரு மணிக்கு சிவநகர் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது.

கடந்த முதலாம், இரண்டாம் பிரதேசத்தில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தப்பட்ட மாற்று வலுவுள்ளோருக்கான நலனோம்பு அடையாள அட்டை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தில் 337 பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரதேசத்தில் உள்ள ஏனைய 17 கிராம அலுவலர் பிரிவுகளுக்கான வேலைத்திட்டப் பதிவுகள் எதிர்வரும் 22,23 ஆம் திகதிகளில் நடத்தப்படுமெனவும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சின் செயலரின் பணிப்பின் பேரில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர், பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் மாற்று வலுவுள்ளோருக்கான சமூக நலனோம்பு அடையாள அட்டைகள் வழங்குவதற்கான வேலைத் திட்டம் இடம் பெற்று வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-9)

## இன்னும் கூட இருக்கிறது மனிதாபிமானம்



பெற்ற பிள்ளைகளே பெற்றோரை தந்தையரை முதியோர் இல்லங்களில் சேர்க்கும் இந்தக் காலத்தில் பசியால் வாடும்போது பெரியவர் ஒருவருக்கு உணவு வாங்கிக்கொடுத்து எங்கு செல்லவேண்டும் எனக் கேட்டு அவரை அழைத்துச் செல்லும் சின்னஞ் சிறுசுகள். இது நடப்பதும் யாழ்ப்பாணத்தில் தான்! (ஒ-20-21)

## வீதித்தடை மாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 9

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வீதித் தடை நடைமுறைப்படுத்தப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய வீதியில் அடியார்களின் அங்கப் பிரதிட்டை, அடியளிப்பு ஆகிய நேர்த்திக் கடன்களுக்காக மணல் பரவும் பணிகள் இடம் பெறுகின்றன. எனவே அந்தப் பணிகள் நிறை வடைந் ததும் வீதித் தடைகள் வழமைபோன்று நடை முறைப்படுத்தப்படவுள்ளன.

பருத்தித்துறை வீதி, செட்டித்தெரு, கோயில் வீதியின் தெற்கு, வடக்கு பகுதிகள், அரசடி வீதி ஆகியவை வாகனப் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வாகனச் சாரதிகள் போக்குவரத்துக்கு மாற்று வழிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

## சட்டவிரோதமாக 'கள்' விற்ற ஐவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஓக.9

புங்குடுதீவில் சட்டவிரோதமாக 'கள்' விற்பனை செய்யும் செயற்பாடுகள் தொடர்கின்றன.

இது தொடர்பாக நேற்று முன்தினம் 10 பேருக்கு 5ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது நீதிமன்று.

புங்குடுதீவைச் சேர்ந்த குறித்த 10 பேரும் சட்ட விரோதமாக கள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் யாழ். மது வரித் திணைக்களத் தினரால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. நீதிவான் ஆர். எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் வழக்குகள் விசாரணைக்கு வந்தன.

நீதிவான் முன் னிலையில் அனைவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூபா வீதம் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-4)

## வங்கியிலிருந்து வீடு சென்ற பெண்ணின் கைப்பை பறிப்பு

### அடைவு நகைகளுடன் செல்வதாகக் கருதி

நவாலி, ஓக. 9

மானிப்பாய் வங்கிக் கிளை ஒன்றில் அடைவு வைத்த தனது நகைகளுக்கு வட்டி செலுத்தி புதுப்பித்து விட்டு மீண்டும் வீட்டுக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் தொடர்ந்த இருவர் அதிகார் செல்வமுத்து வீதியில் அவரை இடை மறித்து சைக்கிள் கடைக்குள் இருந்த கைப் பையைப் பறித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகல் 1.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

நவாலி சின்னப்பா வீதியைச் சேர்ந்த ரவீந்திரன் சிவகௌரி என்பவர் வங்கிப் புத்தகம், சிறுதொகைப் பணம், ஆவணங்கள் அடங்கிய கைப்பையை சைக்கிள் கூடைக்குள் வைத்தபடி வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார்.



அந்த வேளையிலேயே இருவர் துணிகரமாக கைப்பையை இழுத்துப் பறித்துக் கொண்டு ஓடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. வங்கியின் அடைவு நகை வைக்கும் பிரிவில் அவர் இருந்ததால் நகைகளுடன் வீட்டுக்குச் செல்கிறார் எனக் கருதியே கைப்பையை எடுத்துச் சென்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது. (ஒ-100)

## அதிவேகம், போதைக் குற்றங்களுக்கு 45 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி, ஓக.9

மோட்டார் சைக்கிளில் அளவுக்கதிகமாக ஆள்களை ஏற்றிச் சென்ற நபருக்கும், ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் வீதி வேகக் கட்டுப்பாட்டை மீறி வாகனங்களை வேகமாகச் செலுத்திய சாரதிக்கும் மதுபோதையில் ஆவணங்கள் இன்றி மோட்டார் சைக்கிள்கள் செலுத்திய இருவருக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது. இந்த நால்வருக்கும் மொத்தமாக 45 ஆயிரம் ரூபா அப ராதம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வாகனவரி ஆகிய ஆவனங்களின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த நபருக்கு 16 ஆயிரத்து 500 ரூபாவும், மது போதையில் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி ஆகியவை இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நுணாவில் வாசிக்கு 13 ஆயிரத்து 500 ரூபாவும் -

மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம், தலைக்கவசம் இன்றி அளவுக்கதிகமாக ஆள்களை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற கொடிகாமம் வாசிக்கு 9 ஆயிரத்து 500 ரூபாவும், வீதியில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகை யில் வேகமாக வாகனத்தைச் செலுத்திய திருநெல்வேலியைச் சேர்ந்த வான் சாரதிக்கு 5 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பொலிஸ் நிலையங்களின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவினர் தாக்கல் செய்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-9)

## சனசமூக நிலைய பிரதிநிதிகளுக்கான கூட்டம் இன்று

சுழிபுரம், ஓக.9

உள்ளூராட்சி வாரத்தில் வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் கௌரவிக்கப்பட்டு விருதுகள், சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் முன்னோடியாக வலி. மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட 80 சன சமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுக்கான முக்கிய அபிவிருத்திக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு சுழிபுரம் வலி. மேற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.

பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் இடம் பெறும் கூட்டத்தில் சகல சனசமூக நிலையப் பிரதி நிதிகளையும் பங்குபற்றுமாறு சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி ஹேமா சிவசோதி கேட்டுள்ளார். (ஒ-50)

# நாடுகடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்றம் கலைப்பு

## அறிவித்தார் உருத்திரகுமாரன்



நாடுகடந்த தமிழீழ அரசின் முதலாவது நாடாளுமன்றம் ஒக்ரோபர் முதலாம் திகதியுடன் கலைக்கப்படுவதாக நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அறிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், நாடு கடந்த தமிழீழ அரசின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் சுதந்திர தமிழீழத்துக்கான போர் தான் ஓய்ந்ததே அன்றி, போராட்டம் அல்ல என்பதனை முரசறைந்து முகிழ்ந்த நாடு கடந்த தமிழீழ அரசின் முதலாவது நாடாளுமன்றத்தின் பணிக்காலம் நிறைவுகாண இருக்கின்றது.

தமிழீழ தாயகத்தில் நிறுவப்பட்டிருந்த நடைமுறைத் தமிழீழ அரசை மே 2009 ஆம் ஆண்டில் பெரும் இன அழிப்பு ஒன்றின் ஊடாக அழித்து விட்டதாக சிங்களம் போர் வெற்றிக்களிப்பில் இருந்த வேளை, இலங்கைக்கு வெளியே பரந்து வாழ்கின்ற புலம்பெயர் தமிழர்கள் தங்களின் அரசியல் அபிலாசையை, ஜனநாயக முறையிலான தேர்தல் ஒன்றின் ஊடாக நாடுகடந்த தமிழீழ அரசாக உருவாக்கிக் கொண்டனர்.

12 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தேர்தல் மூலம் மக்களால் தேர்வு செய்யப்பட்ட 115 மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டதான நாடு கடந்த தமிழீழ அரசு. நாடாளுமன்றம், அமைச்சரவை, மேற்சபை, நெறி முறை ஆணையம், தேர்தல் ஆணையம், மதியுரைக்குழு என்ற அலகுகளைக் கொண்டு இயங்குகின்றது.

இந்தநிலையில் நாடு கடந்த தமிழீழ அரசின் முதலாவது நாடாளுமன்ற மூன்றாண்டு பணிக்காலம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துடன் நிறைவடைகின்ற நிலையில் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கமைய எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதியுடன் நாடாளுமன்றத்தைக் கலைக்கவுள்ளதாக பிரதமர் வி.உருத்திருமாரன் அறிவித்துள்ளார்.

> எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதியுடன் நாடாளுமன்றத்தைக் கலைக்கவுள்ளதாக பிரதமர் வி.உருத்திருமாரன் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 3ஆம் திகதி இடம்பெற்ற நாடு கடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்றக் கூட்டத்திலேயே இந்த அறிவிப்பை பிரதமர் வி.உருத்திருமாரன் வெளியிட்டிருந்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதியுடன் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் தொடர்ந்து தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் அடுத்த நாடாளுமன்றத்தின் பணி ஆரம்பிக்கப்படும் வரை, தற்போதுள்ள அமைச்சரவையே செயற்படும் எனவும் பிரதமர் வி.உருத்திருமாரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பிரதமர் வி.உருத்திரகுமாரன் விடுத்த இந்த அதிகாரபூர்வ அறிவிப்பை அடுத்து, புலம்பெயர் தேசங்களெங்கும் தேர்தலுக்கான பணிகளை நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தல் ஆணையம் முடுக்கிவிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## தீவக வலய ஏழை மாணவர் 500 பேருக்கு உதவி

யாழ்ப்பாணம், ஓக.9

கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வசதியற்ற தீவக வலயப் பாடசாலை மாணவர்கள் 500 பேருக்கு கல்விக்கான உதவு தொகை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெற்றது.

தீவக வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோண்குயின்ரஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஒருவருக்கு தலா ரூபா 2500 வீதம் உதவித் தொகையை வழங்கினார்.

தீவக வலய சகல பாடசாலைகளில் இருந்தும் மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு உதவித் தொகைகளைப் பெற்றுக் கொள்வதற்கான இலவச போக்குவரத்துச் சேவைகளையும் கல்வித் திணைக்களமும் ஏற்பாடு செய்திருந்தது.

குறித்த நிகழ்வில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராசா, மாகாண கல்விப் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-7)

## மரண அறிவித்தல்

### திருமதி திலகவதி பூபாலசிங்கம்



கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் திலகவதி நேற்று (08.08.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ரவீந்திரன் மகேந்திரன் மற்றும் சுரேந்திரன் (சுவிஸ்), பாலசந்திரன், லதா (லண்டன்), குனேந்திரன் (லண்டன்), தெய்வேந்திரம், ராதா ஆகியோரின் அன்புத் தாயும், வசந்தா (சுவிஸ்), இந்திராணி (கனடா), கௌசல்யா, ஜெயந்தி, சுவர்ணலதா (லண்டன்), கோணேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மாமியும், சுவித்தா, சுஜிபன், ராஜினி, ரமேஸ், ரகு, நிறஞ்சன், நிலு, நிரோசன், நிச்சன், றோசான், திலகன், கபிலன், சந்தோஸ், சங்கீதா, ஜெருசன், கஜப்பிரின், சபரீசன், கிருஸ்ணவேணி, நிரோசன், சுதர்சன், சங்கீத் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணேஸ்வரன் லதா
00442089059183,
00447440034078

தகவல்: ராதா (மகள்)
T.P- 0776180613, 0212052126

## மரண அறிவித்தல்



மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தேவாலயவீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிதம்பரநாதர் நேற்று (08. 08.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தேவாலய வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்;
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது ஆலயத்தின் முன்னாள் போசகரும், ஆன்மிகவாதியும், எழுத்தாளரும் சாஸ்திர விற்பன்னரும் ஆகிய

### சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி

(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய புங்குடுதீவு தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி முருகப் பெருமானின் பாதக் கமலங்களை வேண்டுவோமாக

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

புங்குடுதீவு கிழக்கு
தல்லையபற்று சங்கரமூர்த்தி
முருகமூர்த்தி தேவஸ்தானம்
புங்குடுதீவு-12

ஆலய தர்மகர்த்தாவும்
ஆலய நிர்வாக சபையினரும்

## மரண அறிவித்தல்

### நடராசா கருணாகரன்

(சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர், பிரதேசசெயலகம் உடுவில்)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கருணாகரன் நேற்று(08.08.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா கனகம்மா தம்பதியின் அன்பு மகனும், சரோஜினிதேவி , சுலோசனாதேவி, மீராதேவி (பண்டத்தரிப்பு பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அப்புத் துரை(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), நித்தியா னந்தம்(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் நீர்ப்பாசனத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தூரன் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், வட மாகாண கல்வித்திணைக்களம்), சுபாகரன் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), சுதர்சினி, லோகேஸ்வரன்(கனடா), முகுந்தன் (பொலீஸ் உத்தியோகத்தர், யாழ்.), கரன்(கடற்றொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(08.08.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கணபதி வேலாயுதம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி வேலாயுதம் நேற்று (08.08.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி-நன்னி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, செல்லத்துரை, பொன்னுத்துரை, இலட்சுமி, பாக்கியம், வள்ளிப்பிள்ளை, பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரத்தினேஸ்வரி, தங்கராசா, வசந்தராசா, வசந்தகுமாரி, வனிதா, சாந்தினி, பாமா, நந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பஞ்சலிங்கம், சின்னத்துரை, முருகேசு, ஞானபாஸ்கரன், ராஜநீதன், செல்வமணி, சரோயாதேவி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 3 மணியளவில் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 6151962

(31206) (10,16)

## நயினை அம்மனின் வெள்ளிக்குடை எங்கே?

யாழ்ப்பாணம், ஓக.9
கடந்த 19 ஆம் திகதி நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு வருகை தந்திருந்த பக்தர் ஒருவர் வழங்கிய ரூபா 30 ஆயிரம் பெறுமதியான வெள்ளிக்குடை பூசைக்கு வைக்கப்பட்ட பின்னர் ஆலய அறங்காவலர் சபையிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.
அந்த வெள்ளிக்குடை காணாமல் போயுள்ளதாகத் தெரிவித்த அறங்காவலர் சபையினர், அது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகக் கூறினர். (ஒ-7)

## மயானத்துக்கு மண்டபம்

வரணி, ஓக. 9
வரணி இடைக்குறிஞ்சி மேற்குப் பகுதியில் உள்ள மயானத்துக்கு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த மண்டபம் கட்டப்பட்டுள்ளது. சுமார் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த மயான மண்டபம் கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நீண்ட காலமாக இங்கு மயான மண்டபம் இல்லாதிருந்த நிலையில், இந்த மண்டபம் கட்டப்பட்டதை பொதுமக்கள் வரவேற்றுள்ளனர்.
இடைக்குறிஞ்சி, கரம்பைக்குறிஞ்சி பிரதேச மக்களின் பாவனையில் இந்த மயானம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-122)

## வர்த்தகர்கள் மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஓக. 9
சாவகச்சேரி பகுதியில் வியாபார நிலையங்களில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர்கள் மூவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
யாழ்.மாநகர சபையின் கொழும்புத்துறை சுகாதார பரிசோதகர் எஸ்.நிஷாந்தன் தலைமையிலான குழுவினர் வர்த்தக நிலையங்கள் மீது நேற்று முன்தினம் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர். இதன்போது காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டது.
அவை கைப்பற்றப்பட்டதுடன் 3 வர்த்தகர்கள் மீது யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இதில் வர்த்தகர் ஒருவருக்கு ரூபா 10 ஆயிரமும் ஏனைய இருவருக்கும் தலா ரூபா 15 ஆயிரமும் தண்டப் பணமாக செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-7)

## இப்படியும் நடக்கிறது நம்மூரில்

யாழ்ப்பாணம், ஓக.9
தென்மராட்சி கிராமம் ஒன்றில் வாழும் இரண்டு குடும்பத்தவர்கள் தங்களுக்கு இடையே உருவாக இருந்த மோதல் சம்பவத்தை விட்டுக் கொடுப்பு மனப்பான்மையுடன் தீர்த்துள்ளார்.
இந்தச் சம்பவம் பற்றித் தெரியவந்ததாவது:
இந்த இரு குடும்பத்தவர்களின் வீடுகளும் அருகருகில் உள்ளன. ஒரு வீட்டில் உள்ள தண்ணீர் தொட்டியில் இருந்து வெளியேறும் நீர் பக்கத்து வீட்டு வளவில் விழுகிறது.
இவ்வாறு தண்ணீர் விழும் வீட்டுக்காரர் பிரச்சினையை உருவாக்காமல் அந்த இடத்தில்- தண்ணீர் விழும் இடத்தில் தென்னங்கன்று ஒன்றை வைத்துள்ளார்.
பக்கத்து வீட்டுத் தண்ணீரில் இந்தத் தென்னங்கன்று செழித்து வளர்ந்து வருகிறது.
இவர்களுக்குள் விட்டுக் கொடுக்கும் செயலை அனைவரும் பின்பற்றினால் பிரச்சினையே வராது. (ஒ-51)

## பிரசாரம், இசைக் கச்சேரிகளை பாடசாலை அருகே நடத்தத் தடை

### பரீட்சை நடப்பதால் ஒலிபெருக்கிக்கு கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 9
தற்போது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறுகின்ற காலமாதலால், பாடசாலைகளுக்கு அருகில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதோ, இசைக் கச்சேரிகள் போன்ற பரீட்சார்த்திகளுக்கு இடையூறு விளைவிக்கும் சகல நடவடிக்கைகளையும் கட்சிகள் கட்டாயம் தவிர்த்தல் வேண்டும்.
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறும் தினத்துக்கு முதல்நாளான எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 3 மணி தொடக்கம் மறுநாள் மதியம் 2 மணி வரை எந்தக்கட்சியும் எந்த வித பிரசார நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது என்றும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.
கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. 25 ஆம் திகதியன்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையும் நடைபெறவுள்ளது.
பரீட்சை எழுதும் மாணவர்களின் மன ஒருமைப்பாடு பாதுகாக்கப்படும் விதத்திலான அமைதியான சூழலொன்று பரீட்சை நிலையங்களின் அருகில் பேணப்படவேண்டும். மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் மூன்று மாவட்டங்களிலும் இந்த நடைமுறை பின்பற்றப்படல் வேண்டும் - என்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஒ-4)

## பயனாளிகளுக்கு பழ மரக் கன்றுகள்

யாழ்ப்பாணம், ஓக.8
வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் கொய்யா,தேசி, மாதுளைக் கன்றுகள் தற்போது யாழ்.பிரதேச செயலகத்தால் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. கிராம அலுவலர் பிரிவு ஒன்றில் 200 பயனாளிகள் என்ற அடிப்படையில் யாழ்.பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 28 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் மேற்படி பழமரக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன. (வ-7)



## கிராம அலுவலர் பிரிவுகளில் ‘கற்பகதரு’ சங்கங்கள்

வலி.வடக்கு, ஓக. 9
தென்னை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் கிராம அலுவலர்கள் பிரிவுகள் தோறும் தென்னையை அபிவிருத்தி செய்யும் முகமாக கற்பகதரு என்னும் பெயரில் சங்கங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை தென்னை அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.
இது தொடர்பான விவரங்கள் சுற்றறிக்கை மூலம் அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட தென்னை அபிவிருத்திச் சபையின் அலுவலர்கள், கிராம அலுவலர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு குறித்த சங்கங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.
குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் இத்தகைய சங்கங்களை அமைக்கும் நடவடிக்கைகள் பிரதேச செயலர்கள் பிரிவு ரீதியாக கிராம அலுவலர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக தென்னை அபிவிருத்தி அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (வ-86)


“தென்னையை அபிவிருத்தி செய்யும் முகமாக கற்பகதரு என்னும் பெயரில் சங்கங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை தென்னை அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

## சாவகச்சேரி நகர சபை மண்டபம் பாவனைக்கு

தென்மராட்சி, ஓக.9
சாவகச்சேரி நகர சபையின் நகர மண்டபம் விரைவில் பொதுமக்கள் பயன்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதி மூலம் 45 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நகர மண்டபம் சில வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் கையளிக்கப்பட்டதால் அவற்றை 10 மில்லியன் ரூபா செலவில் சபை நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு சபையால் முடிவு செய்யப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம் 2, 3 மில்லியன் ரூபா செலவிலான வேலைகள் விரைவில் ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்படவுள்ளன.
அதனைத் தொடர்ந்து பூர்த்தி செய்யப்படாதை நிலையில் காணப்படும் அனைத்து வேலைகளும் இந்த வருட இறுதிக்கும் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## 156 பேருக்குக் காச நோய்ச் சிகிச்சை கடந்த 7 மாதங்களில் மட்டும்

யாழ்ப்பாணம், ஓக. 9
யாழ்.மாவட்டத்தில் கடந்த 7 மாத காலப் பகுதிக்குள் 156 பேர் காச நோயால் பாதிப்படைந்துள்ளனர் என்று யாழ். மாவட்ட காசநோய் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.
புள்ளி விவரங்களின் அடிப்படையில் கடந்த 7 மாத காலப் பகுதிக்குள் மட்டும் 156 பேர் காச நோயால் பாதிப்படைந்து சிகிச்சை பெற்றுள்ளனர்.
இவ்வாறு சிகிச்சை பெற்றவர்கள் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்டு நுரையீரலில் காச நோய்த் தாக்கம் ஏற்பட்டவர்களும், சளியில் கிருமித் தொற்று ஏற்படாமல் நுரையீரலில் காசநோய்த் தாக்கம் ஏற்பட்டவர்களும், நுரையீரல் அல்லாத ஏனைய உறுப்புக்களில் காச நோய்த் தாக்கம் ஏற்பட்டவர்களும், என மூன்று பிரிவுகளாக காசநோய்த் தாக்கத்துக்கு




ஆளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.
இதற்கமைவாக கடந்த ஜனவரி மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்டவர்கள் 13 பேரும், சளியில் கிருமித் தொற்று ஏற்படாத 5 பேரும், ஏனைய உறுப்புகளில் கிருமித் தொற்று ஏற்பட்ட 2 பேரும் என 20 பேர் காச நோயாளர்களுக்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.
கடந்த பெப்ரவரி மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்டவர்கள் 5 பேரும், சளியில் கிருமித் தொற்று ஏற்படாத 8 பேரும், ஏனைய உறுப்புகளில் காசநோய்த் தாக்கம் ஏற்பட்ட 4 பேரும் என 17 பேர் காச நோய்க்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.
கடந்த மார்ச் மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்டவர்கள் 10 பேரும், சளியில் கிருமித் தொற்று ஏற்படாத 6 பேரும், ஏனைய உறுப்புகளில் காச நோய்த் தாக்கம் ஏற்பட்ட 4 பேரும் என 20 பேர் காசநோய்க்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.
கடந்த ஏப்ரல் மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்டவர்கள் 9 பேரும், சளியில் கிருமித் தொற்று ஏற்படாத 7 பேரும், ஏனைய உறுப்புகளில் காசநோய்த் தாக்கம் ஏற்பட்ட 8 பேரும், என 24 பேர் காச நோய்க்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.
கடந்த மே மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்ட 6 பேரும்,சளியில்கிருமித்தொற்று ஏற்படாத 10 பேரும், ஏனைய உறுப்புகளில் காசநோய்த் தாக்கம் ஏற்பட்ட 8 பேரும் என 24 பேர் காசநோய்க்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.
கடந்த ஜூன் மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்ட 9 பேரும், சளியில் கிருமித் தொற்று ஏற்படாத 13 பேரும், ஏனைய உறுப்புகளில் காச நோய்த் தாக்கம் ஏற்பட்ட 7 பேரும் என 29 பேர் காச நோய்க்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.
கடந்த ஜூலை மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்ட 15 பேரும், சளியில் கிருமித் தொற்று ஏற்படாத 6 பேரும், ஏனைய உறுப்புகளில் காசநோய்த் தாக்கம் ஏற்பட்ட 8 பேரும் என 29 பேர் காசநோக்கான சிகிச்சையை பெற்றுள்ளனர்.
இதனடிப்படையில் கடந்த 7 மாத காலப் பகுதிக்குள் 156 பேர் காச நோய்க்கான சிகிச்சையைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## புத்தூர் முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள்



அச்சுவேலி, ஓக. 9
புத்தூர் விடிவெள்ளி பாலர் முன்பள்ளிக்கு ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் லண்டன் வாசியொருவரால் வழங்கப்பட்டுள்ளன.
லண்டனில் வசிக்கும் நாகமுத்து மனோகரி புத்தூர் மேற்கில் உள்ள விடிவெள்ளி பாலர் முன்பள்ளி மழலைகளின் பயன்பாட்டுக்கென ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளார்.
மழலைகளின் பயன்பாட்டுக்கென புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு அரங்கில் விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்தி மழலைகள் விளையாடி வருகின்றனர். (ஒ-11)

# முடிவு மாறாது

## தெலுங்கானா குறித்து சோனியா காந்தி கருத்து



புதுடில்லி, ஓக.9
தெலுங்கானா மாநிலத்தை உருவாக்கும் அரசின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்றுதிட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி.

ஆந்திர மாநிலத்தைப் பிரித்து தெலுங்கானா மாநிலத்தை உருவாக்கும் முடிவை இந்திய மத்திய அரசு அண்மையில் வெளியிட்டது. அதையடுத்து கடலோர ஆந்திரா மற்றும் ராமயசீமா பகுதிகளில் அதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்களால் ஆந்திர மாநிலத்தின் இயல்பு நிலை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவது தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ள காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சோனியா காந்தியைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அப்போது கருத்துத் தெரிவிக்கும்போதே சோனியா காந்தி மேற்கண்டவாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

''ஆந்திராவை பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைக்கும் முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை. ஆந்திரா பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள், தெலுங்கானா மாநிலம் அமைய முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். நாட்டில் உள்ள எந்த பகுதி மக்களுக்கும் அநீதி ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நாங்கள் பதவியில் இருக்கவில்லை. அனைவருக்கும் நீதி கிடைக்க செய்வோம். இது குறித்து ஒரு குழுவை அமைத்துள்ளோம். அந்தக் குழுவிடமே உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்'' என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் சோனியா காந்தி.

சோனியா காந்தியின் இந்த கடும் தொனியிலான கருத்தால் தெலுங்கானா உருவாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

(ற)



இந்திய எல்லைக்குள் ஊடுருவிய பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இராணுத்தினருக்கு அஞ்சலி செலுத்தும் மக்கள்.

## இந்தியாவைப் பற்றி தெரியுமா ராகுலுக்கு?

### சுக்பீர் சிங் பாதல் காட்டம்

புதுடில்லி, ஓக.9
இந்தியாவைப் பற்றி ராகுல் காந்தி இன்னமும் புரிந்து கொள்ளவில்லை என்று காட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் சிரோமணி அகாலி தளத்தின் தலைவர் சுக்பீர் சிங் பாதல்.

அண்மையில் பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ராகுல் காந்தி, ''வறுமை என்பது மனநிலையைப் பொறுத்தது. உணவு, பணம் அல்லது மற்ற பொருள்கள் பற்றாக்குறை என்று அர்த்தம் அல்ல. ஒருவர் தன்னம்பிக்கையுடன் இருந்தால் அவரால் வறுமையைச் சமாளிக்க முடியும்'' என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள சுக்பீர் சிங் பாதல் ராகுல் காந்தியைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

''ராகுல் காந்தியின் கருத்து அவரது மனப்போக்கைப் பிரதிபலிக்கிறது. நாட்டையும் நாட்டு மக்களையும் இன்னும் அவர் புரிந்து கொள்ளவில்லை. சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் தாங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று விரும்புகின்றனர்.

இந்த உணர்வைக்கூட ராகுல் காந்தி புரிந்துகொள்ளாதது வியப்பாக உள்ளது. வறுமை, ஊழல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற வட்டத்திற்குள் நாட்டை சிக்க வைத்தது காந்தி குடும்பம் தான் என்பது அவருக்கு தெரியவில்லை'' என்று தெரிவித்துள்ளார் பாதல்.(ற)

## செரீப் – சிங் அடுத்தமாதம் சந்திப்பர்

புதுடில்லி, ஓக.9
அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அங்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப்பைச் சந்தித்துப் பேசுவார் என்று கூறப்படுகிறது. தற்போது இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் பதற்றம் குறித்தே இந்தக் கலந்துரையாடல் அமையும் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது

### வலியுறுத்துகின்றார் வைகோ

சென்னை, ஓக.9
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்திய அரசு பங்கேற்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ. இதுகுறித்து அவர் கூறுகையில்,

''ஈழப் பிரச்சினை குறித்து பல முறை இந்திய மத்திய அரசிடம் பேசியபோதும் அரசு அதனைக் கண்டு கொள்வதாக இல்லை.

ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசு இம்முறை பொதுநலவாய மாநாட்டை நடத்துகின்றது. அதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை வகிக்கின்றார். அந்த மாநாட்டை இந்திய அரசு



புறக்கணிக்க வேண்டும். தமிழர்களின் உணர்வுகளுக்கு இந்திய மத்திய அரசு மதிப்பளிக்க வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார் வைகோ.(ற)

Aum

RECEPTION INVITATION

Srmt Kalavathy Ammal Ratnasabapathykkurukkal - Maharajasri S.D. Ratnasabapathykkurukkal
Cordially Request the pleasure of your company with family and friend on the Occasion of the Wedding Reception
of their Daughter



**Sow R.Vedhanayaki** B.E.(Vijaya)
with
**Shri V.Venkiteswaran** M.Sc, B.Ed, PGD,SLM



*On Saturday 10th August 2013 from 3.00 p.m. at Maviddapuram Srikandaswamy Temple, Aatheenakartha's(Akrakaram)*

With Best Compliments From

*Shri&Srmt V.Sivaramakrishnan*
*Kerala,*
*South India.*



*Rajarajashri Nakuleswarakkurukkal,*
*Srmt Shanmugananthakkurukkal Nakuleshwary Ammal,*
*Maharajasri S.D.Ratnasabapathykkurukkal,*
*Shri R.Gnanaskandasharma,*
*Selvi R.Gurupriya.*

உ

**மாவை ஆதீனகர்த்தா வழங்கும் திருமண வரவேற்பு உபசார அழைப்பு**



மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசாமி கோயில் ஆதீனப் பேரரசு
மஹா ராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக்
குருக்கள் ஸ்ரீமதி
இரத்தினசபாபதிக்குருக்கள்
கலாவதியம்பாள் தம்பதியரின்
ஜேஸ்ட புத்திரி சௌபாக்கியவதி
**வேதநாயகி** B.E. (விஜயா)
அவர்களுக்கும்



தென்னிந்திய கேரளா,
சிவசாயுஜ்ய வெங்கடகிருஸ்ணன்
சிவசாயுஜ்ய வெ.கல்யாணி அம்பாள்
தம்பதியரின்
சிமந்தபுத்திரன் சிரஞ்சீவி
**வெ.வெங்கிடேஸ்வரன்**
M.Sc,B.Ed., PGD,SLM
அவர்களுக்கும்



அவர்களுக்கு திருவருள் துணை கொண்டு தென்னிந்தியா,தமிழ்நாட்டில் இனிதே நடந்தேறிய திருமண வைபவத்தை முன்னிட்டு,புதுமணத் தம்பதிகளை வரவேற்று உபசாரம் செய்ய மாவைக்கந்தன் அனுக்கிரகம் கைகூடி இருப்பதனால், நிகழும் விஜய வருடம் ஆடி மாதம் 26ஆம் நாள் [10.08.2013] சனிக்கிழமை மாலை 3.00 மணி தொடக்கம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வளாகத்தில் அமைந்துள்ள ''அக்ரஹாரம்'' எனப்படும் அதீனகர்த்தா இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறவிருப்பதனால், தாங்கள் தங்கள் இஸ்டமித்திர பந்துக்களுடன் குடும்ப சகிதம் முன்னதாகவே வருகை தந்து, புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து விருந்துபசாரத்தில் பங்குபற்ற வேண்டுமாய் இத்தால் அன்புடன் அழைத்து வரவேற்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்



ஸ்ரீ-ஸ்ரீமதி
V.சிவராமகிருஸ்ணன் தம்பதியர்,
கேரளா,
தென்னிந்தியா.

ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீமதி சண்முகநாதக்குருக்கள் நகுலேஸ்வரி,
மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக்குருக்கள்,
ஸ்ரீமதி கலாவதியம்பாள்,
ஷ.இ. ஞானஸ்கந்தசர்மா, செல்வி இ. குருப்பிரியா
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.(இலங்கை)
தொ.பே.: 021 321 0349

(C/10793)(5-6)

# நாய் கடித்தால் ஆயுள் தண்டனை

## ஆராய்கின்றது பிரிட்டன் அரசு

லண்டன், ஓக.9

வளர்ப்பு நாய் பிறரொருவருக்குக் கடித்தால் அந்த நாயின் உரிமையாளருக்கு குறைந்தது 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிப்பதற்கு ஆலோசித்து வருகின்றது பிரிட்டன் அரசு.

பிரிட்டனில் ஆண்டுதோறும் சுமார் 2 லட்சம் பேர் நாய் கடிக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் சிலர் உயிரிழக்கும் அபாய மும் நேர்கிறது. கடந்த ஆண்டு களில் 16 பேர் நாய் கடித்து உயிரிழந்துள்ளனர். அதையடுத்து நாய்களை பொது இடங்களில் அலைய விடும் உரிமையாளர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்று பொதுமக்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி ஒரு நபரை வளர்ப்பு நாயொன்று கடித்து காயப்படுத்தினால், அந்த நாயை வளர்க்கும் உரிமையாளருக்கு 2 ஆண்டு சிறை தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படுகிறது.

இந்த சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு காயத்தை ஏற்படுத்திய நாயின் உரிமையாளருக்கு அதிக பட்சமாக 10 ஆண்டு சிறை தண்டனையும், உயிரிழப்பை ஏற்படுத்தும் நாயின் உரிமையாளருக்கு அதிகபட்சமாக ஆயுள்தண்டனை யும் வழங்குவதற்கு வகை செய்யும் புதிய சட்டத்தை இயற்ற பிரிட்டன் அரசு பரிசீலித்து வருகிறது.

இதுதொடர்பாக அடுத்த மாதம் முதல் வாரத்தில் இறுதி முடிவு எட்டப்படும் என தெரிகிறது. நாய்க் கடியால் பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ செலவுக்கு மட்டும் பிரிட்டன் அரசு ஆண்டுதோறும் 30 லட்சம் பவுண்ஸ் செலவிட்டு வருகிறது. (ற)




கிழக்கு ஆபிரிக்காவில் எந்நேரமும் பரபரப்பாக காணப்படும் விமான நிலையங்களில் கென்யாவின் தலைநகரான நைரோபியில் உள்ள ஜோமோ கென்யாட்டா சர்வதேச விமான நிலையமும் ஒன்று. அங்கு நேற்றுப் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. விமான நிலையத்தில் பெரும்பாலான பகுதிகளுக்குப் பரவியுள்ள தீயைக் கட்டுப்படுத்த முடியாது தீயணைப்பு வீரர்கள் திணறி வருகின்றனர். இதுவரை தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத நிலையில் சேத விவரங்கள் தெரியவரவில்லை.

# ஈராக்கில் தொடர் தாக்குதல்கள்

## 41 பேர் சாவு

பக்தாத், ஓக.9

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 6 இடங்களில் தொடர் கார்க் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதில் மொத்தமாக 41 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

சந்தைககள் மற்றும் கடை வீதிகளில் இத்தாக்குதல்கள் நடந்தன. பாக்தாத்தின் வட மேற்கில் உள்ள ஒரு கிராமத்தில் நடந்த கார்க் குண்டுத் தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர்.

வர்த்தக நகரமான கார்ரடாவில் 5 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயம் அடைந்தனர். அது போன்று புறநகர் பகுதியான நாகர்வான், அன்பாகியா ஆகிய இடங்களில் நடந்த தாக்குதல்களில் 10 பேர் உயிரிழந்தனர்.

கார் குண்டு தாக்குதல்களில் மொத்தம் 41 பேர் உயிரிழந்தனர். 100 பேர் காயம் அடைந்தனர். (ற)

# ரஷ்யா மீது அதிருப்தி

## கூறுகின்றார் அமெரிக்க ஜனாதிபதி

வோஷிங்டன், ஓக.9

அமெரிக்காவின் உளவுத் திட்டங்களைப் பகிரங்கப்படுத்திய எட்வேர்ட் ஸ்நோடனுக்கு அடைக்கலம் வழங்கியமை குறித்து ரஷ்யா மீது கடும் அதிருப்தியில் இருக்கின்றேன் என்று கூறியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

ரஷ்யாவில் நடைபெறவுள்ள ஜி-20 மாநாட்டில் கலந்துகொள்வது தொடர்பில் கருத்துக் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார் ஒபாமா.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில் "இரு நாடுகளிடையேயும் கைதிகள் பரிவர்த்தனை ஒப்பந்தம் இல்லை என்பதை



நான் ஏற்றுக் கொள்கின்றேன். எனினும் ஒருநாட்டின் சட்டங்களை மற்றைய நாடு மதிப்பது இருநாடுகளினதும் வழக்கமாக இருந்தது. எனினும் ரஷ்யா தற்போது அதை மீறியுள்ளது. ஜி-20 மாநாட்டில் கலந்து கொள்வேன். ஏனெனில் உலகின் முன்னணி பொருளாதார சக்தியாகத் திகழும் அமெரிக்கா அதில் கலந்து கொள்வது அவசியம் என்பதால் அங்கு செல்கிறேன். எனினும் ரஷ்ய ஜனாதிபதி புடினைச் சந்திப்பது சந்தேகமே" என்று தெரிவித்துள்ளார். (ற)

# உமது கணவருடன் எனக்குத் தொடர்பு

## கென்னடியின் மனைவியிடமே கூறினாராம் மர்லின் மன்றோ

நியூயோர்க், ஓக.9

கென்னடியின் மனைவியைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட நடிகை மர்லின் மன்றோ 'உமது கணவருக்கும் எனக்கும் இரகசியத் தொடர்புண்டு" என்று தெரிவித்திருந்தார் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் எப்.கென்னடிக்கும், மறைந்த ஹொலிவூட் நடிகை மர்லின் மன்றோவுக்கும் இடையே நெருக்கமான உறவு இருந்து வந்தது. ஜோன் கென்னடி தன்னைத் திருமணம் செய்து கொள்வார் என்றே மர்லின் மன்றோ கருதி வந்தார். மர்லின் மன்றோவுடனான தொடர்பால் ஜோன் கென்னடிக்கும் அவருடைய மனைவி ஜாக்குலின் கென்னடிக்கும் இடையே கருத்து வேறுபாடு எழுந்தது.

கென்னடிக்கும் அவரது மனைவிக்கும் இடையே நிலவிய முரண்பாடுகள் குறித்து தற்போது கிறிஸ்டோபர் ஆண்டர்சன் என்பவர் புத்தகம் ஒன்றைஎழுதி வெளியிட்டுள்ளார். அதில் புதிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

"ஒருநாள், மர்லின் மன்றோ ஜோன் கென்னடியின் மனைவியைத் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு கென்னடியுடனான தமது தொடர்பை வெளிப் படையாக கூறியுள்ளார். மனைவியை விட்டு பிரிந்து வந்து தன்னுடன் வாழ கென்னடி சம்மதித்து விட்டதாக மர்லின் மன்றோ தெரிவித்தார். அதற்கு கென்னடியின் மனைவி ஜாக்குலின் அலட்டி கொள்ளவில்லை. நான் விலகத் தயார். அப் புறம் நீதான் சிரமப்படப் போகி றாய் என்று பதில் அளித்தார். இந்த தகவலை ஜோன் கென்னடியின் சகோத ரியை மணந்த மறைந்த நடிகர் பேட்டர் லாபோர்டு தெரிவித்தார்" என்று அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் கென்னடியும் அவருடைய மனைவியும் போதை ஊசி போட்டுக் கொள்ளும் பழக்கம் கொண்டவர்கள் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ற)



# கவனிக்க மறுத்தார் காதலி; குழந்தையை விற்ற காதலன்

## அமெரிக்காவில் விநோத சம்பவம்

நியூயோர்க், ஓக.9

காதலி தன்னை கவனிக்காததால் அவர் மூலம் பிறந்த பெண் குழந்தையை விற்கத் திட்டமிட்டவர் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

அமெரிக்காவை சேர்ந்தவர் 23 வயதுடைய பால் மார்க்கஸ். இவர் 19 வயதுப் பெண்ணொருவரை காதலித்து வந்தார். இவர்களுக்கு இரண்டு மாத பெண் குழந்தை உள்ளது.,

குழந்தையைக் கவனிப்பதில் காதலி அதிக ஆர்வம் காட்டி வந்துள்ளார். தன்னை கண்டு கொள்ளாத காதலி மீது கோபம் கொண்ட மார்க்கஸ், தன்னுடைய இரண்டு மாதக் குழந்தையை விற்க முடிவு செய்தார்.

இது தொடர்பாக அவர் சில பத்திரிக்கைகளில் குழந்தையின் விலை 6,000 ரூபா என விளம்பரம் கொடுத்திருக்கிறார். அத்துடன் காதலியின் தொலைபேசி எண்ணையும் கொடுத்திருந்தார்.

இந்த விளம்பரத்தை பார்த்து அதிர்ச்சியடைந்த பொலிஸ் அதிகாரிகள் மார்க்கசின் காதலியிடம் விசாரணை நடத்தினர். இவ்விசாரணையில் மார்க்கஸ் தான் இந்த விளம்பரத்தை கொடுத்துள்ளார் என்பது உறுதியாகியது.

அதையடுத்து மார்க்கஸ் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீதான குற்றம் நிருபிக்கப்பட்டால் ஓராண்டு சிறைத் தண்டனை கிடைப்பது உறுதி என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)

# அரை நிர்வாண விளம்பரம்: அலறியடித்து ஓடும் மக்கள்



ஜேர்மனில் கலைஞர் ஒருவர் அரை நிர்வாணமாக 'போஸ்' கொடுத்து தன்னுடைய கலைக்கு விளம்பரம் ஏற்படுத்தும் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனில் உள்ள ஆர்மினியன் என்னும் இடத்தில் பிறந்த இவர் கலைஞரான பாதசயான். இவர் கலையின் மூலம் சமூக நெறியில் சவால்களை சந்திக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த அரைநிர்வாண விளம்பரத்தை கொடுத்து வருகிறார். இதற்காக ஜேர்மனில் உள்ள மக்கள் நடமாட்டம் உள்ள சில இடங்களை தேர்ந்தெடுத்து அவர்கள் முன்னிலையில் நின்று விளம்பரப்படுத்துகிறார். இந்த விளம்பரங்களால் ஏராளமானோர் கூச்சலிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்று விடுகின்றனர். மேலும் இந்த விநோத விளம்பரம் பெர்லின் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

உதயன்
09/08/2013


# சேவை நலன் பாராட்டு



உயர்திரு
**இ. சிவசாமி**
அலுவலகப் பணியாளர்
தரம் -I

மட்டுவில் சந்திரபுரஸ்கந்தபுரம் தந்த சிவசாமியே
கட்டுறுதியோடு கடமைகளைக் கண்ணியமாய்க் காத்தீர்
புன் முறுவலோடு புதுப்புது நகைச்சுவைக் கதைகள்
என்றுள மகிழ்ந்திட எமக்கெல்லாம் எடுத்துரைத்தீர்
ஆறுபத்தகவை கண்ட கமதனில் ஆறலானீர்
ஆறு நாலாண்டு சேவை நயந்து நாம் வாழ்த்துகிறோம்.

1. யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி
   01.04.1982 - 07.10.1990
2. கோட்டக் கல்வி அலுவலகம்
   08.10.1990 - 31.09.1998
3. வலயக் கல்வி அலுவலகம்
   01.10.1998 - 10.08.2013

BEST WISHES

ஊழியர் நலன்புரி கழகம்
வலயக் கல்வி அலுவலகம்
தென்மராட்சி.

(C/2731)(10,16,14)


## இந்தியா செல்லும் இலங்கையருக்கு விஸா கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு,ஓக.9

இந்தியாவுக்குச் சுற்றுலாப் பயணங்களை மேற்கொள் ளும் இலங்கையர்களிடமிருந்து அறவிடப்படும் வீஸா அனுமதிக்கான கட்டணம் நூற்றுக்கு 300 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய விஸாக் கட்டணம் கடந்த 29 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்று இலங்கையி லுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு விஸாக் கட்ட ணங்கள் அதிகரிக்கப்பட் டமை உல்லாசப் பயணிகள் மற்றும் வர்த்தகத் துறை யினர் ஆகியோருக்குத் தாக்கங்களை ஏற்படுத்தும் என்று உல்லாசப் பயண, வர்த்தகத் துறையினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது சம்பந்தமாக இந்தியத் தூதரக அலுவலகத்திடம் வினாவப்பட்ட போது அது இந்திய வெளிவிவகார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியிலான தீர்மானம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22)

## போதையில் வாகனம் செலுத்திய தேரருக்கு சிறை

கொழும்பு,ஓக.9

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் சாரதி அனுபத்திரமின்றி வாகனத்தை செலுத்தியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளியாக இனங்காணப்பட்ட தேரரொரு வருக்கு 13 ஆயிரத்து 500 ரூபா தண் டமும் ஒரு வருடம் ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தண்டனையை மஹவ பிரதான நீதிவான் ருவினி ஜயவர்தன விதித்துள்ளார்.

தொம்பே விகாராதிபதி இத் தோல பஞ்ஞானந்த தேரருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


### தவறிவிட்டது

இரத்தினபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த கனகசிங்கம் அமுதன் என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம், ஆள் அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், வரி பதிவுச் சான்றிதழ் என்பன அடங்கிய பேர்ஸ் ஸ்கந்தபுரத்துக்கும் முக்கொம்பனுக்கும் இடையில் தவறிவிட்டன.

தொடர்பு: 077 1623879

### வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ் நகரின் மத்தியில் வசிக்கும் கணவன் மனைவி வேலைக்குச் செல்லும் குடும்பத்திற்கு வீட்டு வேலைகளைச் செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் ஒருவர் தேவை.
யாழ் நகர் எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு:S. Dishanthan
077 968 8006

(C/10800) (8)

உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும் (யோவான் 16:20)

# ஆசீர்வாதப் பெருவிழா



Rev. யோன் பாலகுமார்
கனடா
(செய்தியாளர்)

தேவனால் வல்லமையாய்
பயன்படுத்தப்படும்
தேவ ஊழியர்கள்,
தேவசெய்தி கொடுத்து
விடுதலைக்காக ஜெபிப்பார்கள்.



சுவிசேஷகர்: ஜொய்சி மயில்வாகனம்
லண்டன்
(செய்தியாளர்)

இடம் :- பிளாக் றோட்,
புளியடி, சங்கானை.

காலம் :- 10th, 11th திகதி, ஓகஸ்ட் 2013
சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை

நேரம் :- மாலை 4.30 மணிக்கு

தீராத வியாதிகள், பிசாசின்பிடி, கவலை, கண்ணீர், கஸ்ரம் யாவற்றிலிருமிருந்து விடுதலை பெற அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்

யாழ் கிறிஸ்தவ சபைகள், ஸ்தாபனங்களின் ஐக்கியம்.

(30348)(5,6)

# புலமைச்சுடர் நடத்தும் தரம் 5 மாணவர்களுக்கான வருடாந்த இலவசக் கருத்தரங்கு



காலம் :
10/08/2013 (சனிக்கிழமை)

யாழ் - கோப்பாயில்

இடம் : கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருமண மண்டபம்

நேரம் : காலை 09.00 மணி தொடக்கம் 02.00 மணிவரை

வளவாளர்கள்

பி. அம்பிகைபாகன், ரீ. பேரின்பராஜா
(மூத்த பிரபல ஆசிரியர்)

புலமைப்பரிசில் பரீட்சை எழுதப்போகும் அனைத்து மாணவச் செல்வங்களையும் அழைக்கின்றோம்.

கல்விச்சுடர் வெளியிடும் மாதிரி வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இட நெருக்கடிகளையும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் 09/08/2013 முன்னதாக 077 9122918 / 077 0711850 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முற்பதிவுகளை செய்துகொள்ளவும். பாடசாலை ரீதியில் பங்குகொள்ளும் மாணவர்கள் பாடசாலைஊடாக முற்பதிவினை மேற்கொள்ளமுடியும்.

ஒழுங்கமைப்பு

மதுரம் இன்ஸ்ரிடியூட் (டச்சு வீதி, கோப்பாய் தெற்கு)


கற்பகாஸ் கலாசார கழகம் (கோப்பாய் தெற்கு)

முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் (கோப்பாய் தெற்கு)

தொடர்புகளுக்கு
011 5738855 / 071 6850005

ஊடக அனுசரணை உதயன்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18.02.1941
உதிர்வு 18.07.2012

திதி: சதுர்த்தசி

அமரர்
**கந்தையா கார்த்திகேசு**

நீர்க்குமிழி போன்றது வாழ்க்கை
என்றாலும் உங்கள் நினைவலைகள்
நெருப்பாய்க் கனக்கின்றதே!
சடுதியாய் எம்மைவிட்டுப் பிரிந்து
மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டீரே!
விண்ணுலகம் சென்ற
எமது தெய்வமே விரும்பி ஓர்
விண்ணப்பம் வேண்டுகின்றோம்
இன்னுமோர் பிறவி எமக்குண்டெனில்
உங்களுக்கே பிள்ளைகளாய் பிறந்திட
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
வலிக்கண்டி, குடத்தனை.

## மாநகர சபையின் யாழ்.விருது மரியசேவியர் அடிகளாருக்கு



யாழ்ப்பாணம், ஓக.9

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நல்லூர் வருடாந்தப் பெருவிழாவையொட்டி சமய கலாசார சமூகப் பணிகளில் சிறந்து விளங்கும் ஒருவருக்கு வழங்கும் யாழ். விருது இம்முறை திருமறைக் கலாமன்ற அமைப்பாளர் வண. மரியசேவியர் அடிகளாருக்கு வழங்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாநகராட்சிமன்ற ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான எஸ்.பிரணவநாதன் தலைமையில் நடைபெற்ற சமயவிவகாரக் குழுக் கூட்டத்தில் சமயம், சமூகம், கலாசாரத்துக்குத் தொண்டாற்றிய பிரமுகர்கள் குறித்து ஆராயப்பட்டு வண.மரியசேவியர் அடிகளாரின் பெயர் விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது.

அடிகளாரின் சேவைகளுக்காக உயர் விருதான யாழ். மாநகர சபையின் யாழ். விருது அவருக்கு வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள நல்லூர் குமரன் 21 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டின்போது இந்த விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

# மீள்குடியமர்ந்த இடங்களுக்கு விரைவில் பஸ் சேவைகள்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக.9

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்வு செய்யப்பட்டு இதுவரை பஸ் சேவைகள் இடம்பெறாத பிரதேசங்களுக்கு விரைவில் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படும். பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவையை இலகுபடுத்துவதற்காக பஸ் சேவைகள் விரைவுபடுத்தப்படவுள்ளன என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலகம் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் பயணிகள் சேவைக்கான பஸ் வழி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுவருகிறது. சேவை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் 643 பஸ்களுக்கு வழி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளன. எனினும் 520 பஸ்கள் பயணிகள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் தற்போது மீள்குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களுக்கு விரைவில் பஸ் சேவை ஆரம்பிக்கப்படும். கிராம மட்டத்தில் போக்குவரத்துக் சேவையை விரிவுபடுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும் என்றார்.

இந்த நிகழ்வில் சமயக்குருமார்கள் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-14)

## நாய்க் கடிக்கு சிகிச்சை 50 பேருக்கு மேல்

### தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒரு வார காலத்தில் மட்டும்

அளவெட்டி, ஓக.9

கடந்த ஒரு வாரத்துக்குள் நாய்க்கடிக்கு இலக்காகி தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளோர் எண்ணிக்கை ஐம்பதைத் தாண்டியுள்ளது.

இதன்படி முதலாம் இரண்டாம் திகதிகளில் மட்டும் 30 பேர் நாய்க்கடிக்கு இலக்காகி அதற்கான தடுப்பூசி மருந்துகள் ஏற்றியுள்ளனர்.

நாய்க்கடிக்கு இலக்காகி வைத்தியசாலை வருவோருக்கு ஏ.ஆர்.வி, ஏ.ஆர்.எஸ். தடுப்பு மருந்துகள் ஏற்றப்பட்டு உரிய விளக்கங்களும் அளிக்கப்படுவதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

இதேவேளை கட்டாக்காலி நாய்களால் கடியுண்டு சிகிச்சை பெற்றவர்களே இவர்களில் அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-36)

# கைதடியில் நடைபெற்ற மாகாண கைத்தொழில் கண்காட்சி




குருநகர், ஓக. 9

வடமாகாண உள்ளூராட்சி, நிவாரண மற்றும் புனர்வாழ்வு கூட்டுறவு, கிராம அபிவிருத்தி கைத்தொழில் சமூக சேவைகள் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் மாகாண கைத்தொழில் 2013 கண்காட்சி நேற்று முன்தினம் புதன்கிழமை கைதடி நவீல்ட் செவிப்புலன் கட்புலனற்றோர் பாடசாலையில் நடைபெற்றது.

வடமாகாண அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இந்தக் கண்காட்சியை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமாகாண அமைச்சின் பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன், சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.இரவீந்திரன், திணைக்களத் தலைவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் கிராமிய அபிவிருத்தி திணைக்களம், தொழிற்திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. (வ-51)

# குடும்ப பொறுப்புக்களைச் சுமந்தவாறு தவிக்கும் விதவைகளுக்கு உதவுங்கள்

### மகளிர் விவகார அமைச்சருக்குக் கடிதம்

நாட்டில் இடம்பெற்ற கொடிய போர் காரணமாக வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் கணவனை இழந்த நிலையில் குடும்பப் பொறுப்புக்களைச் சுமந்துகொண்டு தவிக்கும் விதவைகள் பிறருடைய உதவியின்றி சொந்தக் காலில் நிற்பதற்கு வசதியாக வாழ்வாதார உதவிகளை வழங்குமாறு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சரைக் கோரியுள்ளார் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன்.

அவர்களது வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தித்தர வேண்டிய பொறுப்பு தங்களுடைய அமைச்சின் கைகளிலேயே தங்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவு'' என்னும் தலையங்கத்தில் தவிசாளரால் மேற்படி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மேற்படி விடயம் தொடர்பாக 10.07.2013 அன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் தங்களுடன் நேரடியாக உரையாடியதற்கு அமைவாக விதவைகளின் நிலைப்பாடு குறித்து தங்களின் கவனத்துக்கு அறியத் தருகின்றேன்.

நாட்டில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்று வந்த கொடிய போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி முடிவுற்றதைத் தொடர்ந்து குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்றவர்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரத் தொடங்கினர். போர் வடுக்களினால் பல வகைகளிலும் பாதிக்கப்பட்ட மக்கள் அங்கவீனர்களாகவும் உடல், உள ரீதியான தாக்கத்துக்கு உட்பட்டவர்களாகவும் தமது உறவுகளை இழந்தவர்களாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

போரினால் குறிப்பாக பெண்களே அதிகமாகத் தாக்கத்துக்குள்ளானார்கள் என்பது புள்ளி விவரத்தின்படி தெரிய வந்துள்ளது. யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல ஆயிரக்கணக்கான பெண்கள் கணவன்மாரை இழந்து பிள்ளைகளை இழந்தும் விரக்தி நிலைக்குள்ளானார்கள். மனநிம்மதியின்றி, வாழவழியின்றி, வருமானமின்றி விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு தங்களுடைய அமைச்சின் கையிலேயே தங்கியுள்ளதாகவே நான் கருதுகின்றேன்.

இந்த வகையில் எமது வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் போரினால் கணவர்மாரை இழந்த ஏறத்தாழ 140 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்கின்றனர்.

இவர்கள் உரிய வசதி வாய்ப்பற்ற நிலையில் பல்வேறு சிரமங்கள் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் பிறருடைய உதவியின்றி சொந்தக் காலில் வாழக்கூடிய வகையில் உதவித் திட்டங்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (ஒ-115)

## சிறுகைத்தொழில் உற்பத்திகள் ஏனைய மாவட்டங்களுக்கும்

### வடமாகாண பிரதம செயலாளர் கருத்து

குருநகர், ஓக.9

வடமாகாணத்தில் சிறுகைத்தொழிலாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு அவர்களது உற்பத்திகள் ஏனைய மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லக் கூடிய வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கைதடி நவீல்ட் பாடசாலையில் நேற்று முன்தினம் ஆரம்பமான வடமாகாண கைத்தொழில் கண்காட்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய வடமாகாண அமைச்சின் பிரதமசெயலாளர்திருமதிரமேஸ் விஜயலட்சுமி இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாண அமைச்சின் செயலாளர் க.வரதீஸ்வரன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

கடந்தகாலங்களைப்போலவே இந்த வருடமும் இந்தக் கண்காட்சி சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கிராம மட்டத்தில் செயற்படும் சிறுகைத்தொழிலாளர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கைத்தொழிலாளர்கள் தேசிய மட்டத்திலும் உதவிகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கிராம மட்டத்தில் வறுமைக் கோட்டில் வாழும் மக்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நடவடிக்க எடுக்கப்படும் என்றார். (வ-51)



உதயன் 09/08/2013

# தமிழ்த் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா திருமலையில்

திருகோணமலை, ஓக.9
தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை திருகோணமலையில் நடத்துவதற்கு திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம் பிள்ளையின் தலைமையில் அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு தமிழ் தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு தமிழ்ப் பண்பாட்டுச்சபை என்ற பெயரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் உதவித் தலைவராக ஓய்வுபெற்ற மேலதிக அரச அதிபர் என். புவனேந்திரன், செயலராக மலைமுரசு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீ.நாணேஸ்வரன், பொருளாளராக மக்கள் வங்கியின் பிரதான கிளை யின் முகாமையாளர் கே.செல் வராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



இரண்டு நாள்கள் நடைபெறவிருக்கும் பண்பாட்டு நூற்றாண்டு விழாவில், ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் ஆய்வுச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

அவற்றின் ஒருங்கிணைப்பாளர்களாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக பீடாதிபதி சி.ரகுராம், அருட்தந்தை மதுராங்கன் குரூஸ் ஆகியோர் செயற்படுவர்.

அடிகளாரின் நினைவுமலர், காணொலி தயாரிப்பு பணிகளில் கலாசார உத்தியோகத்தர் வி.குணபாலாவும், அருட்தந்தை அருள்வரதனும் ஈடுபடுவர்.

திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் ந.விஜேந்திரனின் வழிகாட்டலில் கலை நிகழ்வுகள் தயாரித்து மேடையேற்றப்படும். (ச-40)

# கிழக்கு மாகாணத்தில் இரு நோன்புப் பெருநாள்

## நேற்றும் இன்றும் கொண்டாட்டம்



நித்தவூரில் நடைபெற்ற பெருநாள் தொழுகை

பெருந் தொகையான ஆண்களும், பெண்களும் பெருநாள் தொழுகையில் பங்கு கொண்டனர்.



கிண்ணியாவில் நடைபெற்ற பெருநாள் தொழுகை

அம்பாறை, ஓக.9
கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் முஸ்லிம்களில் ஒருசாரார் நேற்று வியா ழக்கிழமை நோன்புப் பெரு நாளைக் கொண்டாடினர்.

இவர்கள் பொதுமைதானங்களில் நேற்று பெருநாள் குத்பா பிரசங்கத்துடன் பெருநாள் தொழுகையையும் நடத்தினர்.

இதேவேளை பெரும்பாலான முஸ்லிம் பிரதேசங்களில் நோன்புப் பெருநாள் கொண்டாடப்படவில்லை.

இந்தப் பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் மக்கள் கொழும்பு பிறைக் குழுவின் தீர்மானத்துக்கு அமைய இன்று வெள்ளிக்கிழமை பெருநாளைக் கொண்டாடுவதுடன், நேற்று முப்பதாவது நோன்பையும் நோற்று நிறைவு செய்தனர்.

**நிந்தவூரில்**

இதேவேளை நிந்தவூர் ஜாமி உத்தௌஹீத் ஜம்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில், நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் நோன்புப் பெருநாள் தொழுகையும், பெருநாள் குத்பா பிரசங்கமும் நடத்தப்பட்டது.

அஷ்ஷெய்க் ஜெஸ்ரலி குத்பா பிரசங்கத்தையும், பெருநாள் தொழுகையையும் நடத்தி வைத்தார்.

பெருந் தொகையான ஆண்களும், பெண்களும் பெருநாள் தொழுகையில் பங்கு கொண்டனர். (ச-30)

## மாகாணசபை உறுப்பினர் படுகாயம்

மட்டக்களப்பு,ஓக.9
கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

மன்னாரில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வாகனத்தில் வரும்போது இடம்பெற்ற விபத்திலேயே அவர் படுகாயமடைந்துள்ளார்.

வேகமாக வந்த வானின் குறுக்காக நாய் பாய்ந்ததால் வானில் நாய் அடிபடாமல் தடுக்க முனைந்த போது வானில் பின்புறமாக இருந்த உறுப்பினர் முன் பக்கமாகவிருந்த இருக்கையில் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்தில் மாகாண சபை உறுப்பினரின் வாய்ப்பகுதியில் கடும் காயம் ஏற்பட்டுள்ளதுடன் அதற்குச் சத்திர சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது. (ச)

## அக்கரைப்பற்றில் நிலம் திடீரென கீழிறங்குகிறது

அம்பாறை,ஓக.9
அக்கரைப்பற்று பிரதான வீதியில் அமைந்துள்ள தனியார் மரத்தளபாட நிலையம் அமைந்திருந்த பிரதேசத்தின் நிலப்பகுதி தாழ்வாக கீழிறங்கிக் கொண்டிருப்பதனால் பதற்ற நிலை ஏற்பட்டது.

கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தின் கீழ் தளத்தில் போடப்பட்டிருந்த தரை ஓடுகள் மேலே கிளம்பிய வண்ணம் நிலப்பகுதி தாழ்ந்து கொண்டு சென்றது. இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த நிறுவனம் மூடப்பட்டதுடன் அங்கு பணியாற்றிய ஊழியர்களும் வெளியேற்றப்பட்டனர். இதுகுறித்து ஆராய புவியியல் சரித நிபுணர்கள் வரவழைக்கப்படவுள்ளனர் [illegible] ஒருவர் தெரிவித்தார். (ச)

# மாணவர் இடைவிலகலை தவிர்க்க துண்டுப் பிரசுரம்

## திருமலையில் விழிப்புணர்வு



ஒவ்வொரு பிள்ளையும் தம்மை விருத்தி செய்வதற்கும் பொறுப்புள்ள பெரியவர்களாக வளரவும் அவர்களுக்கு கல்வியைப் புகட்டுவது பெற்றோரது கடமையாகும்.

யாழ்ப்பாணம், ஓக.9
திருகோணமலை மாவட்ட திருமுழு ஆற்றல் மேம்பாட்டு மையத்தால் மாவட்டத்தில் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகுவதைத் தவிர்ப்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

2012 ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின் அடிப்படையில் சராசரியாக 12 மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகி வருகின்றனர்.

இலங்கையில் 25 மாவட்டங்களிலும் கடந்த வருட பரீட்சைப் பெறுபேறுகளில் திருகோணமலை 23 ஆவது இடத்தில் உள்ளது.

5 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய பிள்ளைகள் பாடசாலைக்கு அனுப்பப்பட வேண்டும். இதனை மீறும் பெற்றோர்கள் சட்டத்தின் முன் குற்றஞ் செய்தவராகக் கருதப்படுவர்.

ஒவ்வொரு பிள்ளையும் தம்மை விருத்தி செய்வதற்கும் பொறுப்புள்ள பெரியவர்களாக வளரவும் அவர்களுக்குக் கல்வியைப் புகட்டுவது பெற்றோரது கடமையாகும்.

[illegible] கிராம ரீதியாக, சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இடைவிலகும் மாணவர்களைக் கண்காணிப்புச் செய்தல் வேண்டும்.

பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் தொடர்பான விவரங்கள் மற்றும் குடும்ப நிலைமைகளை ஆராய்தல், பெற்றோர்களுடன் கலந்துரையாடல் செய்தல்,

கல்விக்கு தேவையான உதவிகளை வழங்க முன்வருதல். உள ஆற்றுப்படுத்தல் மேற்கொள்ளல்.

பாடசாலைக்கு செல்லக் கூடிய ஆர்வத்தை ஏற்படுத்தல்,

போன்ற தகவல்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் கிராம ரீதியாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ச-14-40)



கதிர்காமம் உற்சவம் ஆரம்பமாகியுள்ளதால் கிழக்கில் பாதயாத்திரையாக செல்லும் பக்தர்கள் தொகை அதிகரித்துள்ளது. மட்டக்களப்பு அக்கரைப்பற்று பிரதான வீதி வழியே பக்தர்கள் பாதயாத்திரையாகக் கதிர்காமம் செல்வதைக் காணலாம். (ச-30)

# கிழக்கில் 'ஜெய்க்கா' திட்டத்தினால் 39 குழாய் கிணறுகள் அமைப்பு

திருகோணமலை, ஓக.9
கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஊடாக ஜெய்க்கா திட்டத்தின் மூலம் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் 39 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்கென ஜப்பான், சர்வதேச தொழில்நுட்பவர் "ஜெய்க்கா" எனும் கட்டமைப்பினூடாக 764 மில்லியன் ஜப்பான் ஜென்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

அதற்கமைய திருகோணமலையில் 8 திட்டங்களூடாக 7 குழாய் கிணறுகளும் அம்பாறையில் 6 திட்டங்களூடாக 25 குழாய் கிணறுகளும், மட்டக்களப்பில் 8 திட்டங்களூடாக 7 குழாய்க் கிணறுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

கிழக்கு மாகாண கிராமங்கள் சிலவற்றில் குடிதண்ணீர் தட்டுப்பாடுகள் தற்போது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

## ஜப்பானிய இளவரசி இலங்கை வருகை

கொழும்பு,ஓக.9

ஜப்பானிய இளவரசர் தக்கமடோ மற்றும் இளவரசி தக்கமடோ ஆகியோரின் மூத்த மகளான இளவரசி சுகுக்கோ இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி இலங்கை வருகைதரும் அவர் 23ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.



இலங்கையில் நடைபெறவுள்ள பாரம்பரிய திருவிழாவான ' பெரஹெர' திருவிழாவைக் கண்டுகழிக்க விருந்தினராக அவர் இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளார் என்று ஜப்பானிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ச)

## அனைத்து பால் மாவும் பரிசோதனைக்கு

கொழும்பு,ஓக.9

பால் மா தொடர்பாக தற்போது எழுந்துள்ள நெருக்கடியான நிலைமையைக் கருத்தில் கொண்டு அனைத்து பால் மா வகைகளையும் பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதார அமைச்சின் உணவு ஆலோசனைக்குழு தீர்மானித்துள்ளது.


பால் மா தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையைக் கருத்தில்கொண்டு புதன்கிழமை உணவு ஆலோசனைக் குழுவினால் முன்வைக்கப்பட்ட சிபாரிசுக்கு அமைய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாலித மஹிபால சில தீர்மானங்களை எடுத்துள்ளார்.

அதற்கிணங்க டிசிடி இரசாயனம் உள்ளடங்கியுள்ளதாக சந்தேகிக்கப்படும் பால் மாவின் மாதிரி புதன்கிழமை முதல் கைத் தொழில் தொழில் நுட்ப நிறுவனத்தின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தினால் டிசிடி இரசாயனம் கலக்கப்பட்டுள்ளதாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள பால் மா வகைகளை விற்பனையிலிருந்து விலக்கிக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் மெலிபன் நிறுவனம், பொன்டேரா நிறுவனம், ஜீ. எம். மொகமட் அலி நிறுவனம் ஆகியவற்றுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவனத்தினால் டிசிடி உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட அங்கர் 1+, அங்கர் முழு ஆடைப் பால் மா, மெலிபன் முழு ஆடைப் பால்மா, டயமண்ட் முழு ஆடைப் பால்மா ஆகியவற்றை உடனடியாக வர்த்தக நிலையங்களிலிருந்து விலக்கிக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் தலைமையிலான குழுவினர் சுவிஸர்லாந்து தூதர் தோமஸ் லிட்சரை கொழும்பிலிலுள்ள சுவிஸ் தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் சுவிஸ் தூதரக அரசியல் பிரிவின் முதன்மைச் செயலர் டேவிட் விக்னடி, நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் சார்பாக பொறியியலாளர் எம்.எம்.அப்துல் ரஹ்மான், அஷ்ஷெயக் நஜா முகமத் உட்பட ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ச-10)

# வழமை போன்று மு.கா.'பல்டி'

### அசாத் சாலி குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.9

நாம் அரசுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடவில்லை என்று தெரிவிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் காலங்களில் வழமை போன்றே 'பல்டி' அடிக்கின்றது என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையின் வரலாற்றில் மஹிந்தராஜபக்ஷவின் ஆட்சியிலேயே அதிக எண்ணிக்கையான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

நாட்டின் மஹிந்தாவின் ஆட்சிக் காலத்தில் தான் அதிக பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்து விட்டனர். இந்த முறை



கண்டி மாவட்டத்தில் தேர்தல் நடைபெறுவதால் த்தான் அங்கு ஜனாதிபதியை வரவழைத்து இப்தார் செய்யப்பட்டது.

ஹக்கீமின் செயற்பாடுகளை மக்கள் அறியாமல் இல்லை. முஸ்லிம் மக்களின் பலத்தை கடந்த தேர்தல்களில் காட்டி இருந்தால் பள்ளி வாசல்கள் மீது தாக்குதல்கள் இடம் பெற்றிருக்காது. இந்தமுறை தேர்தலில் மக்கள் அரசுக்கு நல்ல பாடம் புகட்டுவர்.

அந்தவகையில் வடக்கு, கண்டி தேர்தல்களில் வெற்றி பெற்று ராஜபக்ஷ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவோம்- என்றார். (ச-10)

# வெலிவேரிய தாக்குதலில் எட்டு பேர் சாவு; மூவர் விவரமே அரச தரப்பால் வெளியீடு

### ஐ.தே.க. சபையில் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு,ஓக.9

வெலிவேரிய தாக்குதல் சம்பவத்தில் எட்டுப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் அரசோ, மூன்று பேர் தொடர்பிலான தகவல்களையே வெளியிட்டுள்ளது என்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் அதிர்ச்சி தகவலொன்றை வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி, நாட்டில் அவசரகால சட்டம் நடைமுறையில் இல்லாத போது எந்த சட்டத்தின்கீழ் இராணுவம் வெலிவேரியவுக்கு அனுப்பப்பட்டது என்றும் கேள்வி எழுப்பியது.

வெற்றிலை சின்னத்துக்கு வரலாற்று வெற்றியை வழங்கிய கம்பஹா மக்களுக்கு அரசு துப்பாக்கி ரவைகளையே பிரதியுபகாரமாக வழங்கியுள்ளது என்று அந்தக் கட்சி குற்றஞ் சாட்டியது.

**ரணிலின் விளக்கம்**

சபாநாயகர் அறிவிப்பு, மனுதாக்கல், வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் ஆகியன முடிவடைந்த பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறிய முன்னாள்நாடளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அண்மையில் நாடாளுமன்றில் ஆற்றிய விசேட உரைக்கு புதன்கிமை சபையில் தன்னிலை விளக்கமளித்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,

**ஒரு வருடமாக அரசுடன் பேச்சு**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அரசுடன் இணைவது தொடர்பில் கடந்த ஒரு வருடகாலமாக பேச்சுகள் இடம் பெற்று வந்துள்ளன.

குறிப்பாக வடமேல் மாகாணசபை தேர்தல் நடைபெறவிருந்த நிலையில், இந்த வருடத்தில் கடந்த அரையாண்டு காலப்பகுதியில் மாத்திரம் இது தொடர்பாக அவர் பல சுற்றுப் பேச்சுகளில் கலந்து கொண்டுள்ளார்.

''மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவேண்டுமானால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யவேண்டும்: அதன்பிரகாரமே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவர் இராஜினாமா செய்துள்ளார்.

**ஒழுக்காற்று நடவடிக்கை நிறுத்தம்**

தான் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒருபோதும் வெளியேறப்போவதில்லை என்று தயாசிறி கூறிவந்ததால் அவருடன் நாம் பேச்சு நடத்தினோம். இதன்போது அவர் எதிர்காலத்தில் கட்சியை விமர்சிக்க மாட்டார் என்று உறுதி மொழி வழங்கினார். இதனையடுத்து அவர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

இந்நிலையில், கடந்த 24 ஆம் திகதி திடீரென தான் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகுவதாகவும் வடமேல் மாகாணசபைத் தேர்தலில் அரச தரப்பில் போட்டியிடவுள்ளதாகவும் அவர அறிவித்தார்.

**தயாசிறியின் உரை அடியோடு நிராகரிப்பு**

தயாசிறியின் வெளியேற்றம் குறித்து சிலர் என்மீது குற்றங்களை சுமத்துகின்றனர். தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு வழிசமைத்துக் கொடுத்தனவனே நான்தான்.

2001 ஆம் ஆண்டில் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் அவர் 2004 ஆம் ஆண்டில் தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்கு வந்தார் என்று குறிப்பிட்டதுடன், கடந்த 24 ஆம் திகதி தயாசிறி நாடாளுமன்றில் ஆற்றிய உரையை முற்றாக நிராகரிக்கிறார் என்றும் ரணில் கூறினார்.

அவரின் தன்னிலை விளக்கத்தையடுத்து நாடாளுமன்றில், சுங்கக் கட்டளை சட்டத்தின் கீழான இறக்குமதி தீர்வைகள் தொடர்பான தீர்மானத்தை அங்கீகரிக்கும் பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமானது.

குறித்த விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய,

**சட்டவிரோத தங்க இறக்குமதி அதிகரிப்பு**

''இந்திய ரூபாவின் பெறுமதி குறைந்துள்ளதால் இலங்கையை விட இந்தியாவில் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது. இதனால் சட்டவிரோத இறக்குமதிகள் அதிகரித்துள்ளன.

இவற்றைத் தடுப்பதற்கும் எமது நாட்டில் தங்கத்தின் விலையை நிலையானதாக பேணுவதற்கும் நடவடிக்கை அவசியம். இதனைக் கருத்திற்கொண்டே தங்கத்துக்கு 5 வீத இறக்குமதி வரியுடன் 5 வீத சேவை வரியும் அறவிடப்படுகிறது'' என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, இந்த விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன வெலிவேரிய தாக்குல் சம்பவம் தொடர்பில் தமது கடும் கண்டனத்தை வெளியிட்டார்.

**பயங்கரவாத தடைச் சட்டம் பிரயோகமா?**

அவர் தமதுரையில், ''எந்தச் சட்டத்தின்கீழ் வெலிவேரியவுக்கு இராணுவம் அனுப்பப்பட்டது? நாட்டில் தற்போது அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் இராணுவம் அனுப்பப்பட்டிருக்குமானால் அங்கு நடைபெற்ற பயங்கரவாதச் செயல் என்ன?

வெலிவேரிய தாக்குதல் சம்பவமானது இலங்கை இராணுவத்துக்கு ஒரு கறும்புள்ளியாகும். கலகமடக்குவதற்கு பல வழிமுறைகள் இருக்கின்றபோதிலும், துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கான அனுமதியை வழங்கியது யார்? குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில், குறித்த விவாதத்தில் உரையாற்றி ஐ.தே.கவின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க,

**ஏகாதிபத்திய ஆட்சி**

வெலிவேரிய தாக்குதல் சம்பவத்தில் எட்டுபேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், மூன்றுபேர் தொடர்பான விவரங்களையே நீங்கள் (அரசு) வெளியிட்டுள்ளீர்கள். சுத்தமான குடிதண்ணீரைக்கோரி போராடிய மக்களுக்கு துப்பாக்கி ரவைகளை பரிசாக வழங்கியுள்ளீர்கள். இதேபோன்றுதான் சிலாபம், கட்டுநாயக்க ஆர்ப்பாட்டங்கள்மீதும் தாக்குதல் நடத்தப் பட்டது.

இந்த நாட்டில் எவ்வாறானதொரு ஆட்சி நிலவுகின்றது என்பதை வெலிவேரிய சம்பவம் மூலம் சர்வதேச சமூகம் அறிந்திருக்கும். இங்கு ஏகாதிபத்திய ஆட்சியே நிலவுகின்றது என்று அரசைக் கடுமையாக கருத்து வெளியிட்டார். (ச-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மாகாண சபைத் தேர்தல்; பிறழ்வுகள் இன்றி நடைபெறுமா?

மாகாண சபைகள் மூன்றுக்கு அடுத்த மாதம் இருபத்தோராம் திகதி நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு, கடந்த ஒரு வாரத்தில்–வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட ஏழு நாள்களில்–தேர்தல் விதிமுறைகள் 50 தடவைகளுக்கும் அதிகமாக மீறப்பட்டுள்ளன. வன்முறைச் சம்பவங்கள் நான்கும் இடம்பெற்றுள்ளன.

கபே (Campaign for Free and Fair Election) என்ற தேர்தல் கண்காணிப்பு நிலையம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

எனினும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிஸார், அந்தக் குற்றங்கள் குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்; குற்றஞ்சாட்டி உள்ளார்.

வடக்கில் குறைந்த எண்ணிக்கையிலும் வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலேயே, அதிக எண்ணிக்கையிலும் தேர்தல் விதிகள் மீறப்பட்டுள்ளன என்றும் அவர் விவரித்திருக்கிறார். ஆனால், தேர்தல் விதிகள் மீறப்பட்ட சம்பவங்கள் குறித்துப் பொலிஸார் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும் கீர்த்தி தென்னக்கோன் கவலை வெளியிட்டிருக்கிறார்.

''கபே'' அமைப்பாளர் சுட்டிக்காட்டி உள்ள தேர்தல் விதிமுறை மீறல்களில், ஈடுபட்டவர்களில் பிரதமர் டி.எம். ஜெயரத்னாவின் மகனும் அடங்குகிறார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கிலும், வடமராட்சி, கைதடி, கொடிகாமம், சாவகச்சேரி, நுணாவில் ஆகிய பகுதிகளில், தேர்தல் விதிகளுக்கு முரணாக, அவற்றை மீறி சுவரொட்டிகளும், பதாகைகளும் இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சிகள் சுவரொட்டிகளை ஒட்டுவதும், பதாகைகளைக் கட்டுவதும் தேர்தல் சட்ட முறையின்படி குற்றமாகும். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்து நீதிமன்றத்தில் முற்படுத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கும் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளுக்கும் உண்டு.

தேர்தல் பிரசாரத்திற்காக அரச வாகனங்களைப் பயன்படுத்துவதும், அரச அலுவலகங்களை, அரச கட்டடங்களை பயன்படுத்துவதும், பதாகைகள், சுவரொட்டிகளை வீதிகள் உட்படப் பொது இடங்களில் காட்சிப்படுத்தப்படுத்துவதும் சட்டப்படி குற்றமாகும். ஆனால் வடக்கு உட்பட மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ள மூன்று இடங்களிலும் அவை அமோகமாக நடைபெறுகின்றன.

தேர்தல் வாக்களிப்புக்கு இன்னமும் சுமார் ஒன்றரை மாதங்கள் இருக்கும் போதே, தேர்தல் விதிகளை மீறும் விதத்தில், தம்மைத் தட்டிக் கேட்க எவருமில்லை என்ற கெச்சிதத்துடன், அரச சார்புக் கட்சிகளின் வேட்பாளர்கள் செயற்படுவது, சுதந்திரமான தேர்தல் சாத்தியமா, அரசாங்கம் அதற்கு வகை செய்யுமா என்ற பென்னம் பெரிய கேள்விக்குறியை எழுப்பி நிற்கிறது.

குட்டி மாகாண சபைத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு ஆசிய தேர்தல் ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழு, பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக் குழு, சார்க் அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக் குழு ஆகிய மூன்றும் அரசாங்கத்தினால் அழைக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் கபே, பவ்ரல் ஆகிய உள்நாட்டுக் கண்காணிப்புக் குழுக்களும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும்.

தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட உள்ள ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் இரண்டு பிரதிநிதிகள் அம்னா யற்றோய், மார்டின் கற்றோய் ஆகிய இருவரும் முன்னோட்ட விஜயம் ஒன்றை இப்போது மேற்கொண்டுள்ளனர்.

அவர்கள் வடக்கிற்கும் வந்து நிலைமைகளை அவதானித்துச் சென்றுள்ளனர். வடக்கில் காணப்படும் இராணுவத்தினரின் அதிகரித்த எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இத்தகைய நிலையில் மாகாண சபைத் தேர்தல், அதற்கான விதிமுறைகள் வழுவாமல், சுதந்திரமாகவும், அதிகாரத்தில் உள்ள தரப்புகளின் தலையீடுகள் இல்லாமலும், நடைபெற வேண்டும். அதற்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டிய முழுப்பொறுப்பும் அரசாங்கத்தைச் சார்ந்ததே.

மொத்தத்தில் குட்டி மாகாண சபைத் தேர்தலில் தேர்தல் வன்முறைகள், ஒழுங்கீனங்கள், சட்ட மீறல் செயற்பாடுகள், அரச சொத்துக்களை பயன்படுத்துதல், துஷ்பிரயோகம் செய்தல் என்பவற்றைத் தடுப்பதிலும், ஜனநாயக விதிமுறைப் பிறழ்வுகள் இன்றி அது ஒப்பேறவும் அரசியல் கட்சிகளும் சிவில் சமூகமும் கூர்மையுடன் செயற்பட வேண்டும்.

# புதிய வாசல் திறக்கப்படுமா?

போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகளின் பின்னர், தற்போது வடக்கு மாகாணம் வாழ் மக்கள் தமக்கான பிரதிநிதிகளை மாகாண சபைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்ற வாய்ப்பைப் பெற்றுள்ளனர். சுதந்திரமானதும் நேர்மையானதுமான விதத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளருக்கு வர்த்தமானி மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் நடைபெறுகின்ற தேர்தல்களில் மிகவும் வேறுபட்ட இயங்கு நிலையுடன் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேர்தல்களின் போது வழமையாக மேற்கொள்ளப்படும் முறைமைக்கு அப்பால் எதிர்பார்க்கப்படாத விதத்தில் இத் தேர்தல் நடத்தப்படவுள்ளதானது ஆச்சரியத்தை உண்டுபண்ணியுள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தனது முதலமைச்சர் வேட்பாளராக ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனை நிறுத்தியுள்ளமை இத் தேர்தலில் அதிரடித் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

### வடக்கு மாகாண மக்களுக்கு பல்வேறு செயல் திட்டங்கள்

வடக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் எதிர்கால நலன்கருதி பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ள விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இந்நிலையில் விக்னேஸ்வரன் தான் வழங்கிய நேர்காணல்களில் வாக்குறுதி அளித்தவாறு மக்களின் எதிர்கால நலனை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்களை, முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டபின் நிறைவேற்றினால் வடக்கு மாகாண சபையானது இலங்கையில் உள்ள ஏனைய மாகாண சபைகளுக்கு ஒரு முன்மாதிரியாக செயற்படுவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. விக்னேஸ்வரன் மிகவும் ஆணித்தரமாகத் தனது கருத்துக்களை முன்வைக்கின்ற ஒருவர் என்பதாலும், தனது மனதில் படுவதை எவ்வித அச்சமுமின்றி வெளிப்படுத்துகின்ற ஒருவர் என்பதாலும், நீதித்துறையில் சேவை யாற்றும் போது உண்மையுடன் பணிபுரிந்த ஒருவர் என்பதாலும் இவர் தற்போது முதலமைச்சர் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### துன்பப்படும் மக்களுக்கு சேவையாற்றுவேன்

தன்னாட்சி மற்றும் தற்போதும் கடந்த காலங்களிலும் பேசப்படுகின்ற பேசப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் விக்னேஸ்வரன் எவ்வாறான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்துமாறு ஊடகவியலாளர் ஒருவர் இவரிடம் வினவியபோது, ''இவை எல்லாம் அரசியல்வாதிகளுக்கு உரியவை. நான் ஓர் அரசியல்வாதி அல்ல. பாதிக்கப்பட்டுள்ள, துன்பப்படுகின்ற மக்களுக்கு சேவையாற்றுவதில் நான் விருப்பங் கொண்டுள்ளேன்" என விக்னேஸ்வரன் பதிலளித்தார். இவரது இந்தக் கூற்றானது விக்னேஸ்வரன், துன்பப்படுகின்ற மக்களின் உடனடித் தேவைகளை முதலில் முதன்மைப்படுத்துவதாகவும், ஆனால் ஏனைய பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணாது காலம் கனி

> போர் நடந்த காலப்பகுதியிலும் அதற்குப் பின்னரும் காணாமற் போன மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தொடர்பில் போதியளவு தகவல் கள் வழங்கப் படவில்லை என்பது மிகப் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது. தான் முதலமைச்சராக பதவியேற்றால், இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகளைத் திறந்து வைப்பேன் என்பதில் விக்னேஸ்வரன் நம்பிக்கையாக உள்ளார்.

யும் போது அதனைச் செயற்படுத்தலாம் எனக் கருதவைக்கிறது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மேல் மாகாணங்கள் உட்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கடமையாற்றிய, வாழ்ந்த விக்னேஸ்வரன் பல்வேறு இயங்கு நிலை மாற்றங்களைக் கொண்ட சூழல்களுக்குள், பாரபட்சப்படுத்தப்பட்ட பல்லின சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில் எவ்வாறு பணியாற்றுவது என்பது தொடர்பில் தொழில் சார் தகைமையைக் கொண்டிருக்க முடியும்.

### தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு வரையப்பட்ட பொறிமுறையில் தீர்வு

இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறு கலந்துரையாடல்களில் இரு தரப்பும் திறந்த மனதுடன், விட்டுக்கொடுப்புடன், புதிய அணுகுமுறைகளுடன் பேசத் தவறியுள்ளனர். இவ்விரு சாராரும் இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசும் போது முரண்பாடான நிலைப்பாட்டைத் தவிர்த்து பேச்சுக்களை மேற்கொண்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

தீர்க்கப்படாத சில பிரச்சினைகளுக்கு வரையப்பட்ட பொறிமுறை ஒன்றின் ஊடாக தீர்வை முன்வைக்க வேண்டும் என்கின்ற நடைமுறை அணுகுமுறையின் பிரகாரம் விக்னேஸ்வரன் பணியாற்ற விரும்புகின்றார் என்பது போல் தென்படுகிறது. இலங்கையில் போர் நடந்த காலப்பகுதியிலும் அதற்குப் பின்னரும் காணாமற் போன மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தொடர்பில் போதியளவு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது மிகப் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது. தான் முதலமைச்சராக பதவியேற்றால், இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகளைத் திறந்து வைப்பேன் என்பதில் விக்னேஸ்வரன் நம்பிக்கையாக உள்ளார். நீதித்துறையில் முன்னர் பணியாற்றிய அனுபவத்தைப் பயன்படுத்தி சட்டமா அதிபரைச் சந்தித்து, இவ்வாறு காணாமற் போனோர் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தொடர்பில் சந்திப்புக்களை மேற்கொண்டு தீர்வொன்றை எட்டுவதற்கான சாத்தியம் இருக்கலாம் என விக்னேஸ்வரன் கருதுகிறார்.

இவற்றுக்குத் தீர்வு காண்பதில் சட்டமா அதிபர் தனக்கு உதவலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ள முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் நம்பிக்கை கொள்கிறார்.

### காணாமல் போனோர் தொடர்பில் தீர்வு காண வேண்டும்

இதுதவிர, காணாமற் போன அல்லது சாவடைந்தவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கான நிறுவனம் ஒன்றை உருவாக்கி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் எனவும் விக்னேஸ்வரன் கருதுகிறார். காணாமற் போன மற்றும் தடுப்பிலுள்ளவர்கள் தொடர்பில், ஆரம்பத்தில் 50 அல்லது 100 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டால் அது மிகப்பெரிய சேவையாக இருக்கும். நாட்டில் போர் முடிவடைந்து அமைதி நிலவும் காலப்பகுதியில், வடபகுதியில் மிகப் பெரியளவில் இராணுவத்தினர் பிரசன்னமாகியிருப்பது மற்றும் பொது மக்களின் செயற்பாடுகளில் இராணுவத்தினர் குறுக்கிடுவது தவிர்க்கப்பட வேண்டும். இலங்கையில் போர் முடிவடைந்த பின்னரும் இராணுவத்தினர் பெரியளவில் கடமையில் ஈடுபடுத்தப்படுவது தொடர்பில் ஏனைய பலரைப் போலவே விக்னேஸ்வரனும் தனது எதிர்க்கருத்தை முன்வைத்துள்ளார். 20 இராணுவப் படைப் பிரிவுகளில் வடக்கில் 10-15 படைப்பிரிவுகள் நிலைகொண்டுள்ளதாக விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இராணுவத்தில் கடமையாற்றிய ஒருவர் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளதானது நாட்டில் சமாதானத்தை ஏற்படுவதற்குத் தடையாக உள்ளது.

''நல்லதொரு புரிந்துணர்வுடன் குழுவாக இணைந்து பணியாற்றக் கூடியவர்களை வேட்பாளர்களாக நியமிக்க வேண்டும்'' என கூட்டமைப்பு பிரதிநிதிகளிடம் விக்னேஸ்வரன் அறிவுரை வழங்கியிருந்தார். அரசியல் விவகாரங்களுக்கு அப்பால், கல்விசார் செயற்பாடுகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றில் பரந்த நோக்குடன் சிந்தித்துச் செயற்படக்கூடியவர்கள் வேட்பாளர்களாககளமிறக்கப்பட வேண்டும் எனவும் விக்னேஸ்வரன் கோரியிருந்தார்.

### மாகாணசபை வினைத்திறனுடன் செயல்பட வேண்டும்

''போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் ஜனநாயக ரீதியாகத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் ஒன்றாக வடக்கு மாகாண சபை காணப்படுகிறது. இதனால் வடக்கு மாகாண சபை எவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியுமோ அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு மிகவும் வினைத்திறனுடன் செயற்பட வேண்டும்'' எனவும் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் தொழில் வாய்ப்புக்களும் நியமனங்களும் திறமையின் அடிப்படையில் வழங்கப்படும். இவ்வாறான செயற்பாடுகள் சமாதானத்தையும் அமைதியையும் உருவாக்குவதற்கான காரணிகளாக காணப்படுகின்றன. முதலமைச்சராக விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டால், நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதில் போட்டிநிலை ஏற்படாது. இதன்மூலம் ஒரு பொறிமுறைக்குள் பணியாற்றுவதுடன், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டங்களை வகுப்பதற்கும் இலங்கை அரசுக்கு வடக்கு மாகாண சபை வழிகாட்டியாக இருக்கும்.

இதன் மூலம் நாட்டில் அமைதி ஏற்பட்டு, நாட்டில் செழுமை ஏற்பட்டு மக்கள் மகிழ்வாக வாழமுடியும். மக்கள் அனைவரும் நம்பிக்கையுடன் வசதி வாய்ப்புக்களுடன் அமைதியுடன், சமாதானமாக வாழ்வதற்கான அறிவுபூர்வமான தீர்வுகள் எட்டப்படும். கல்வி அறிவுடையவர்கள் நிர்வாகத்தை நடத்தும் போது பாதிக்கப்பட்ட சமூகம் செழுமையுடன் கூடிய சிறந்த வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

*(நன்றி –த ஐலண்ட்)*

# பிஞ்சுகளின் முதுகில் சுமைகளை ஏற்றாதீர்

பா.தனபாலன்
இணைப்பாளர்
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி

சின்னஞ்சிறு வயதில் உல்லாசமாக ஓடியாடிப்பாடி படிக்க வேண்டிய தரம் 5 சிறார்களின் உணர்வுகளைப் புரிய முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம். பரீட்சைப் பயம், காய்ச்சல், பதகளிப்பு எனப் பல மாணவர்கள் மருத்துவர்களிடம் செல்ல வேண்டிய நிலையில் இப்போது இருக்கிறார்கள்.

இன்று நேரம் பார்க்காத பரீட்சை வழிகாட்டி வகுப்புக்கள், பயிற்சிகள், மாதிரிப் பரீட்சைகள், செயலமர்வுகள் என பொருத்தமற்ற பெரும்பாலான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர் சங்கங்கள் இன்னும் பல தரப்புக்கள் இந்தப் பரீட்சை தொடர்பாகக் காட்டும் தீவிர பொருத்தமற்ற ஈடுபாடுகள் காரணமாக அப்பாவிச் சிறார்களின் சுயமரியாதை, உரிமைகள், உணர்வுகள், விருப்பங்கள் புறக்கணிக்கப்படுகின்ற நிலை எமது நாட்டில் இன்று பெருகி வருகின்றது.

**கல்வி விழிப்புணர்வு :**

முக்கியமாக படித்த, படிக்காத இரு சாரார்களான பெற்றோர்களுக்கு கல்வி தொடர்பான விழிப்புணர்ச்சி மிக அவசியமாகத் தேவைப்படுகின்றது. இன்றைய உலகில் பல நோய்களைத் தீர்க்கக்கூடிய சக்தி கல்வியிலேயே தங்கி உள்ளது. ஆனால் அந்தக் கல்வி காரணமாக பலர் நோயாளிகளாக மாறுகின்றார்கள், மாற்றப்படுகின்றார்கள். இந்த நிலை பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்திவிடும். தரம் 5 புலமைப் பரீட்சைப் பெறுபேறுகளின் நியம அடிப்படையில் குறிப்பிட்ட தொகையினரே தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

பெரும்பாலானவர்கள் தோல்வியடைகின்றனர், தோல்வி அடையப் போகின்றார்கள் , இது யதார்த்தம். இந்தப் பரீட்சை மூலம் சிறந்த பாடசாலைக்குச் செல்லும் சந்தர்ப்பத்துக்காக மாணவர்கள் பொருத்தமற்ற விதத்தில் கையாளப்படுதல் பாரதூரமான பிரச்சினையாகியுள்ளது.

பிள்ளை உணவு உண்பதற்கும், நித்திரை செய்வதற்கும், நேரமற்று பல மாதங்கள் சுமைக்கு மேல் சுமையுடன் படிக்க வைக்கப்படுகின்றது. இது பரீட்சைப் பெறுபேற்றைக் குறைக்கும் எனப் பெற்றோர்களுக்கு புரியவில்லை. மேலும் இந்தப் பரீட்சைக்கு பொருத்தமற்ற விதத்தில் தயார் செய்யப்படுகின்ற பொழுது அவர்களிடம் இயற்கையாகவே பத்து வயதில் காணப்படுகின்ற பல்வேறு கற்றல் செயற்பாடுகள் மறக்க வைக்கப்பட்டு வலிந்து அவர்களைக் கற்றலில் தள்ளுவதால் பிஞ்சு உள்ளம் சோபை இழந்து மெய்யான கல்வியில் அக்கறை இழந்து விரக்தியுடன் இருக்கிறார்கள். பிள்ளைகளை இந்த நிலைக்குத் தள்ளும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் சேவை வலிந்துதவு அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**தண்டிக்கப்படும் குழந்தைகள்**

மேலும் கண்டிக்கப்பட வேண்டிய மற்றொரு விடயம் சிறார்கள் தண்டிக்கப்படுதல். தரம் 5 புலமைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் பிரபல நிறுவனத்தின் மாதிரிப் பரீட்சைக்காக சிறார்களை அனுப்பி விட்டு, பரீட்சை முடிந்ததும் பிள்ளைகள் வர குறித்த தனது பிள்ளையின் பரீட்சைப் பெறுபேற்றுப் புள்ளிகளைக் கேட்காமல் வேறு பிள்ளைகளது புள்ளிகளைக் கேட்டு, அதன் பின்னர் தனது பிள்ளையின் புள்ளிகளைக் கேட்டு அந்த பகிரங்கமான இடத்திலேயே வைத்து தலையில் பலமான குட்டு, காதை இழுத்து நுள்ளுதல், அடி , வீட்டுக்கு கூட்டி வந்ததும் அடி, வாய்ச் சொல்லால் வன்முறைப் பிரயோகம் என்றெல்லாம் மேற்கொள்ளப்படுகின்றது.

எல்லோருமே பிள்ளை நல்ல பெறுபேற்றைப் பெற வேண்டும் என்பதற்காகவே முனைகிறார்கள். ஆனால் தமது செயற்பாடுகள் குறித்த பிள்ளைக்குப் பொருத்தமாகவுள்ளதா? தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ப பிள்ளை சரியாக இனம் காணப்பட்டதா?, பிள்ளையினது இயல்புகளுக்கு ஏற்ற முறையில் பொருத்தமான கற்றல்-கற்பித்தல் முறைகள் பின்பற்றப் பட்டனவா? என்ற வினாக்கள் இங்கு முக்கியமாகின்றன. இவற்றின் அடிப்படையில் நோக்கும்போது ஆக்கபூர்வமான நிலை காணப்படுவதாக இல்லை.

**மாணவர் சார்பான பாதிப்புக்கள்:**

கடந்த வருடம் இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சை காரணமாக பாதிப்புற்ற பிள்ளைகள் தொடர்பாக இலங்கை மருத்துவக் கழகம் பின்வருமாறு தெரிவிக்கின்றது. இந்தப் பரீட்சை எழுதப் போகும் - எழுதிய சிறார்கள் பலர் பல்வேறு நோய்களுக்குள்ளாகி வைத்தியர்களின் உதவியை நாடியுள்ளனர். அதிகமான மாணவர்கள் மத்தியில் இந்த நோய்கள் பரீட்சைக்குத் தயாராகும் போதும், பரீட்சையின் பின்னரும் ஏற்பட்டவையாகும். இந்தப் பரீட்சை காரணமாக பிள்ளைகள் அனுபவித்து வரும் மன அழுத்தங்களை மதிப்பீடு செய்த போது, தலைவலி, மூட்டு வலி, தசை வலி, மூர்ச்சையடைதல், வலிப்பு, மூச்சுத் திணறல், தூக்கமின்மை, பசியின்மை, பலவீனம், வாந்தி எடுப்பு, கோபம் கூடுதலாக வருதல், ஏனையோரிடம் எரிச்சல், பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடல், நித்திரையில் சிறுநீர் கழித்தல் எனப் பல பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றார்கள்.

உள ரீதியாகவும், நீண்டகால பெரும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. மேற்குறித்த நோய் உபாதைகள் தொடர்ந்து அவர்களது பாதிப்புக்களை அதிகரித்து விடும். எனவே இந்தப் பரீட்சை தொடர்பான பொருத்தமற்ற அதீத அக்கறையைப் படிப்படியாகக் குறைக்க வேண்டியுள்ளது.

**ஆலோசனைகள்:**

இயல்பாகப் பிள்ளை தானாகவே விரும்பக் கற்கும் சூழலை பாடசாலையிலும், வீட்டிலும் ஏற்படுத்த வேண்டும். பெற்றோர்கள் சத்துள்ள உணவுகளை வழங்கி 7 மணி நேரம் நித்திரை மற்றும் ஓய்வும் பொதுவாக வழங்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையினதும் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ப பொருத்தமான கற்றல் முறைகளைப் பெற்றோரும் பிரயோகிக்க வேண்டும். ஆசிரியர்களும் பொருத்தமான கற்றல் முறைகளைப் பிரயோகிக்க வேண்டும். ஆசிரியர்களும் பொருத்தமான கற்றல்-கற்பித்தல் தர உள்ளீடுகள் மூலம் மாணவர் விரும்பிக் கற்கும் சூழலை ஏற்படுத்தல், சிறுவர் நேய- சிறுவர் நட்புறவு அணுகுமுறைகளைக் கையாளுதல், நூலகம், கணினி அறை, வள நிலையங்களைப் பொருத்தமாகப் பயன்படுத்தல் என்பவை அவசியமாகிறது.

ஆசிரியர்களும், தனியார்களும், ஆர்வமுள்ளோரும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது தற்போதைய பரீட்சை முறையில் பரீட்சைத் திணைக்களம் நெகிழ்ச்சியுடன் மாணவர்களின் உளத்தைப் பாதிக்காத வகையில் பரீட்சை முடிந்து வெளியில் வரும்போது சகல மாணவர்களுமே நாம் பரீட்சை சிறப்பாகச் செய்தோம் என்ற மனப்பாங்கை ஏற்படுத்தும் நுட்பங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது. சுமைகளைக் குறைத்து ஆசிரியர் கைநூல் பாடப்புத்தகத்திலேயே பெரும்பாலான வினாக்கள் கேட்கப்படும் ஓர் ஆக்கபூர்வமான நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே உங்கள் சிறார்களுக்கு மேலதிகமான சுமைகளைப் பொருத்தமற்ற விதத்தில் வழங்காதீர்கள். பரீட்சையை விட உங்கள் பிள்ளை முக்கியம். அதனது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். நலன்களை விசாரியுங்கள். கற்றலை விட வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள். சமநிலை ஆளுமை உள்ளவர்களாக ஆகும் வாய்ப்புக்களை வழங்குங்கள். மகிழ்ச்சியாகக் கற்க வழிகாட்டுங்கள். பிள்ளை விரும்பும் இடமாக கற்கும் இடம் அமைய ஏற்பாடுகளை மேற்கொள்ளுங்கள். உன்னதமான கல்வியையும், எதிர்கால நல்வாழ்வுக்கும் வழிகாட்ட மேலும் பல விடயங்களை அறிந்து நடைமுறைப்படுத்துங்கள். பரீட்சை அழுத்தத்தில் இருந்து உங்கள் பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

வெற்றி- தோல்வி என்ற நிலைக்கு அப்பால் சிறுவர்களின் உடல்-உள-மனவெழுச்சி சமநிலையினூடு கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தும் பொருத்தமான சூழலை வீட்டிலும் கல்வி நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு எம் அனைவருக்கும் உண்டு. ★

# ஈகைத் திருநாளாம் ஈதுல் பித்ரே வருக, வருக!

எம்.எப்.எம்.இக்பால்


புனித ரமழான் பூராவும் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் ஷவ்வால் மாதத்தின் தலைப் பிறை தென்பட்டவுடன் ஈதுல் பத்ர் எனும் ஈகைத் திருநாளைக் குதூகலமாகக் கொண்டாடுகின்றனர். ''அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து'' என்ற தக்பீரை முழங்கி அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து போகின்றார்கள்.

இறை அருளையும் பாவ விமோசனத்தையும் அடைய நேற்றுவரை தூண்டிக்கொண்டிருந்த ரமழான் எனும் விசேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பிவைத்து கவலையில் ஆழ்ந்த விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும், மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்புமிக்க தினமே புனித நோன்புப் பெருநாள் தினமாகும்.

ரமழானில் நன்மைகளை கொள்ளையிட்ட உள்ளங்கள் ஷவ்வால் மாத தலைப்பிறையுடன் ரமழானுக்கு விடைகொடுத்து விட்டு நோன்புப் பெருநாள் குதூகலத்தில் திளைக்கின்றன. பெருநாள் தினம் என்பது சிறியோர், பெரியோர், ஏழை, பணக்காரன், முதியவர், இளையோர் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி மகிழ்ச்சியுடன் களிக்கக் கூடியதினமாகும். இப்பெருநாள் தினத்தில் நோன்பு நோற்பதை ஹறாமாக்கி உள்ள இஸ்லாம் அல்லாஹ்வின் உவப்புக் குரிய வழிகளில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது தர்மம் (பித்ரா) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாளை தர்மம், நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும், ஏழை எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியுடன் இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் ஒரு கடமையாக்கப்பட்டுள்ளது.

இஸ்லாம், இம்மை மறுமைப் பயன்களை அடைந்து கொள்ளக் கூடிய வழியில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது. நபி(ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் பள்ளிவாசலுக்குச் செல்லும் போது ஒருவழியால் சென்று மற்றுமொரு வழியால் திரும்பி வருவார்கள். இதன் மூலம் பலரை சந்திக்கவும் ஏழைகளுக்கு உதவி புரியவும் கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள். பெருநாள் தினத்தில் வீண் கேளிக்கை விளையாட்டுகளைத் தவிர்த்து சகோதர மதத்தவர்களுடன் புரிந்துணர்வு கருதிய ஒன்று கூடல்களை நடத்தலாம். இதன் மூலம் இருசாரார் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயங்கள் நீங்கி பிரதேச மற்றும் தேசிய அமைதிக்கு வழியேற்படும்.



பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும். எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும், ஸகாதுல் பத்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது. ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுக துக்கங்களில் பங்குபற்றக்கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இந்த உண்மையை ஸாகாதுல் பத்ர் அமைப்பு முறையிலும் காணப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்துப் புத்தாடைகள் அணிந்து நறுமணம் பூசி அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதேபோன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு. ஓர் ஊரில் அல்லது மஹல்லாவில் வாழும் முஸ்லிம்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாகப் பிரியாமல் சகலரும் ஒன்றுசேர்ந்து ஒரு திறந்த வெளியில் அல்லது மைதானத்தில், அவ்விதம் முடியாத போது ஒரு பள்ளிவாசலில் பொருநாள் தொழுகையை நடத்த வேண்டும்.

பெருநாள் தொழுகை முடிந்ததும் தான் சந்திக்கும் சகோதரர்களுக்கு ''தகப்பல் வலல்லாஹு மின்னி வமின்க'', உங்களுடையதும் என்னுடையதும் நற்செயல்களையும் வாழ்த்துக்களையும் அல்லாஹ் அங்கீகரிப்பானாக என்று கூறி வாழ்த்து தெரிவிப்பது சிறப்பாகும்.

பெருநாள் தினங்களில் உறவினர்கள், நண்பர்கள், மார்க்க ஊழியர்கள் அனைவரையும் கண்டுபேசி உபசரித்து வாழ்த்துக்கூறி தங்களிடையே பற்றையும், பாசத்தையும், அன்பையும், ஆதரவையும் மேன்மேலும் அதிகரித்துக் கொள்வதும் சிறந்த செயலாகும்.

எமது தாய் நாடான இலங்கையிலும் ஏனைய முஸ்லிம் சிறுபான்மை நாடுகளிலும் நிலவும் பயங்கரமான பிரச்சினைகளிலிருந்து நீங்கி சமாதானமும் சக வாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத்தன்மையும், புரிந்துணர்வும் ஏற்படுவதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக.! ஆமீன். ஈத் முபாரக்!

உதயன்
09/08/2013




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## மெய்வன்மைப் போட்டி

கோப்பாய் சமூக சேவா சங்கப் பாலர் பகல் விடுதியின் மெய்வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாலர் பகல் விடுதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சமூக சேவா சங்கத் தலைவர் க.பரமானந்தராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு, விருந்தினர்களாக கோப்பாய்ப் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரி த.ஹரிசாந், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய பிரதி அதிபர் திருமதி ஜெகதீஸ்வரி கிஷ்ண குமார் மற்றும் சீ.கதிர்காம நாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

சாவகச்சேரியில் 300 இற்கு மேற்பட்ட

## வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை



தென்மராட்சி, ஓக. 9

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்ட வளர்ப்பு பெண் நாய்களுக்கு இனப் பெருக்கத் தடை சிகிச்சை மேற்கொண்டபோது 300 இற்கு மேற்பட்ட பெண் நாய்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

வரணி, கைதடி, சாவகச்சேரி, மந்துவில், கொடிகாமம் ஆகிய பகுதிகளில் அந்தந்த பொது சுகாதாரப் பரிசோதகர்களின் தலைமையில் வளர்ப்பு பெண்நாய்களுக்கு இனப்பெருக்கத்தடை சத்திர சிகிச்சை கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட வேளையில் நாய்களின் உரிமையாளர்களால் கொண்டு வரப்பட்ட நாய்களுக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. (வ-9-51)

ஆலயங்களில் தேர்த் திருவிழாவின் போது...



வரலாற்றுப் புகழ்மிக்க வரணி சுட்டிபுரம் அம்மன் ஆலய தேர்த் திருவிழாவின்போது பக்தர்கள் குழாம் புடை சூழ அம்பாள் தேரில் வீதி உலா வரும் காட்சி. (ஒ-122)



வரணி சுட்டிபுரம் தேர்த்திருவிழாவின்போது அம்பாளின் அடியார் ஒருவர் பறவைக்காவடியுடன் தமது மகனையும் கதிரை ஒன்றில் இருத்தி தன்னுடன் இணைத்துக்கொண்டு வீதிவலம் வருவதைக் காணலாம். (ஒ-122)



யாழ். திருமறைக் கலாமன்ற மாணவி பிருந்தா ரவீந்தினி யூட்சாந்தராஜ்ஜின் நடன அரங்கேற்ற நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெற்றபோது.....

## வருடாந்தப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.9

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆல யப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன் னிரு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் 20 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ந)

## களவாடப்படும் கால்நடைகள்

வரணி பிரதேசத்தில் மேற்கு வெளி வயல் பகுதியில் மேய்ச்சலுக்காகச் செல்லும் கால்நடைகள் காணாமல் போவதாக கால்நடை உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வரணி வடக்கு தம்பான் பகுதியில் மேய்ச்சலுக்குச் சென்ற பசுமாடு திரும்பி வராததை அடுத்து அந்த மாட்டைத் தேடிய உரிமையாளர் குறித்த பகுதியில், குளத்துக்கருகில் சம்புப் புற்களுக்கு நடுவே இறைச்சிக்காக வெட்டப்பட்ட கால் நடைகளில் தோல் எலும்புகள் வீசப்பட்டிருப்பதை கண்டுள்ளார்.

குறித்த வயல்வெளி குடிமனைகள் அற்ற பகுதியாகும். இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி மேய்ச்சலுக்குச் செல்லும் கால் நடைகள் இறைச்சிக்காக களவாடப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-122)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழாவில். (ஒ-9)

## ஆடிப்பூர விழா

சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆடிப் பூரத் திருவிழா நடைபெறும். இந்நிகழ்வில் சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன் ''திருமுறைகளில் வாழ்வியல்'' என்ற தலைப்பிலும் க.நித் தியதசீதரன், 'இறைபணி' என்ற தலைப்பிலும் சொற்பொழிவுகளை நிகழ்த்துவர். (ந-29)

★ ★ ★

வரணி வடக்கு சிமிழ் அம்மன் கோயிலில் இன்று வெள்ளிக் கிழமை ஆடிப்பூரத் திருவிழா நடைபெறவுள்ளது. (ந-122)

## ஆரம்பக் கல்வியில் காட்டும் அக்கறையை பெற்றோர்கள் தொடர்ந்து காட்டுவதில்லை

மாணவர்கள் கல்வி, விளையாட்டு, ஒழுக்கம் ஆகிய மூன்றிலும் சிறந்து விளங்கினால் அவர்களால் எதிர் காலத்தில் சிறந்த பிரஜைகளாக விளங்க முடியும் என அல்வாய் அம்பாள் வித்தியாலய அதிபர் எம்.மகேஸ் வரராஜா தெரிவித்துள்ளார்.

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபையின் பாலர் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்வி, விளையாட்டு ஆகிய இரண்டும் முன்பள்ளிப் பருவத்திலிருந்து வளர்த்தெடுக்கப்பட்ட வேண்டியவை. முன்பள்ளியில் பிள்ளைகள் விளையாட்டு மூலம் கல்வியை பயின்று வருகின்றனர். சில பெற்றோர் விளையாட்டில் ஈடுபடும் பிள்ளைகள் கல்வி முயற்சியைத் தவற விட்டு விடுவார்கள் எனக் கருதுகின்றனர். ஆனால் நிலைமை அவ்வாறு இல்லை. விளையாட்டில் நாட்டமுள்ள பெரும்பாலான மாணவர்கள் தமது சாதனைகளை கல்வியிலும் காட்டி வருகின்றனர். எனவே மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாது தமது திறமைகளை விளையாட்டிலும் காட்ட வேண்டும். விளையாட்டின் மூலம் சிறந்த மனப்பாங்குகள் வளர்ச்சியடைகின்றன. உளநலம் பாதுகாக்கப்படுகின்றது. பொறாமையற்ற போட்டித் தன்மை ஏற்படுகின்றது. உடல் நலம் பேணப்படுகின் றது. எனவே சிறு வயது முதல் பெற்றோர் கல்வியுடன் விளையாட்டிலும் பிள்ளைகள் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும்.

அதிகமான பெற்றோர் முன்பள்ளி முதல் தரம் தொடக்கம் 5 ஆம் வகுப்பு வரை முழுமையாக தம்மை அர்ப்பணித்து பிள்ளையின் கல்வியிலும் அக்கறை செலுத்தி வருகின்றனர். பிள்ளை தரம் 6 வகுப்புக்கு சென்ற பின் பெற்றோரின் அக் கறையில் பெரு வீழ்ச்சி ஏற்படுகின்றது. இது பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துகின் றது.

இவ்வாறில்லாது தொடர்ச்சியாக பிள்ளையின் கல்வி யில் பெற்றோர் அக்கறை காட்ட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-35)

## சிறந்தது எது?

ஓர் அறிஞர் இருந்தார். தனக்கு எல்லாம் தெரியும் என்ற கர்வம் அவருக்குத் தலைக்கேறியிருந்தது. மற்றவர்களை முட்டாளாகக் கருதினார். ஒருநாள் அவர் ஒரு கிராமத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தார். அந்தக் கிராமத்து மக்கள் நல்ல அனுபவ ஞானமுள்ளவர்கள் என்று அறிந்து அவர்களைச் சோதிக்க எண்ணினார். மாடு மேய்க்கும் ஓர் இளைஞன் மரக்கிளை யொன்றின் மேல் அமர்ந்துகொண்டிருந்தான். அறி ஞர் அவனிடம், ''உன்னிடம் சில கேள்விகள் கேட்கப் போகிறேன்'' என்றார்.

அவன் இறங்கி வந்து ''கேளுங்கள்'' என்றான். படித்திருந்தும் நம்மில் யாராவது ஒருவரைப் பார்த்து உன்னிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன் என்று கூறிப் பாருங்கள். அவர் முகம் பயத்தால் சுருங்கிவிடும். ஆனால் அந்த வாலிபன் சற்றும் தயக்கமின்றி ''கேளுங்கள்'' என்றதும் அறிஞர் அதிர்ச்சியுற்று, ''ஏனப்பா, நான் கேள்வி கேட்பதாகச் சொன்னவுடன் உனக்குத் தயக்கமோ அச்சமோ ஏற்படவில்லையா? என்று கேட்டார்.

வாலிபன், ''உலகில் எல்லாம் தெரிந்தவரும் இல்லை. ஒன்றுமே தெரியாதவரும் இல்லை; நீங்கள் கேட்கும் கேள்விக்குப் பதில் தெரிந்தால் சொல்லப் போகிறேன். தெரியாவிட்டால் உங்களிடமிருந்து தெரிந்து கொள்கிறேன். இதில் அச்சமோ தயக்கமோ எதற்கு?'' என்றான். வாலிபனுடைய கலக்கமற்ற மனநிலை அறிஞருக்குப் புதி ராக இருந்தது. அறிஞர் அவனிடம் ''உலகில் உள்ள ஒளிகளில் சிறந்த ஒளி எது?'' என்று கேட்டார். வாலிபன், ''சூரியஒளி. அதற்கு மேற்பட்ட ஒளி இல்லை'' என்றான். அறிஞரும் அதை ஏற்றார்.

''உலகில் சிறந்த நீர் எது?'' எனக் கேட்டபோது. வாலிபன் ''கங்கை நீர். சிவன் சிரசிலிருந்தும் விஷ்ணுவின் பாதத்திலிருந்தும் வந்து அதில் மூழ்குபவர்களுக்கு மோட்சம் அளிக்கும் கங்கை நீரை விடச் சிறந்த நீர் எது இருக்க முடியும்?'' என்றான். இதைக்கேட்டு அறிஞர் வியப்படைந்தார்.

ஞானக்கதிர்

நன்றி:- ஞானச்சுடர்

## மருதோடைக் குளத்தின் புனரமைப்பு பணி முடிவு



வவுனியா, ஓக.9

வவுனியா மருதோடை குளத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. சுமார் 2.மில்லியன் ரூபா செலவில் இந்தக் குளம் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மழையினால் இந்தக் குளம் சேதமடைந்ததால் 600 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டனர். மேலும் இது புனரமைக்கப்பட்டதன் மூலமாக விவசாயச் செய்கைகள் மேம்படுவதுடன் இதனை அண்மித்துள்ள பகுதிகளில் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புக்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினர் தெரிவித்தனர். மேலும் இந்தக் குளத்தைப் பார்வையிட்ட இவர்கள் குளத்தின் புனரமைப்புக் குறித்து திருப்தி தெரிவித்தனர்.

இதைப் போன்று மேலும் பல குளங்களை இவ்வாண்டு புனரமைப்புச் செய்வதற்கு முயற்சித்து வருவதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜ் தெரிவித்தார். (க-402)

# மாந்தை கிழக்கின் அவலம் நிரந்தர மருத்துவர் இல்லை

## தாதியர்களும் போதியளவு இல்லை

முல்லைத்தீவு, ஓக.9

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் நிரந்தரமாக மருத்துவர் நியமிக்கப்படாமையால் இங்கு வசிக்கும் மக்கள் கடுமையான இடர்களை எதிர்கொள்வதாகத் தெரிய வந்துள்ளது.

மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் இந்த மருத்துவமனை மட்டுமே அமைந்துள்ளது. ஆனால் இந்த வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியரொருவர் நியமிக்கப்படாமையாலும், தாதியர்கள் கடமையில் இல்லாததாலும், இங்குள்ள மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருவதாக மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் உபதலைவர் சி.செந்தூரன் தெரிவித்தார்.

மேலும் கடந்த 5 ஆம் திகதி திடீர் சுகவீனம் அடைந்த சிறுமியொருவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டவேளை அங்கு மருத்துவர் இல்லாததால் உரிய சிகிச்சையைப் பெற முடியவில்லை.

அத்துடன் மாந்தை கிழக்குப் பிரதேசம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த பிரதேச சபை உபதவிசாளர் இங்குள்ள வீதிகள் புனரமைக்கப்படாத நிலையிலும் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படாமலும், உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதிகள் அமைக்கப்படாமலும் உள்ளதாக மேலும் தெரிவித்தார்.

எனவே மாந்தை கிழக்கு மக்களின் அவல நிலையை கருத்தில் எடுத்து இங்கு காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (க-6)


## வசதிகள் இன்றி சந்தை

அக்கராயன், ஓக.9

பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஜெயபுரம் பொதுச் சந்தை அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் காணப்படுவதாக இங்கு வசிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பூநகரிப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் இந்தச் சந்தையில் மரக்கறி வியாபாரம் இடம்பெறும் பகுதி சிமெந்தினால் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் மீன் வியாபாரம் இடம்பெறும் பகுதி வெற்று நிலமாகக் காணப்படுகின்றது. இதனால் மீன் வியாபாரம் இடம்பெறும் பகுதி சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்படுவதோடு வர்த்தகர்களும், நுகர்வோரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் ஜெயபுரம் சந்தையின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)



மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இன்னமும் பூர்த்தியடையாது அரைகுறை நிலையில் காணப்படும் பூநகரிப் பிரதேச செயலகத்தின் கட்டடப் பணிகள். (க-18)

## மோசமான நிலையில் பூநகரி உள் வீதிகள்

அக்கராயன், ஓக.9

பூநகரியின் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி ஆகிய கிராமங்களின் உள் வீதிகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.


இந்தக் கிராமங்களில் சுமார் 2000 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் கிராமத்தின் சகல வீதிகளும் சேதமடைந்த நிலையிலேயே இருப்பதன் காரணமாக மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே முதலில் மீள்குடியமர்வு இடம்பெற்ற பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல கிராமங்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

குறிப்பாக பூநகரி மேற்குப் பகுதியின் கிராமங்கள் கடுமையான போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

தென்னைச் செய்கையும் கடற்றொழிலும் சிறப்பாக இடம்பெறும் இந்தக் கிராமங்களில் போக்குவரத்து நெருக்கடி பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## இடர் முகாமைத்துவப் பயிற்சி வவுனியா இளைஞர்களுக்கு



வவுனியா, ஓக.9

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் சேவைகள் மன்ற உறுப்பினர்களுக்கு இடர் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகளை வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினர் வழங்கியுள்ளனர்.

காற்று, மழை, வெயில் என்பன கடுமையாக இருக்கின்ற காலங்களில் பொது மக்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படும்போது இளைஞர்கள் துரிதமாக செயற்பட்டு உதவிகளை வழங்குவதற்கான முன் ஆயத்தப் பயிற்சியாக இது அமைந்தது. இடர்களின் போது உடனடியாக வழங்க வேண்டிய முதலுதவிச் சிகிச்சை முகாம்களை அமைத்தல், தகவல்களை உரிய தரப்பினருக்கு அறிவித்தல் உட்பட பல்வேறு நுட்பங்கள் இந்தப் பயிற்சியின் போது வழங்கப்பட்டன.

மேலும் இடர்கள் தொடர்பான செய்திகளைப் பரிமாறுவதற்கு வசதியாக 14 வோக்கிடோக்கிச் சாதனங்களும் இடர் முகாமைத்துவ சேவை நிலையத்தின் தலைமைச் செயலகத்தால் வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினருக்கு வழங்கப்பட்டன.

இதற்காக தொலைதொடர்புக் கோபுரம் ஒன்றையும் இடர் சேவைகள் முகாமைத்துவ நிலையத்தினர் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் இம்முறை மடு ஆலய பாதுகாப்புக்கு

## விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன

மன்னார், ஓக.9

மடுமாதா தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வரலாற்று சிறப்பு மிக்க மன்னார் மடு மாதா தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு ஆலயப் பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மடு மாதா திருவிழாவில் கலந்து கொள்வதற்காக பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவ பக்தர்கள் நாடு முழுவதிலும் இருந்து மடுவுக்குச் செல்லவிருக்கின்றனர்.

இவர்களின் பாதுகாப்புக்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் மடு ஆலயத் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக வரும் பக்தர்களும், அவர்களை அழைத்து வரும் வாகன சாரதிகளும் பொலிஸாரின் அறிவுறுத்தல்களை உரிய வகையில் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மது அருந்திவிட்டு வாகனத்தைச் செலுத்தக் கூடாது, தேவைக்கு அதிகமான பயணிகளையோ, பொருள்களையோ, வாகனங்களில் ஏற்றிச் செல்லக் கூடாது எனப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன் பழுதடைந்த வாகனங்களைப் பயன்படுத்தக் கூடாது, போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் வாகனங்களை நிறுத்தக் கூடாது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

# துணுக்காயில் குடிதண்ணீர் நெருக்கடி

அக்கராயன், ஓக.9

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல கிராமங்களில் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள அம்பலப் பெருமாள்குளம் கோட்டைகட்டிய குளம், தென்னியங்குளம், புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், தேறாங்கண்டல், உயிலங்குளம், ஆலங்குளம், கல்விளான், துணுக்காய் உட்பட பல கிராமங்களில் இந்த முறை குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வழக்கமாக ஜூலை மாதத்தில் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்படுவது வழக்கமாகும்.

ஆனால் கடுமையான வறட்சி காரணமாக இந்த ஆண்டு மிகக் கடுமையான நெருக்கடி தோன்றியுள்ளது.

துணுக்காயின் தேறாங்கண்டல் வேட்டையடைப்பு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடிதண்ணீர் தேடி நீண்ட தூரம் அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது.

இதேவேளை துணுக்காயிலுள்ள பல குளங்கள் கடும் வறட்சி காரணமாக வற்றி வருவதால் விவசாய முயற்சிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக இங்குள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-18)

# காலநிலை மாற்றம் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

அக்கராயன், ஓக.9

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் இடர்கள் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் கடந்த 6 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இடர் முகாமைத்துவம் தொடர்பான கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இடர்காலத்தில் சிறார்கள் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். அந்தக் காலத்தில் பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் கிராமிய மட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டமை மகிழ்ச்சியைத் தருகின்றது. இடர்கள் ஏற்படும் காலங்களில் மக்களைப் பாதுகாப்பதில் அரச சேவையாளர்களின் பங்கு அதிகளவில் இருக்க வேண்டும் எனவும் அங்கு அவர் மேலும் தெரிவித்தார்.

'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ச.தேவதாஸ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## சங்கானை மத்தியஸ்தர் சபை நிகழ்வுகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 9

சங்கானை மத்தியஸ்தர் சபைச் செயற்பாடுகள் தற்காலி கமாக சித்தங்கேணி சிறி கணேசா வித்தியாலயத் துக்கு மாற்றப்பட்டுள்ளதாக சபைத் தவிசாளர் அறிவித் துள்ளார்.

இதுவரை சபைச் செயற் பாடுகள் வட்டு இந்துக் கல் லூரியில் நடைபெற்று வந்த நிலையில் குறித்த பாடசா லையில் க.பொ.த. உயர் தரப் பரீட்சை இடம் பெற வுள்ளதால் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தற்காலி கமாக சித்தங்கேணி சிறி கணேசா வித்தியாலயத் துக்கு மாற் றப்பட்டுள்ளது.

(வ-14)

## வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு சமுர்த்தி அலுவலர் 31 பேர் நியமனம்

புதிதாக தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி அலு வலர்களில் 27 பேர் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு நியமிக்கப்பட்டுள்ள னர். அவர்களை உள்ளடக்கி வலி கிழக்கில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் சமுர்த்தி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சமுர்த்தி அலுவலர்களின் பெயர் விவர மும் அவர்களின் கடமை நிலையமும் வருமாறு:-

க.சிவயோகன் (J/257) இருபாலை தெற்கு, த.ஜெயசீலன் (J/258)இருபாலை கிழக்கு, த.கோகிலானந்தன்(J/259) கல்வி யங்காடு, ம.குமுதினி (J/260) கோப்பாய் தெற்கு, சே.மதனகோபி (J/261) கோப்பாய் மத்தி, அ.பிரதீபன் (J/262) கோப்பாய் வடக்கு, க.பிரேமிலா (J/263) கோப் பாய் மேற்கு,

கு.சிவகுமார் (J/264) கோப்பாய் வடக்கு, ச.உமாகாந்தன் (J/ 265) உரும்பிராய் மேற்கு, ப.சிந்துஜா (J/266) உரும்பிராய் கிழக்கு, த.கேதீஸ்சன் (J/ 267) ஊரெழு, ந.லோ கேஸ்வரன் (J/268) நீர்வேலி தெற்கு,

ப.சேவற்கொடியோன் (J /269) நீர்வேலி வடக்கு, சி.தர்சன் (J/ 270) நீர்வேலி மேற்கு, ம.சுதர்சன் (J/271) சிறுப்பிட்டி கிழக்கு -

ச.தர்சிகா (J/272) சிறுப்பிட்டி மேற்கு, ந.நிலெக்சன் (J/273) புத்தூர் மேற்கு, வி.தனேஸ்வரன் (J/274) புத்தூர் வடக்கு, ப.பிரவிந் (J/275) நவக்கிரி, செ.பிரேம தாஸ் (J/276) ஆவரங்கால் கிழக்கு, சி.கேதீஸ்வரன் (J/277) ஆவரங்கால் மேற்கு, அ.அச்சுதன் (J/ 278) புத்தூர் கிழக்கு, அ.ஜெயசிங்கம் (J/279) அச்செழு, த.றெதீஸ் வரன் (J/280) வாதரவத்தை-

செ.சிவகுமார் (J/281) பத்தமேனி, ந.ஜெயக் குமார் (J/282) தம்பாலை கதிரிப்பாய், வி.சத்தியசீலன் (J/283) இடைக்காடு, இ.மயூரன் (J/284) வள லாய், த.தர்மதுர்க்கா (J/285) அச்சுவேலி வடக்கு, மா.சந்திரசேகரம் (J/286) அச்சுவேலி தெற்கு, அ.வதனராசா (J/287) அச்சுவேலி மேற்கு. (ஒ-11)

## மாவிலித்துறை றோ.க.த.க. பாடசாலையின் தமிழ் விழா



யாழ்ப்பாணம், ஓக. 9

நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க.த.க. பாடசாலையின் தமிழ்விழா திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் கே.அகிலாண்டேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தீவக வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோன்குயின்ரஸ், பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக்ஷியன், நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் திருமதி.சாரதா கிருஷ்ணதாஸ், நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத் தலைவர் அ.வெ.அரி॥। நாயகம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தமிழ் விழாவையொட்டி இடம்பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன்குயின்ரஸ் வழங்கிக் கௌர வித்தார். மாணவர்களின் கவியரங்கம் கலை நிகழ்வுக ளும் இடம்பெற்றன. (வ-7)

## வணிகப் போட்டி

தென்மராட்சி, ஓக. 9

தென்மராட்சி க்ல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11, 12, 13 ஆகிய வகுப் புக்களில் வணிக பாடம் கற்கும் மாணவர்களுக் கான வலய மட்ட வணிகப் போட்டிகள் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக் கம் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியா லயத்தில் நடைபெறும்.

குறு வினா, கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகள் 3 பிரிவு களாக நடத்தப்படும்.

தரம் 10 வகுப்பு - பிரிவு ஒன்றிலும் தரம் 11 வகுப்பு - பிரிவு இரண்டிலும்

தரம் 12, 13 வகுப்புக்கள்- பிரிவு மூன்றிலும் ஆக போட்டிகள் நடத்தப்படும்.

போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாண வர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவர் என வலயக் கல்விப் பணிப் பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

## செஞ்சிலுவை சங்கம் நடத்தும் இலவச கணினி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஓக. 9

நெடுந்தீவுப் பிரிவு செஞ் சிலுவைச் சங்கத்தால் நடத் தப்படும் இலவச கணினி வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெறவிரும்பும் மாணவர் கள் இந்த மாத இறுதிக்குள் அதில் இணைந்து கொள் ளுமாறு யாழ்.செஞ்சிலு வைச் சங்கத் தலைவர் கு.பாலகிருஷ்ணன் அறி வித்துள்ளார்.

பயிற்சி வகுப்புகள் கடந்த வியாழக்கிழமை ஆரம் பிக் கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டுக் கீழ் உள்ள குடும் பங்களைச் சேர்ந்த 15 மாணவர்கள் தற்போது கணி னிப் பயிற்சியில் இணைந் துள்ளனர்.

கணினிப் பயிற்சி நெறி யோடு, அரச ஊழியர்க ளுக்கான ஆங்கில வகுப் புக்களும் விரைவில் ஆரம் பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-7)

## பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள்

யாழ்ப்பாணம், ஓக. 9

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் கிராம மட்டத்தில் அமைக் கப்பட்ட வாழ்வெழுச்சித் திட்ட கிராம மட்டக் குழுக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 75 பேருக்கு கோழி வளர்ப்புக் கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

பிரதேச கால் நடை அபிவிருத்தித் திணைக்களம் மூலம் பய னாளி ஒருவருக்கு 10 கோழிக் குஞ்சுகள் வீதம் வ்ழங் கப்படவுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்தார். (வ-7)

## இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நட்பு வட்டாரம் விரி வடையும். வெளியூரிலிருந்து நற் செய்திகள் வந்துசேரும். உத்தி யோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்.

**இடபம்:** பிரியமானவர்களின் சந் திப்பு நிகழும். அரசியல் வாதிக ளின் சந்திப்பு நிகழும். வெளி வட்டாரத் தில் மதிக்கப்படுவீர்கள். புண் ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். உத்தி யோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கை பிறக் கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தி யோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**கடகம்:** மனதில் பட்டதைப் பளிச் சென்று பேசுவீர்கள். பணப்பற்றாக் குறை நீங்கும். அரச கரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். உங்களை நீங் களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உங்கள் வாயை சிலர் கிளறி வேடிக்கை பார்ப்பார்கள். அதிகம் பேச வேண்டாம்.

**கன்னி:** எதிர்காலம் பற்றிய கவ லைகளும் வீண் விமர்சனங்களும் ஏற்படும். தாழ்வுமனப்பான்மை வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலை யாள்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும்.

**நாளை**

ஆடி-25 சனிக்கிழமை 10.08.2013
திதி: சதுர்த்தி பி.இ.5.49 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.இ. 02.01 வரை
சுபநேரம்: 03.04 - 04.34 வரை
இராகுகாலம்: 09.04 - 10.34 வரை

**துலாம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக் குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப் படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**விருச்சிகம்:** நட்பு வட்டாரம் விரி வடையும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப் பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**தனுசு:** சில தினங்களாகத் தடைப் பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத் தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தி யோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.

**மகரம்:** வேலைச்சுமையால் சோர் வாகக் காணப்படுவீர்கள். முன்கோபத் தால் பகை உண்டாகும். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதி மொழியும் வழங்க வேண்டாம்.

**கும்பம்:** வீண்செலவுகளைத் தவிர்ப் பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக் கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மீனம்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர் களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 8 | 5 | |
| | 1 | 5 | | 8 | | 3 | | 9 |
| | | 9 | | 1 | 2 | | 6 | 4 |
| | 6 | 4 | | 5 | 7 | | | |
| | 7 | | 6 | | 1 | | 4 | |
| | | | 2 | 3 | | 6 | 7 | |
| 5 | 3 | | 4 | 2 | | 1 | | |
| 7 | | 8 | | 6 | | 2 | 3 | |
| | 9 | 2 | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 1 | 2 | 7 | 5 | 3 | 4 | 9 |
| 7 | 4 | 5 | 3 | 9 | 6 | 8 | 2 | 1 |
| 9 | 2 | 3 | 1 | 8 | 4 | 5 | 7 | 6 |
| 6 | 8 | 9 | 5 | 3 | 7 | 4 | 1 | 2 |
| 1 | 5 | 4 | 8 | 6 | 2 | 9 | 3 | 7 |
| 2 | 3 | 7 | 4 | 1 | 9 | 6 | 5 | 8 |
| 5 | 1 | 2 | 6 | 4 | 8 | 7 | 9 | 3 |
| 4 | 9 | 6 | 7 | 2 | 3 | 1 | 8 | 5 |
| 3 | 7 | 8 | 9 | 5 | 1 | 2 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



யாழ். இளையதம்பி இந்து வித்தியாலய இன்டரக்ட் கழக மாணவர்களின் இரண்டாவது சின்னம் சூட்டும் விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தின் தலைவர் நீலாதர்மகுலசிங்கமும், கௌரவ விருந்தினர்களாக பொருளாளர் சு.நிமல்ஷன், முன்னாள் தலைவர்கள் சிவசங்கர் மற்றும் சுரேந்திரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். சின்னம் சூட்டப்பட்ட மாணவ-மாணவிகளுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம். (ஒ)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக.9

யாழ். கைதடி இணுங்கித் தோட்ட கந்தசுவாமி ஆலய நற்பணிக் குழுவினரின் வெளியீடான முத்துக் குமரனின் முத்துச்சரம் இசைப் பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை நடைபெற வுள்ளது.

பாடல்களை வேலணை யூர் சுரேஷ், கு.வீரா, சயந்தன், ஞானம் ஆகி யோர் இயற்றியுள்ளனர். (ஒ)

★ ★ ★

''எம் தாயே முத்துமாரி'' இசைப்பாடல் இறுவட்டு வெளி யீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேலணை பெருங் குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய மணி மண் டபத்தில் நடைபெற வுள்ளது.

மேற்படி ஆலய அம்மன் மீது பாடப்பெற்ற இப் பாடல் களை தென்னிந் திய பாடகர்களான மனோ, மாலதி, ரி.எல். மகாரா ஜன், கிருஸ்ண ராஜ் மற் றும் நம் நாட்டுப் பாடகர் களான ஜீ.சாந்தன் சுகு மார், சந்திரமோகன், வேலணை சிவதர்ஷிகா, ரி.மேரி ஆகியோர் பாடி யுள்ளனர். (ஒ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக.9

நல்லூர் பிரதேச செயலகத்துக் குட்பட்ட ஆலயங்களின் சமூக நலநோம்பு அபிவிருத்தி ஒன்றியம் சின்மயா மிஷனுடன் இணைந்து நல்லூர் கந்தன் திருவிழாவை முன்னிட்டு பஜனை பாடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான கலந்துரை யாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற வுள்ளது.

நல்லூர்த் திருவிழா நிறைவடைந் ததும் வெள்ளிக்கிழமைகளில் ஆல யங்களில் பஜனை பாடுவதற்கு ஒன்றியம் ஒழுங்குகளை மேற்கொண் டுள்ளது. (ந-7)

## மொழிபெயர்ப்பாளர் பரீட்சையில் நால்வர் சித்தி

நீதி அமைச்சினால் நடத்தப் பட்ட அரச அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளர் பரீட்சையில் இந்த வருடம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு பேர் சித்தியடைந்துள்ளனர். சித்திய டைந்தோர் பெயர் விவரம் வருமாறு:-

ப.பத்மகுமாரா-(தெல்லிப்பழை தமிழ்-ஆங்கிலம்), எஸ். வைகுந்தவாசன் (கற்கோவளம் தமிழ்-ஆங்கிலம்), க.றமேஸ் (புலோலி தமிழ்- ஆங்கிலம்), எஸ்.திருக்குமார்-(வரணி தமிழ்- ஆங்கிலம்). (ஒ-11)

## இன்று மின்சாரம் தடைப்படும்

யாழ்ப்பாணம், ஒக.9

புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வல்லிபுரம் பிரதேசம், வடமராட்சி கிழக்கு பிரதேசம், சோரன்பற்று, மாசார் பிரதேசம் ஆகிய பகுதிகளின் மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறி யியலாளர் தெரிவித்துள்ளார். (ந)

## நிர்வாகிகள் தெரிவு

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய புதிய நிர்வாக சபைத் தெரிவு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கேட்போர் கூடத்தில் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக் கரசன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது 2013-2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றது. அவர்களது விவரம் வருமாறு:-

தர்மகர்த்தாசபை நிரந்தர போஷகர்களாக இ.இரவீந்திரகுமார், ச.சித்திரவேல்

ஆலய தர்மகர்த்தாசபை போஷகர்களாக அ.இலங்கைநேசன், ப.தயாபரன்

நிர்வாக சபையின் தலைவராக- செ.யுகேந்திரன், உப தலைவராக- மா.லிங்கநாதன், செயலாளராக- சி.க.லட்சுமணன், உபசெயலாளராக- செ.இர வீந்திரன், பொருளாளராக- மு.மு.நடராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ந)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆசிரியை
செல்வி இ. வசந்தி
அவர்களின் அன்புத் தந்தை
சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி (சிவசாமி)
(ஓய்வுநிலை அதிபர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வண். நாவலர் ம.வி.யாழ்ப்பாணம். நலன்புரி கழகம்
(30336) (6)

## கண்ணீர் அஞ்சலி

### நடராசா கருணாகரன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்-அதிசிறப்பு)

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றி நேற்று (08.08.2013) வியாழக்கிழமை சிவபதமடைந்த நடராசா கருணாகரன் அவர்களுக்கு எமது கண்ணீர்த் துளிகளை செலுத்தி அஞ்சலி செய்வதோடு அன்னாரைப் பிரிந்து துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அவர்களின் துன்பத்தில் நாமும் பங்கெடுக்கின்றோம்.

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், உடுவில்.
(வி.10794) (10.6.5)

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



### இராசையா சரவணபவன்

(ஆசாரி, பழனி)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சரவணபவன் 07.08.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கலட்சுமியின் அன்புக் கணவரும், ஆதவன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்), அற்புதராஜன் (டுபாய்), ஆதித்தன் (கட்டார்), விஜிதா (லண்டன்), அருளகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன் (லண்டன்), கலைவாணி (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனும், பவீனாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.30 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (30326)(6)

தகவல்: குடும்பத்தினர்.
T.P- 021 225 5123

## சிறப்புற நடந்த முத்தமிழ் விழா

அளவெட்டி, ஒக. 9

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முத்தமிழ் விழாவும் ''ஸ்கந்தவரோதயம்'' நூல் வெளியீடும் கல்லூரியின் ஒரேற்றர் சுப்பிரமணியம் கலையரங்கில் அதிபர் இ.ஈஸ்வர தாசன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வு கல்லூரியின் தமிழ்ச் சங்க ஏற்பாட்டில் கலை பண்பாடு, பாரம்பரிய சமூக கலாசார விழுமியங்களைத் தழுவியதாக அமைந் திருந்ததுடன் இயல், இசை, நாடகத் தமிழ் ஆகிய முத்தமிழின் சிறப்பையும், இனத்தின் இருப்பின் அடையாளத்தையும் வெளிப் படுத்துவதாக அமைந்தது.

நிகழ்வில் முத்தமிழ் விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாட சாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கவிதை, சிறு கதைப் போட்டி களில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாண வர்களுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட மாகாண கல்வி பண்பாட்டலுவல் கள் விளையாட்டுத் துறை அமைச்சின் மேலதிக செயலாளர் பா.விக்னேஸ்வர னால் பரிசில்கள் வழங் கப்பட்டன.

'ஸ்கந்தவரோதயன்' மலர் வெளியீட்டை அதிபர் இ.ஈஸ்வர தாஸ் வெளியிட்டு வைக்க பிரதம விருந் தினர் பெற்றுக் கொண் டார். (ந-36)

## மரண அறிவித்தல்கள்

### தியாரட்ணம் ரமேச்சந்திரநாதன்



கோண்டாவில் மேற்கு, சைவப்பாடசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொறன் ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட தியாரட்ணம் ரமேச் சந்திரநாதன் கடந்த (07.08. 2013) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் தியாரட்ணம் - கமலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மகனும், பவானியின் அன்புக் கணவரும், சர்மிலா, அஜிதன், றுபேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சூரியநாதன் (சூரி அண்ணா), கேமநாதன் (கேம அண்ணா, நிரு நியூசன் சென்ரர்- கோண்டாவில்) ஆகியோரின் சகோதரரும், சபாரட்ணம்- சறோஜினி தம்பதியரின் பாசமிகு மருமகனும், குமுதினி, காலஞ்சென்ற சாந்தினி ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (09.08.2013) வெள்ளிக் கிழமை கனடா (ரொறன்ரோவில்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ரொறன்ரோ,
கனடா.
001 647 244 8215 (30327)(3.6.11)

தகவல்:
T.சூரியநாதன்
(சகோதரன்)

### சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி (சிவசாமி)

(இளைப்பாறிய அதிபர் - புங்குடுதீவு குறிகட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்)



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் கன்னாதிட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி நேற்று முன்தினம் (07.08.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருமூர்த்தி சாஸ்திரியார், இராமாசிப்பிள்ளை, நாகமணி, நாகமுத்து ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை- பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திருமேனிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை) யின் அன்புக் கணவரும், வசந்தி (ஆசிரியை - யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்) யின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, சிவக்கொழுந்து மற்றும் பராசக்தி ஆகியோரின் அன்புச்சகோதரனும், புனிதவதி, காலஞ்சென்ற முத்துலிங்கம் (வர்த்தகர்) மற்றும் அருள்லிங்கம் (இளைப்பாறிய கிராம சேவையாளர், வேலணை), செல்லத்துரை, மரகதம்பிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மார்க்கண்டு (வர்த்தகர்), மற்றும் வரதலட்சுமி, லோகநாயகி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2013) வெள்ளிக் கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30,
கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இ.வசந்தி (மகள்).
(30334) (10,6)

# காணவில்லை



சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைச்
சேர்ந்த 23 வயதுடைய
**நித்தியானந்தன்**
**சுகிர்த்தா (காந்தரூபன்)**
என்பவரை 03.06.2013
அன்றிலிருந்து காணவில்லை.
கண்டவர்கள் கீழ்க்கண்ட
இலக்கத்துக்கு அறியத்தரவும்.
(தகுந்த சன்மானம்
வழங்கப்படும்)

தொடர்பு
**077 651 2295**

(30337)(6.11)


# இன்று நடைபெறும் ஜோதிலிங்க இரத பவனி

யாழ்ப்பாணம், ஓக.9

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினால் நடத்தப்பட்டுவரும் ஜோதிலிங்க இரத பவனி இன்று வெள்ளிக்கிழமை வடமராட்சி, வலிகாமம், கிளிநொச்சி பிரதேசங்களில் நடைபெறவுள்ளது.

இதில் வடமராட்சி பிரதேசத்தில் காசி விஸ்வநாதர் ஜோதிலிங்க இரதபவனி காலை 6 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோயிலிலும், நண்பகல் 12 மணிக்கு கோயிற் கட வைப் பிள்ளையார் ஆலயத்திலும் பிற்பகல் 2 மணிக்கு கலிகைக் கந்தன் கோயிலிலும் மாலை 5மணிக்கு யாக்கரைப் பிள்ளையார் ஆலயத்திலும், இரவு சிந்தா மணிப் பிள்ளையார் ஆலயத்திலும் நடைபெறவுள்ளன.

வலிகாமம் பிரதேசத்தின் ஸ்ரீ சோமநாதர் ஜோதிலிங்க இரத பவனி பிற்பகல் 3.30 மணிக்கு வழக்கம்பரை அம்மன் ஆல யத்தில் இடம்பெறவுள்ளது. கிளிநொச்சி பிரதேசத்தில் இராமேஸ்வரர் ஜோதிலிங்க இரத பவனி காலை 6 மணிக்கு பொறிக் கடவை அம்மன் ஆலயத்திலும், பிற்பகல் 3 மணிக்கு குமரபுரம் முருகன் ஆலயத்திலும், மாலை 6மணிக்கு ஏ-9 இயக்கச்சி அம்மன் ஆலயத்திலும் இடம்பெறவுள்ளன. (ந-14)


## கூலி ஒப்பந்தகாரர் தேவை

01. கூரைவேலை, சீலிங் தச்சுவேலை ஒப்பந்தகாரர்கள்
02. கட்டட மேசன் கூலி வேலை ஒப்பந்தகாரர்கள்.

தொடர்பு: 077 366 2307

## AAT வகுப்புக்கள் ஆரம்பம்

வெள்ளவத்தையில் AAT,I,II,III புதிய பிரிவுகள் ஆரம்பம். டிசெம்பர் மாத பரீட்சைக்கானது. விண்ணப்ப முடிவு திகதி 07.08.2013. ஆரம்பம் 10.08.2013. Sun British College

தொடர்பு: 077 971 3221, 024 222 6649

(35213)(3.6.11)



# DISTRICT SECRETARIAT, JAFFNA.
# INVITATION FOR BIDS

1. The Chairman, Procurement Committee, District Secretariat, Jaffna on behalf of the Government Agent / District Secretary, Jaffna District now invites sealed bids from eligible and qualified bidders for the as described below the schedule.
2. Bidding will be conducted through National Competitive bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction on the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the Planning Branch , District Secretariat, Jaffna. , and inspect the Bidding Documents at the same address on any working day from 9.00 hrs to 15.00 hrs. Contact numbers are : Phone: 021 222 2427 /021 222 7583
5. A Complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Planning Secretariat, District Secretariat, Jaffna from 14.08.2013 until 21.08.2013 from 9.00 a.m to 13.00 p.m upon payment of a non – refundable fee of Rupees one thousand (Rs.1000/=).
6. Sealed Bids shall be sent in duplicate by registered post addressed to the Chairman, Procurement Committee, District Secretariat, Jaffna or deposited in the Tender Box available at the Administration Branch, District Secretariat, Jaffna on or before 14.00 p.m on 28.08. 2013. Late bids will be rejected. Bidders should write the job. Description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened at 3.00 p.m on 28.08 .2013 in the presence of the bidders or bidders' representatives who choose to attend.
7. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject bids will be the final regarding the bids.
8. Bid shall be valid for a period of 90 days from the last date fixed for receiving of Bids or any extended period.
9. The details of the bids are given below.

| Bids No | Description of Work | Estimated amount (million) | Contract Period (months) | Minimum Grade of ICTAD (Building) | Bids Security (Rs) | Non refundable fee(Rs) |
|---|---|---|---|---|---|---|
| JK/DPS/VW/CON/01/2013 | Formation of Public Playground & Construction of foundation at Delft | 6.63 | 4 | C6 | 66,000.00 | 1000.00 |
| JK/DPS/VW/CON/02/2013 | Reconstruction of Queen Tower Veethy at Delft | 3.001 | 2 | C7 | 30,000.00 | 1000.00 |
| JK/DPS/VW/CON/03/2013 | Construction of Shopping Complex at marketplace with walls at Delft | 8.82 | 4 | C6 | 88,000.00 | 1000.00 |
| JK/DPS/VW/CON/04/2013 | Construction of Toilets at Kachchathevu-100Nos (Gents50 and Ladies50) | 3.499 | 2 | C7 | 35,000.00 | 1000.00 |
| JK/DPS/VW/CON/05/2013 | Reconstruction of Custom's Road with culvert, drainage, Retaining Wall, Channel and Parapet wall at Kayts | 7.679 | 3 | C6 | 77,000.00 | 1000.00 |
| JK/DPS/VW/CON/06/2013 | Reconstruction of Mankuli Road at Kayts | 6.287 | 2 | C6 | 63,000.00 | 1000.00 |
| JK/DPS/VW/CON/07/2013 | Reconstruction of St. Peter Road at Kayts | 6.745 | 2 | C6 | 67,000.00 | 1000.00 |
| JK/DPS/VW/CON/08/2013 | Reconstruction of Kenikkuly Road at Nainativvu West | 7.975 | 2 | C6 | 80,000.00 | 1000.00 |
| JK/DPS/VW/CON/09/2013 | Reconstruction of Tholilalarpuram Veethy at Punguduthivu | 8.842 | 2 | C6 | 88,000.00 | 1000.00 |
| JK/DPS/VW/CON/10/2013 | Reconstruction of Cemetery Road at Velanai | 4.356 | 2 | C7 | 44,000.00 | 1000.00 |

**Suntharam Arumainayaham,**
**Government Agent/ District Secretary,**
**Jaffna District.**

(C10797)(10.6)


## சிறுமி, பெண்ணின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஓக.9

பெயர், முகவரி தெரியாத உருக்குலைந்த நிலையில் சிறுமியொருவரின் சடலமும் பெண்ணொருவரின் சடலமும் கடந்த 31 ஆம் திகதி மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரு சடலங்களும் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. எனவே இந்தச் சடலங்களைஉறவினர்கள் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## விருந்தில் தொண்டைக்குள் சிக்கிய மீன் முள்ளு

உறவினர் வீட்டு விருந்தில் கலந்து கொண்ட இளம் பெண்ணுக்கு இரவு உணவின் போது மீன் முள்ளு தொண்டைக்குள் சிக்கியது. இந்தச் சம்பவம் புதன்கிழமை சாவ கச்சேரி கச்சாய் வீதியில் இடம் பெற்றது. மீன் முள்ளு தொண்டைக்குள் சிக்கிய நிலை யில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக் கப்பட்டார். (ந-9)


## சிறுநீரகம் தேவை

41 வயதுடைய ஆண் நோயாளி ஒருவருக்கு O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. சன்மானம் வழங்கப் படும்.

தொடர்பு:
077 955 9443, 077 903 0383 (30193)(3.6.11)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கு இல.11, மஞ்சவனப் பதி ஒழுங்கையில் சகல அடிப்படை வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங் களுக்கு முன்னுரிமை.

தொடர்பு: 071 631 3357
(களகசபை [illegible]) (30338)(6.11)

## வீடுவளவு விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு, நீர்வேலியில் சிறிய வீட்டுடன் கூடிய 16 பரப்பு 14 குளி வீடுவளவு விற்பனைக்குண்டு.

தொ.பே. 077 968 4186 (30328) (6)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி - சங்கத்தானை சாரதா வீதியில் சாவகச்சேரிக்கு சமீபமாக றோட்டு முகப்புடைய 3 பரப்பு சதுரக் காணி விற்பனைக்குண்டு.

தொ.பே. 077 618 5235 (29616) (6)

# குடிதண்ணீர் கேட்ட மக்களைப் படையினர் சுட்டுத் தள்ளுவார்கள் என நினைக்கவில்லை

## வெலிவேரிய விகாராதிபதி கூறுகிறார்



வெலிவேரிய, ஓக. 9

குடிதண்ணீர் கேட்டுப் போராட்டம் நடத்திய மக்களை சுட்டுத் தள்ளுவார்கள் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை.

பொதுமக்களுக்காக குரல் கொடுத்த எனக்கும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வெலிவேரிய ரத்து பஸ்வல விகாரையின் விகாராதிபதி சிறிதம்ப தேரரர் தெரிவித்தார்.

கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக புதன்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் பேசுகையில் கூறியதாவது:-

'' எது நடந்தாலும் நீதிக்காக நாம் தொடர்ந்து போராடுவோம். இன்று எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சுத்தமான குடிதண்ணீர் பெற்றுத் தருமாறு அரசை வலியுறுத்தி வந்தோம். அமைதியாக கோரிக்கைகளை முன் வைத்த மக்களை படையினர் தாக்கியுள்ளனர். அரச படைகளால் எமது மக்கள் உயிரிழந்துள்ளனர். இதுவரை சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாறாக இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. நான் தலைமை வகித்து பல போராட்டங்களை முன்னெடுத்ததால் இன்று உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளேன். சாவுக்கு நான் பயந்தவன் அல்லன்'' என்றார். (ஓ-10)

> நான் தலைமை வகித்து பல போராட்டங்களை முன்னெடுத்ததால் இன்று உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளேன்.

# பாதசாரிகள் சட்டத்தை மீறிய 400 பேர் சிக்கினர்

கொழும்பு,ஓக.9

மாத்தறை நகரில் மோட்டார் வாகனப் பொலிஸ் பிரிவினரால் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த நடவடிக்கையின்போது பாதசாரிகள் சட்டத்தை மீறிய 400 பேர் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

மூன்று மணித்தியாலயங்களாக மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட நடவடிக்கையில் மோட்டார் வாகனப் பொலிஸ் பிரிவின் 40 பொலிஸ் உத்தி யோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மஞ்சள் கோட்டுக் கடவையைப் பயன்படுத்தாது பாதசாரிகள் தமது எண்ணப்படி வீதிச் சட்டங்களை மீறி தவறான விதத்தில் வீதியைக் கடந்து கொண்டிருந்த சந்தர்ப்பங்களில் அவர்கள் சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டனர்.

பொலிஸாரிடம் சிக்கிக் கொண்ட 400 பேர்களினது அடையாள அட்டைகளில் அடங்கியுள்ள தகவல்கள் பதியப்பட்டதன் பின்னர் அவர்கள் அனைவரும் ஒரே இடத்துக்கு வரவழைக்கப்பட்டு, முதல் கட்டமாக அவர்களுக்கு வீதியைக் கடப்பது சம்பந்தமாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 03 . 04 . 1947

மறைவு 10 . 07 . 2013

**அமரர் தேவசகாயம் யேசுதாசன்**
(யேசுரெட்ணம்)

பாரிலோர் பிள்ளையாகி அன்புடைக் கணவனாகி
பாசத் தந்தையாகி மாமனாகி அன்புத் தாத்தாவாகி
ஊரிலோர் உறவுமாகி உத்தம கணங்கள் தாங்கி
சீரிய வாழ்வு வாழ்ந்த சிறப்புடைக் குடும்பத் தலைவரே!
பிரிந்தும் ஓர் திங்கள் நெடுந்தூரம் சென்றீரே
உமது ஆன்மா சாந்தியடைய புனித அந்தோனியார்
மூலமாக இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.

என்றும் நினைவில்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

பாஷையூர்.

(30349) (8)

## 2 ஆம் ஆண்டும் 48 ஆவது பிறந்த நாளும்



வையகம் 09.08.1965

வானகம் 11.01.2011

**அமரர் நல்லதம்பி தயாபரன் (தம்பி)**

கண் மலர்ந்த நாள் இன்று; வாழ்த்த நீ இல்லை
விண் சென்ற உன்னைக் காண
கண்கள் இங்கு ஏங்குதன்றோ-
கடவுளாகிப் போன உன் கண்களின் பார்வை
தினம் எம்மைக் கொல்லுதடா...
எங்கிருந்தாலும் வாழ்க!
ஓம் சாந்தி!

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(29678) (6.11)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04.06.1944

மறைவு 21.07.2012

**அமரர் நாகலிங்கம் தியாகராசா**

திதி: திருதியை

ஒன்றல்ல இரண்டல்ல
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும்
வாழும் உங்கள் நினைவுகள்

குடும்பத்தினர்.

சைவப் பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

(30312) (8.11)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28 . 06 . 1993

மறைவு 12 . 05 . 2013

**பாலசுந்தரம் ரசாத்**

என் அருமை மகனே!
எத்தனை நாள்கள் சென்றாலும்
உன் பசுமையான நினைவுகள்
என்றும் எமைவிட்டு நீங்காது

62, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, (மாம்பழம் சந்தி)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன்.பிரேமகுமார் ஜிலக்ஷன்**

(திதி: திரயோதசி)

தோற்றம் 2005.08.18


மறைவு 2012.08.20

*ஆறாது ஆறாது அழுதாலும் ஆறாது*
*தீராது தீராது உன் பிரிவு தீராது என்றும்.*

உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா.

சிவகுலவீதி,
உரும்பிராய் மேற்கு.
உரும்பிராய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 06.06.1947

மறைவு 10.07.2013

அமரர்
**தம்பிப்பிள்ளை பரமேஸ்வரன்**

கடந்த (10.07.2013) அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் தம்பிப்பிள்ளை பரமேஸ்வரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.08.2013) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் நடைபெற இருப்பதனால், தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் தெற்கு.
இணுவில்,சுன்னாகம்.

[30340][6.8]

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## வீரசிங்கம் சிவஞானம்

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், ஸ்ரேசன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சிவஞானம் (06.08.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணேசன்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும் நாகரஞ்சினி, நாகரூபி, நாகநந்தினி, மயூரதன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஜெயக்குமார், சோதிலிங்கம், ஆகியோரின் அன்பு மாமனும் தாமிரா, சிந்துஜன், வேணூஜா ஆகியோரின் அன்புப் பேரனும் பரமசாமி, சதாசிவம், சிவபாலன், மகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோதியாம்பாள், பவானி, ஜெகதீஸ்வரி, கணேசன், செல்வராஜா, பரமலிங்கம், பழனிலிங்கம், செல்வலிங்கம், சிவலிங்கம், புஸ்பலிங்கம்,அருள்லிங்கம்,ஞானசோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 14/3, ஸ்ரேசன் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

(31201) (6)

## வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்
## கூறுவிலை கோரல்

TSEP செயற்திட்டத்தின் கீழ் பின்வரும் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

வகை - I

| பொருள்களின் வகை | எண்ணிக்கை |
|---|---|
| Desktop Computers | 11 |
| Duplo Machine | 01 |
| Scanner | 01 |
| Dot-matrix printer | 01 |
| Camera | 02 |
| Multimedia Projector | 01 |

வகை - II

| பொருள்களின் வகை | எண்ணிக்கை |
|---|---|
| Conference Table with 24 Chairs | 01 Set |
| Office Table | 01 |
| Office Chair | 10 |
| Filling Cabinet | 05 |
| Steel Cabinet | 03 |
| Executive Table | 02 |
| Executive Chair | 02 |

மேற்படி பொருள்களை வழங்க முன்வருவோர் தமது கேள்விப்பத்திரங்களை மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலக நிதிக்கிளையில் 14.08.2013 ஆம் திகதி மு.ப 10 மணியிலிருந்து 26.08.2013 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூ 100/= ஐ செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

கொள்வனவு செய்வதற்காக கோரப்பட்டுள்ள பொருள்களில் வகை-I, வகை- II இற்கும் தனித்தனியே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் மூடிய கூறுவிலைகள் அனைத்தும் 27.08.2013 மு.ப 10 மணிவரை வலயக் கல்வி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கூறுவிலைகள் அனைத்தும் 27.08.2013 மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும். மேலதிக விவரங்களை 021 224 1573 இலக்க தொலைபேசியூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**செ. சந்திரராஜா,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்**
**வலிகாமம்.**

09.08.2013

(சி/10773)(10,16.,14)

# 'பேஸ்புக்' கால் வந்த வில்லங்கமே மாணவன் தாக்கப்பட்டதாக கூறும் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.09

முகப்புத்தகத்தினால் (பேஸ்புக்) வந்த வில்லங்கமே தென்மராட்சியில் பாடசாலை மாணவன் தாக்கப்பட்டதாக அவனது உறவினர்களால் கூறப்பட்ட சம்பவம்.

உண்மையில் மாணவன் தாக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த மாணவன் செய்து வந்த முறைகேடான செயற்பாடுகள் குறித்தே ஆசிரியர்கள் மாணவனை விசாரணை செய்துள்ளனர். தனது தவறை மறைக்கவே குறித்த மாணவன் பொய் முறைப்பாட்டைக் கொடுத்துள்ளான். இவ்வாறு குறித்த பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் விளக்கமளித்துள்ளனர்.

கொடிகாமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர் ஒருவரை ஒன்பது ஆசிரியர்கள் சேர்ந்து தாக்கினர் என்ற செய்தி தொடர்பில் விளக்கம் தருகையிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர். இது குறித்து அவர்கள் உதயனுக்கு கூறியவை வருமாறு;

சம்பவத்துடன் தொடர்புடைய மாணவனும் மட்டுவிலைச் சேர்ந்த மேலும் நான்கு மாணவர்களுமாக ஐந்து பேர் வெவ்வேறு பெயர்களில் முகப் புத்தகத்தை உருவாக்கியுள்ளனர். இதில் குறித்த பாடசாலை ஆசிரியர்களது பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் ஆசிரியர்கள், பொறுப்பாசிரியர்களது முகப்படங்களை வேறுநபர்களின் பட உருவங்களில் பொருத்தியுள்ளதுடன் கலாசாரச் சீர்கேடான படங்களையும் அவற்றில் இணைத்து முகப்புத்தகங்களில் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மாணவனை விசாரித்தனர். இதனை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி குறித்த மாணவன், தான் ஆசிரியர்களால் தாக்கப்பட்டதாகக் கூறி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்று பாடசாலைத் தரப்பினர் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இது சம்பந்தமாக குறித்த பாடசாலை அதிபர் கூறியதாவது; முகப்புத்தகங்களைப் பயன்படுத்துவதாக இருந்தால் நல்ல நோக்கத்துக்காகப் பயன்படுத்துதல் வேண்டும். சிலர் அவற்றைத் தவறாகப் பயன்படுத்த முற்படுகின்றனர்.

இவ்வாறானவர்கள் தொடர்பில் பெற்றோர் அவதானமான இருக்க வேண்டும் - என்றார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த குறித்த மாணவனே தன்னை 9 ஆசிரியர்கள் தாக்கினர் என்று கூறி கடும் காயங்களுக்குள்ளாகியிருப்பதாக தெரிவித்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் குறித்த மாணவனுக்கு எதுவித காயமும் ஏற்பட்டிருக்கவில்லை என்று யாழ். போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி பணிமனை உறுதிப்படுத்தியுள்ளது.

அந்த மாணவன் கடுமையாகப் பாதிக்கப்பட்டதாக அவரின் தாய் வழி உறவினரான பெண் ஆசிரியர் ஒருவர் தெரிவித்திருந்தார். சாவகச்சேரி வைத்தியசாலையில் மாணவன் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகவே போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டதாகவும் அந்தப் பெண் ஆசிரியர் தெரிவித்திருந்தார். சாவகச்சேரி வைத்திய சாலையில் இப்படி எவரும் சேர்க்கப்படவில்லை என சாவகச்சேரி வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி பணிமனை உறுதிப் படுத்தியுள்ளது. (ஐ-4)


## பணியாளர் தேவை

யாழ். நகரில் விநியோக முகவர் நிலையம் ஒன்றுக்கு சிட்டை எழுதுனர் தேவை.
தொடர்பு- 0212219222


# கண்ணீர் அஞ்சலி



எமது வலயக்கல்வி அலுவலக கிளிநொச்சிக் கிளையில் கடமையாற்றும் திருமதி நகுலேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவர் **செல்லையா பிரபாகரன்** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்ப துடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.**

# செப்.9 முதல் 13 வரை உள்ளூராட்சி வாரம்

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையில் உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள உள்ளூராட்சி சபைகள் மட்டத் தில் நடத்தப்படும் இந்த உள் ளூராட்சி வாரம் ஏனைய அரச நிறுவனங்களையும், அமைப்புக்களையும் இணைத்துக் கொண்டு தற்பொழுது நாட்டிலுள்ள 9 மாகாண சபைகளும் 335 உள்ளூராட்சி நிறுவனங்கள்ும் இணைந்து வருடந்தோறும் நடத்தும் முக்கிய நிகழ்வாகும்.

செம்ரெம்பர் 9 ஆம் திகதி நடமாடும் சேவை தினமாகவும், 10 ஆம் திகதி வருமான அபிவிருத்தித் தினமாகவும், 11 ஆம் திகதி சுகாதார மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் தினமாகவும், 12 ஆம் திகதி மக்கள் பயன்பாட்டுத்தினமாகவும், 13 ஆம் திகதி சூழல் மற்றும் மர நடுகை தினமாகவும், 14ஆம் திகதி கல்வி நூலக அபிவிருத்தித் தினமாகவும், 15ஆம்திகதி விளையாட்டு மற்றும் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் தினமாகவும் முன்னெடுக்கப்படும் என்பது சிறப்பம்சமாகும். (ச-40)


THE GREAT UOJ02

10th Anniversary Reunion
August 10, 2013
Saraswathy Hall, Jaffna.

2002 ஆம் ஆண்டில் யாழ் பல்கலைக் கழகத்தில் பட்டத்தினை பூர்த்தி செய்த முகாமைத்துவ வணிக பீட பட்டதாரிகளுக்கான ஒன்றுகூடல்

திகதி: 10.08.2013

நேரம்: காலை 10.00 மணி

இடம்: சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் கவுஸ்), நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்

2002 ல் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த அனைத்து முகாமைத்துவ வணிக பீட பட்டதாரிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்

தொடர்புகளுக்கு: குறிஞ்சிதரன் - 0775554546 லியோஜினஸ் - 0776067539 சசிகுமார் - 0773187705 குபாகரன் - 0772983790 கலோஜினி - 0776624 363 நிமலதாசன் - 0777238282 சத்தியசீலன் - 0777169055 தயாளினி - 0776057865

ALUMNI UOJ
PORTAL FOR FRIENDS
http://www.alumni-uoj.com

Alumni -UOJ
Faculty of Management Studies and Commerce - Batch '02
University of Jaffna.

(C/10853)

# கைக் குண்டு வைத்திருந்தவருக்கு 6 வருடத்தின் பின் குற்றப்பத்திரம்

யாழ்ப்பாணம்,ஓக.9
கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கு எதிராக 6 வருடங்களின் பின்னர் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
கைக்குண்டை வைத்திருந்தவருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தது நீதிமன்றம்.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ் மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்குத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.
கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் 2007 ஆம் ஆண்டு வேலணையைச் சேர்ந்த 2 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அந்த இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
அவர்கள் தொடர்பான முதல் முறைப்பாடு அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
6 வருடங்களின் பின்னர் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி குற்றப்பத்திரம் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு அனுப்பப்பட்டது.
'' உயிராபத்தை விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் ஒருவருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. மற்றைய நபர் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.
குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தொடர்பான வழக்கு விசாரணையின் போது சந்தேக நபர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து அதனை 5 வருடங்களுக்கு ஒத்தி வைத்தது நீதிமன்றம். (த-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

## எந்தத் தடை வரினும் தமிழர் படை வெல்லும்

வித்ததாவது;
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்றால் அது தமிழர்களை இழிவுபடுத்துவதாக அமையும். எனவே இந்தியா இதில் பங்கேற்காமல் புறக்கணிக்க வேண்டும்.
இந்தியா மற்றும் இலங்கை அரசுகள் ஒன்றிணைந்து தமிழக மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுடன் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.
ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண இந்திய மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (த-14)

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக நேற்றுத் திரண்டது தமிழகம்

பாட்டில் நேற்று சென்னை, திண்டுக்கல், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், தஞ்சை, சிவகங்கை, தூத்துக்குடி உட்பட தமிழகம் முழுவதும் மக்கள் திரண்டு ஈழத் தமிழருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும். தமிழக மீனவர்களைப் பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் தமிழகம் முழுவதும் நடைபெற்றது இதில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். (த-14)

## வாக்காளரின் விவரங்களை மீண்டும் கோரும் படையினர்

எனக் கிராம அலுவலர்களால் தெரிவிக்கப்படுகிறது.
இதனால் கிராம அலுவலர்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதுடன் படையினர் கோரும் விவரங்களைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் ஆளாகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
படையினர் உட்பட எவருக்கும் வாக்காளர் விவரங்களைக் கோரும் அதிகாரம் கிடையாது, படையினர் கேட்டாலும் அவற்றை வழங்க வேண்டாம் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கடந்த ஜூன் மாதம் சகல கிராம அலுவலர்களுக்கும் அறிவித்துள்ள நிலையில் படையினரின் இந்த நடவடிக்கை தொடர்பாக விசனம் வெளியிடப்பட்டுள்ளது.
கடந்த ஜூன் மாத நடுப்பகுதியிலும் படையினர் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர்களிடம் சென்று வாக்காளர் விவரங்களைக் கோரியிருந்தனர். இந்த விடயம் தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது. இதன் பின்னரே அவ்வாறு படையினருக்கு விவரங்களை வழங்க வேண்டாம் என ஆணையாளர் எழுத்து மூல உத்தரவை விடுத்திருந்தார்.
இதன் பின்னர் வாக்காளர் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கையை இடைநிறுத்தியிருந்த படையினர் இப்போது அவற்றைக் கோரி வருகின்றனர் எனக் 'கபே' அமைப்புக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-4)

## காணி, பொலிஸ் அதிகாரங்களை கொடுத்தால் வடக்கில் தனி மாநில அரசு உருவாகிவிடும்

கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அரசு என்ற வகையில் அந்த கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தினாலும் தாய் நாட்டின் சுதந்திரம் மற்றும் நிரந்தர சமாதானத்துக்காக அந்தக் கோரிக்கைகளையும் அழுத்தங்களையும் புறந்தள்ளத் தயாராக இருக்கின்றோம்.
வடக்கு மாகாணத்துக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதால், மாநில அரசு ஒன்று உருவாகச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்ததாக அமைந்து விடும்.
இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டால், அந்த மாகாணத்தில் காணிகளின் பயன்பாடுகள் மற்றும் பிரதேசத்தின் பாதுகாப்புப் பொறுப்புகள் அவர்களிடம் சென்று விடும். இதன் பின்னர் வடக்கில் தனியான ஆட்சியை அவர்கள் உருவாக்கிக் கொள்வதுடன், மத்திய அரசின் நிர்வாகத்தில் இருந்து விலகித் தமது எண்ணத்தின்படி செயற்பட முயற்சிப்பர். இதனை எப்போதும் மறந்து விடக் கூடாது -என்றார். (த)

## சுவரொட்டிகளை அகற்ற பொலிஸாருக்குப் பணிப்பு

சி.அச்சுதன் தெரிவித்தார். யாழ்.மாவட்டத்தில், பெரும்பாலும் நகர்ப்புறங்களை அண்மித்து தேர்தல் சுவரொட்டிகள், விளம்பரப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைப் பொலிஸார் அகற்ற நடவடிக்கை எடுக்காமை குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தேர்தல் சட்ட விதிமுறைகளின்படி இத்தகைய சுவரொட்டிகள், பதாகைகளைக் காட்சிப்படுத்த முடியாது. மீறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க அனுமதிவழங்கப்பட்டுள்ளது.
எனவே தான் இது தொடர்பில் வடமாகாணத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கில் எந்த இடத்திலும் தேர்தல் சுவரொட்டிகள், பதாகைகள் காட்சிப்படுத்த முடியாது - என்றார். (த-4)

# காணி ஆக்கிரமிப்பை பேசித் தீர்க்கத் தயார்

கின்றோம்.வலிகாமத்தில்6,300 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இது கொழும்பு மாவட்டத்தில் மூன்றில் இரண்டு மடங்கு போன்றது. முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மகன் தனது காணி விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடியுள்ளார். வடக்கிலுள்ள காணிகள் அனைத்தும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையிலேயே அபகரிக்கப்பட்டுள்ளன. இக்காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டிய நிலையில் அரசு உள்ளது.
ஆயுதப்படையை வைத்தே அரசு தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை சுவீகரித்துள்ளது. காணிச் சொந்தக்காரர்கள் தமது காணிகளுக்குச் செல்ல முடியாது. புலிகள் ஏவுகணைகளைப் பாவித்த பாரிய பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்போது புலிகள் அங்கு இல்லை. ஏவுகணைகளும் இல்லை. எனவே, அதியுயர் பாதுகாப்பு வலயம் தேவையில்லை.
சம்பூரிலும் மக்களது காணிகள் அரசின் ஆயுதப்படைகளால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. சம்பூர் அனல்மின் நிலையத்திற்குத் தேவையான நிலம் மட்டும் எடுக்கப்பட்டு ஏனைய நிலங்கள் அதன் சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்படும் என அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றில் உறுதியளித்தார். 2012ஆம் ஆண்டு இந்த உறுதிமொழியை வழங்கினார். நவரட்ணபுரம் என்ற கிராமத்தில் மட்டும் மக்கள் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர். ஏனைய பகுதிகளில் மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை. 1,400 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள் இன்னும் கையளிக்கப்படவில்லை. யுத்தம் முடிவடைந்து 4 வருடங்கள் கடந்துவிட்டன. எனவே, இவ்விடயம் தொடர்பில் அரசு சிந்திக்கவேண்டும்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு, ஒட்டுசுட்டான், மாங்குளம் ஆகிய பல பகுதிகளிலும் மன்னாரில் பல பகுதிகளிலும் மக்களுக்குச் சொந்தமான பல காணிகள், கட்டடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.
தனியாருக்கு, தேவாலயங்களுக்கு, பாடசாலைகளுக்குச் சொந்தமான காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தலைமன்னாரில் 30 ஏக்கர் காணிகளைக் கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளனர். சுன்னாகத்தில் பயிற்சி முகாம்களுக்கென காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.
கிளிநொச்சி மாவட்டத்தில் 10,000 வீடுகள் இராணுவத்துக்காகக் கட்டப்படுகின்றன. இது ஒரு பாரிய வீடமைப்புத் திட்டம். இரணைமடுவில் இராணுவத்தினர் மரக்கறிச் செய்கையில் ஈடுபடுகின்றனர். வெள்ளாங்குளத்தில் 600 ஏக்கரில் கஜுவும், 100 ஏக்கரில் தென்னையும் இராணுவத்தால் பயிரிடப்பட்டுள்ளன. இப்பகுதிகளுக்கு மக்கள் செல்ல முடியாதுள்ளது. விவசாய நடவடிக்கைகளில் இராணுவத்துடன் மக்கள் போட்டியிட முடியாது. ஏனெனில், இராணுவத்தினருக்குத் தேவையான உரம், நீர், விதைகள் என்பன இலவசமாகவே கிடைக்கின்றன. அதனால் மக்கள் விவசாயம் செய்ய முடியாதுள்ளது. அவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.
அபிவிருத்திக்கெனக் கூறி அரசு பெருந்தொகையான காணிகளை அபகரித்துள்ளது. யாழில், மயிலிட்டிப் பகுதியில் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு யோகட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது
கிண்ணியா வெந்நீர் ஊற்றுகள் பௌத்த விகாரையின் சொத்தாக மாறியுள்ளன. இதில் அரசு தலையிடவேண்டும். நான் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்குக் கடிதம் எழுதினேன். ஆனால், இன்று வரை எனக்குப் பதில் கிடைக்கவில்லை.
தமிழரின் வரலாற்றுக் கலாசாரம் முக்கியத்துவமிக்க பல பகுதிகள் புனித பூமியென அரசால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. குச்சவெளி உள்ளிட்ட இன்னும் பலபகுதிகளில் உள்ள முருகன், அம்மன் ஆலயங்களின் இடங்கள் தற்போது புனித பூமி என இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.
அங்கு பௌத்தர்கள் இல்லை. பிக்குகள் மட்டும் இருக்கின்றனர். அவர்களுக்கு இராணுவத்தினர்தான் தானம் வழங்குகின்றனர்.
தொல்பொருள் ஆராய்ச்சி எனக் கூறி அங்கு பௌத்தர்களின் புனித பூமிக்காக இராணுவத்தால் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. இவ்வாறு தமிழர்களின் வரலாற்றுப் பாரம்பரிய சிறப்புமிக்க இடங்கள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்படுகின்றன.
13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் மக்கள் மத்தியில் பல கேள்விகள் எழுந்துள்ளன. ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் ஜனாதிபதி வெளியிட்ட கூட்டறிக்கையில் 13இற்கு அப்பால் சென்று ஆகக்கூடிய அதிகாரப்பகிர்வு வழங்குவோம் என்றுள்ளது. ஆனால், அதற்கான நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப்படவில்லை.
13ஆவது திருத்தச் சட்டத்தையும், இலங்கை - இந்திய உடன்படிக்கையையும் புறக்கணிக்க முடியுமா? ஐ.நா. சாசனத்துக்கு அமைய எந்தவொரு நாடும் ஒருதலைப் பட்சமாக - தான்தோன்றித்தனமாக செயற்படமுடியாது. ஆனால், இங்கே அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது. நியாயமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுகூட கிழக்குத் தமிழ், முஸ்லிம் மக்களின் வாழ்க்கையில் தாக்கம் செலுத்தும். தமிழரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தயார் எனில், அதற்கு உதவி வழங்க நாம் தயார்.
தமிழரின் பிரச்சினை தொடர்பில் இடம்பெறும் நீதி, நியாயமற்ற நடவடிக்கைகளுக்கு அரசு தீர்வுதரவேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கிறேன் - என்றார் சம்பந்தன் .

வளர்மதி முன்னேற்றக் கழக
பொன்விழவை முன்னிட்டு நடத்தப்படும்
**மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி**
**காலம்**- இன்று 09.08.2013 வெள்ளிக்கிழமை
காலை 8.30மணி
**இடம்**- வளர்மதி கழகத்துக்கு அருகில்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
சம்பியன் லேன்,
கொக்குவில்.
நிர்வாகம்
வளர்மதி முன்னேற்றக்கழகம்

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

*அமரர் பிறைசூடி செல்லம்மா*
கடந்த 11.07.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்ப தலைவியின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து உதவி புரிந்தோருக்கும், தொலைபேசி, இணையத் தளம் ஊடாக ஆறுதல் கூறியவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (10.08.2013) சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளில் நடைபெறவிருக்கும் சபிண்டிகரண நிகழ்விலும் அதனைத் தொடந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
**குடும்பத்தினர்.**

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக.9
வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சி சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ற-400)

★★★

யாழ்ப்பாணம், ஓக. 9
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில்இடம்பெறும்ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள்:

பி.ப. 4 மணி
நாமகள் விளையாட்டுக் கழகம் எதிர் மைக்கல் விளையாட்டுக்கழகம்

பி.ப. 4.45 மணி
குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் எதிர் நக்கிரன் விளையாட்டுக்கழகம். (ற-422-23)

★★★


யாழ்ப்பாணம், ஓக.9
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 4 மணி
நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)



### பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ணம்

# இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி.



யாழ்ப்பாணம், ஓக. 9
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ண "20/20" கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றிசீயன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் யூனுதாஸ் 96 ஓட்டங்களையும், ஜெயரூபன் 35 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பற்றிசீயன்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் லிவிங்ரன் 3 இலக்குகளையும், கினிங்ரன் 2 இலக்குகளையும் சஜீவன், நிதர்ஷன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

184 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பற்றிசீயன்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

அதில் கிளிங்ரன் ஆட்டம் இழக்காமல் 59 ஓட்டங்களையும், ஜெயந்திரன் 23 ஓட்டங்களையும், நிதர்சன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி சார்பாக சிலோஜன், பிரதீப் பவி ஆகியோர் தலா 2 இலக்குகளையும்பார்த்தீபன்ஓர்இலக்கையும் வீழ்த்தினர். (ற-23)



வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்ற வடமாகாண தடகளப் போட்டிகளின் போது நடைபெற்ற ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் ஒரு காட்சி...

## உதைபந்து இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஓக.9
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

3 மணிக்கு இடம்பெறும் 3 ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிளஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

தொடர்ந்து 4 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ற-23)

## கடற்கரை கரப்பந்து நாளை

யாழ்ப்பாணம், ஓக. 9
39 ஆவது தேசிய மட்ட கடற்கரை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைகளில் முல்லைத்தீவு கடற்கரையில் இடம்பெறவுள்ளது.

ஆரம்பநாள் நிகழ்வுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுக்கமகே, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இறுதிநாள் நிகழ்வுக்கு முல்லைத்தீவு மாட்ட அரச அதிபர் என்.வேதநாயகம் முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல்எல்.பி. ஆர்.மார்க் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-23)

## வதிரி ஸ்ரீமுருகனை சாய்த்தது கரவெட்டி ஞானம்ஸ்

பருத்தித்துறை, ஓக. 9
பருத்தித்துறை குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திய 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் கைப்பற்றியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகமும், கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர் வதிரி ஸ்ரீமுருகன் அணியினர்.

களமிறங்கிய வதிரி ஸ்ரீமுருகன் அணியினருக்கு கரவெட்டி ஞானம்ஸ் அணியின் பந்து விச்சாளர்கள் சிம்மசொப்பனமாக விளங்கினர்.

ஸ்ரீமுருகன் அணி 10 ஓட்டங்களுக்குள் 3 இலக்குகளை இழந்து தடுமாறியது.

பின்வரிசை வீரர்கள் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த 9.2 பந்துப்பரிமாற்றங்களில் 35 ஓட்டங்களுக்குள் தமது சகல இலக்குகளையும் இழந்தது வதிரி ஸ்ரீமுருகன் அணி.

துடுப்பாட்டத்தில் சசி 9 ஓட்டங்களையும், தர்சன் மற்றும் அரிகரன் ஆகியோர் தலா 7 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

ஞானம்ஸ் சார்பாக பந்து வீச்சில் குணதீபன் 3 இலக்குகளையும் சுதர்சன், ஜொனி மற்றும் சேந்திரன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சாய்த்தனர்.



எட்டக்கூடிய இலக்கான 36 ஓட்டங்களை நோக்கி துடுப்பாட ஆரம்பித்தனர் கரவெட்டி ஞானம்ஸ் கழகத்தினர். ஆனால் அது அவர்களுக்கு எதிர்பார்த்தளவு இலகுவானதாக இல்லை. துடுப்பாட்டத்தில் பிரகாசிக்க தவறிய வதிரி ஸ்ரீமுருகன் அணியினர் பந்து வீச்சில் சிறப்பாக செயற்பட்டனர்.

இதனால் ஞானம்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை மந்த கதியில் சென்று கொண்டிருந்ததுடன் இலக்குகளும் ஒருபுறம் சாய்ந்து கொண்டிருந்தது.

4 ஆவது இலக்குக்காக இணைந்த சுகந்தன் மற்றும் சேந்திரன் ஆகியோரின் இணைப்பாட்டம் தடுமாறிய கரவெட்டி ஞானம்ஸ் அணியை காப்பாற்றியது.

7.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது கரவெட்டி ஞானம்ஸ்.

துடுப்பாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் சார்பாக சேந்திரன் ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களையும், சுகந்தன் 8 ஓட்டங்களையும், துஷ்யந்தன் 7 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சிறப்பாக ஆரம்ப பந்துப் பரிமாற்றங்களை வீசிய ஸ்ரீ முருகன் அணியின் உமைசுதன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 இலக்குகளையும் டெஸ்மன் ஓர் இலக்கையும் சாய்த்தனர்.

ஆட்ட நாயகனாக ஞானம்ஸ் அணியின் சேந்திரனும், தொடர் நாயகனாக வதிரி ஸ்ரீமுருகன் அணியின் பவனும், சிறந்த துடுப்பாட்ட வீரனாக மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் ரகுவரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.தர்மராஜா வெற்றியீட்டிய அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களை வழங்கி கௌரவித்தார். (ற-34)

# ஜமாய்த்தது ஜமைக்கா

ஜமைக்கா அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.


கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் 9ஆவது ஆட்டத்தில் ஜமைக்கா அணி வெற்றிபெற்றுள்ளது. ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் ஜமைக்கா அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

குயீன்ஸ் பார்க் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஜமைக்கா அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இலக்குக்காக 5.4 பந்துப்பரிமாற்றங்களில் 44 ஓட்டங்களைப் பகிர்ந்த ஜமைக்கா அணி, அதன் பின்னர் மெதுவான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஒரு கட்டத்தில் 17.4 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 105 ஓட்டங்களுடன் தடுமாறியது. 7ஆவது இலக்குக்காக டன்ஸா ஹைற், வேர்னன் பிலாந்தர் இருவரும் 14 பந்துகளில் 41 ஓட்டங்களைக் குவிக்க போதுமாக வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜமைக்கா அணி சார்பாக டன்ஸா ஹைற் 26 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும், கிறிஸ் கெய்ல் 29 பந்துகளில் 28 ஓட்டங்களையும், வேர்னன் பிலாந்தர் 8 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக டெலோர்ண் ஜோன்சன், பிடல் எட்வேர்ட்ஸ், கெவோன் கூப்பர், டுவைன் பிராவோ, சாமுவேல் பத்ரி ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.



147 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி, 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அவ்வணியும் ஆரம்பத்திலிருந்தே மெதுவான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியதோடு, ஒரு கட்டத்தில் 18.2 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. இறுதி 8 பந்துகளில் 29 ஓட்டங்கள் தேவைப்பட்டது. எனினும் 23 ஓட்டங்களே பெறப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக அட்ரியன் பரத் 36 பந்துகளில் 32 ஓட்டங்களையும், றொஸ் ரெய்லர் 28 பந்துகளில் 31 ஓட்டங்களையும், டுவைன் பிராவோ 24 பந்துகளில் 29 ஓட்டங்களையும், நிக்கலொஸ் பூரான் 15 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜமைக்கா அணி சார்பாக அன்ட்ரே ரசல் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். மிகச் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்திய முத்தையா முரளிதரன், 4 பந்துப்பரிமாற்றங்களில் 14 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து ஓர் விக்கெட்டைக் கைப்பற்றினார். அவர் தவிர கிறிஸ் கெய்ல், டேவிட் பேர்னாட் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக டானியல் ஹைற் தெரிவானார். (ற)

# இந்திய அணியை பலமாக்கியவர் கங்குலி

## ஸ்டீவ் வோ

இந்திய அணியைப் பலமான அணியாக உருவாக்கிய பெருமை கங்குலியையே சாரும் என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் வோ.



இதுகுறித்து ஸ்டீவ் வோ கருத்துத் தெரிவிக்கையில்,

''கொல்கத்தா என்றாலே அனைவருக்கும் நினைவுக்கு வருவது கங்குலி தான். அவர் ஒரு சிறந்த தலைவர். இந்திய அணியை பலமான அணியாக உருவாக்கியவர் ஆவார். கங்குலியும், டோனியும் வித்தியாசமான தலைவர்கள். ஆனால் இருவருமே சிறந்தவர்கள்.

ஆஷஸ் டெஸ்ட் தொடரில் 3ஆவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி நன்றாகவே ஆடியது. இளம் வீரர்களை கொண்ட ஆஸ்திரேலிய அணி சிறப்பான நிலையை அடைய சில காலம் ஆகும். 0:2 என்ற கணக்கில் பின்தங்கி இருக்கும் ஆஸ்திரேலிய அணி இனிவரும் 2 டெஸ்டில் வென்று 2:2 என்ற சமநிலையை அடைவது மிகவும் கடினம்.

'20/20' ஆட்டங்களின் ஆதிக்கத்தால் டெஸ்ட் போட்டி அழிந்துவிட்டதாக கூறுவதை ஏற்கமுடியவில்லை. டெஸ்ட் போட்டி உறுதியாகவே இருக்கிறது. தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ஆஷஸ் டெஸ்ட் தொடரை அதிகமான ரசிகர்கள் ரசித்தனர்.

'20/20' ஆட்டங்கள் இளம் வீரர்களுக்கானது. வீரர்களுக்கு நல்ல பணம் கிடைக்கிறது. ரசிகர்களும் விரும்புகிறார்கள். ஆனாலும் டெஸ்ட் போட்டியின் புகழ் மங்கி விட வில்லை.

தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தின் போது டெண்டுல்கர் 200ஆவது டெஸ்டில் விளையாட உள்ளார். அதை மிகப்பெரிய சாதனையாக கருதுகிறேன். இதை யாராலும் முறியடிப்பது கடினமே'' என்று ஸ்டீவ் வோ தெரிவித்தார்.(ற)

# நெய்மருக்கு அனீமியா

பிரேஸில் உதைபந்தாட்ட அணி வீரர் நெய்மருக்கு 'அனீமியா' குறைபாடு ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.


21 வயதுடைய நெய்மர் சில மாதங்களுக்கு முன்தான் பார்சிலோனா கழக அணி சார்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டார். அண்மையில் நடந்த லெச்சி கிடான்ஸ்க் அணிக்கு எதிரான ஆட்டத்தில் முதன் முதலாக விளையாடினார்.

இந்தநிலையில் அவருக்கு 'அனீமியா' குறைபாடு உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. 'அனீமியா' குறைபாட்டுக்கு உடலில் உள்ள இரும்புச்சத்து குறைவாக உள்ளதே காரணம். இதன் காரணமாக உடல் அதிக நேரம் சோர்வாகவே காணப்படும்.

இது குறித்து ஸ்பெயினில் வெளியாகும் 'எல் பய்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள தகவலில், '' நெய்மரின் உடற்தகுதியை பரிசோதித்தபோது அவருக்கு 'அனீமியா' குறைபாடு இருப்பது தெரியவந்துள்ளது. இதன்படி, ஊட்டச் சத்தான உணவுகள் சாப்பிடவும், தவிர சில நாள்கள் ஓய்வில் இருக்கவும் டாக்டர் அறிவுறுத்தியுள்ளார்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற)

# ஜடேஜாவின் வளர்ச்சி ஆச்சரியமானதல்ல

## விராட் கோஹ்லி



இந்திய அணியின் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜாவின் வளர்ச்சி குறித்து ஆச்சரியப்படவில்லை என்று இந்திய அணியின் இளம் வீரர் விராட் கோஹ்லி தெரிவித்ததோடு ரவீந்திர ஜடேஜாவின் சகலதுறைப் பெறுபேறுகள் தொடர்பாக தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிம்பாப்வேயில் இடம்பெற்ற தொடரில் ரவீந்திர ஜடேஜா சிறப்பாகச் செயற்பட்டதோடு, ஒருநாள் சர்வதேச ஆட்டத்தில் பந்துவீச்சாளர்களின் தரப்படுத்தலில் முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே விராட் கோஹ்லி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

ஜடேஜாவின் வளர்ச்சி குறித்து ஆச்சரியப்படவில்லை. சர்வதேச ஆட்டங்களில் ஜடேஜா சிறப்பான முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் அவர் சிறப்பான முன்னேற்றத்தை வெளிப் படுத்தியுள்ளார்.

கடந்த ஒன்று, இரண்டு வருடங்களில் பந்துவீச்சில் ரவீந்திர ஜடேஜா மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு வருவதோடு தேவையான நேரங்களில் துடுப்பாட்டத்திலும் சிறப்பான பங்களிப்புகளை வழங்கி வருகின்றார்.

உலகின் முதற்தர வீரராக ரவீந்திர ஜடேஜா தரப்படுத்தப்பட்டுள்ளார். அதுகுறித்து மகிழ்ச்சியடைகின்றேன்'' என்று தெரிவித்துள்ளார் கோஹ்லி. (ற)

# ஆஷஸ் தொடரில் நூதன மோசடி

## கிளம்பியது புதிய சர்ச்சை



பந்து துடுப்பில் உரசியதற்கு ஆதாரம் இல்லாவிட்டாலும், அவரது ஆட்டமிழப்பு உறுதி செய்யப்பட்டது.

ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின்போது, 'சிலிக்கன் ரேப்' ஒட்டி இங்கிலாந்து, ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் மோசடி செய்ததாக பரபரப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து இடையே 5 போட்டி கொண்ட ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்து மண்ணில் நடந்து வருகிறது.

முதல் இரு டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. 3ஆவது டெஸ்ட் சம நிலையில் நிறைவடைந்தது.

தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கும் இங்கிலாந்து அணி ஆஷஸ் கிண்ணத்தைத்தக்க வைத்துக்கொண்டது. இந்த நிலையில் ஆஷஸ் தொடரில் புது விதமான பிரச்சினை வெடித்துள்ளது. இந்த தொடரில் நடுவரின் தீர்ப்பில் சந்தேகம் இருந்தால், அதை எதிர்த்து முறையீடு செய்யும் முறை (டி.ஆர்.எஸ்.) கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் இந்த தொழில்நுட்பம் ஒட்டு மொத்த சர்ச்சையின் உருவமாக கிளம்பி இருக்கிறது. டி.ஆர்.எஸ். என்பது நடுவர்களின் தவறான தீர்ப்புகளை சரி செய்வதற்கு தான். ஆனால் அந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தியும், சில தவறான தீர்ப்புகள் ஆஷஸ்தொடரில்வழங்கப்பட்டது. குறிப்பாக டி.ஆர்.எஸ்இன் ஒரு அங்கமான 'ஹொட் ஸ்பொட்' தொழில்நுட்பம் குறித்து பல்வேறு ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன. பந்து துடுப்பில் உரசியதா இல்லையா? என்பதை துல்லியமான 'இன்ப்ரா ரெட் கமரா' உதவியுடன் அறிவதற்கு 'ஹொட் ஸ்பொட்' தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால் ஆஷஸ் 3ஆவது டெஸ்டின் போது ஆஸி. வீரர் உஸ்மான் கவாஜா, இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் மேத் பிரையரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் என்று நடுவர் தீர்ப்பு வழங்கிய போது, 'ஹொட் ஸ்பொட்' முறையின்படி தொலைக்காட்சி நடுவர் பரிசீலனை செய்தார்.

பந்து துடுப்பில் உரசியதற்கான ஆதாரம் எதுவும் தெரியவில்லை. ஆனால் பந்து துடுப்பை கடந்த போது ஏதோ சத்தம் மட்டும் வந்தது. பந்து துடுப்பில் உரசியதற்கு ஆதாரம் இல்லாவிட்டாலும், அவரது ஆட்டமிழப்பு உறுதி செய்யப் பட்டது. அதற்கு முன்னாள் வீரர்கள் பலரும் கண்டனம் தெரிவித்தனர். அதே போட்டியில் இங்கிலாந்து வீரர் கெவின் பீட்டர்சனுக்கு வழங்கப்பட்ட பிடியிலும், 'ஹொட் ஸ்பொட்' முறையில் பந்து துடுப்பில் பட்டதற்கான அடையாளம் தெரியவில்லை.

அதனால் ஹொட்ஸ் பொட் தொழில்நுட்பத்தில் கோளாறு இருக்கின்றது என்று பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டினர். இதற்கிடையே, 'ஹொட் ஸ்பொட்' தொழில் நுட்பத்தை குழப்புவதற்காக இந்த தொடரில் இரு அணியிலும் சில வீரர்கள் நூதன மோசடியைக் கையாண்டு இருப்பதாக இப்போது பரபரப்பான தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதாவது துடுப்பில் பந்து உரசி செல்வதை 'இன்ப்ரா ரெட் கமரா' கண்டு பிடிப்பதைத் தவிர்ப்பதற்காக வீரர்கள், சிலிகான் என்ற ஒரு வகை உலோக ரேப்பை (செலோ டேப் மாதிரி) துடுப் பில் ஒட்டி பயன்படுத்தியுள்ளனர்.

சிலிகான் டேப்பில் பந்து உரசும் போது, அது துடுப்பில் பட்டதற்கான அடையா ளத்தை மறைத்து விடும். சத்தமும் வராது. இவ்வாறு நடக்கும் போது 'ஹொட் ஸ்பொட்' தொழில் நுட்பம் குழம்பி போய் விடும்.

இப்படி மோசடிகள் அரங்கேற்றப்பட் டதால் தான், இந்த தொடரின் போது ஹொட் ஸ்பொட் தொழில்நுட்பம் சில முக்கியமான முடிவுகளில் தனது தரத்தை இழந்து விட்டது என்று ஆஸி. தொலைக் காட்சி ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

இதுகுறித்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) விசாரணையை தொடங்கி விட்டது என்று அந்த அந்த தொலைக்காட்சி அலை வரிசை குறிப் பிட்டுள்ளது.

இது பற்றி இங்கிலாந்து முன்னாள் தலைவர் மைக்கேல் வோகன் கூறும் போது,

''வீரர்கள் தங்களின் துடுப்புகளில் சிலிகான் ரேப்பை பயன்படுத்துகிறார்கள் என்பதை ஆஸி. தலைவர் மைக்கல் கிளார்க் விசாரிக்க வேண்டிய நேரம் இது' என்றார்.

மைக்கல் கிளார்க்கிடம் இது பற்றி கேட்ட போது,

''துடுப்பில் 'ரேப்' பயன்படுத்துவது குறித்து எனக்கு தெரியாது. எங்கள் அணியில் யாரும் இது போன்ற மோசடியில் ஈடுபடவில்லை என்று என்னால் உத்தரவாதம் அளிக்க முடியும். இந்த மாதிரி விளையாடுவது ஆஸி. கிரிக்கெட்டின் கலாசாரம் கிடையாது' என்றார்.

இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் மீது தான் மறைமுகமாக இந்த குற்றச்சாட்டு தொடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஆவேசமடைந்துள்ள அவர் கூறும்போது,

''விக்கெட்டை இழப்பதற்கு நான் ஒரு போதும் பயந்தது கிடையாது. ஆட்டமிழப்பு என்றால் உடனே நடையை கட்டி விடுவேன். துடுப்பில் சிலிகான் டேப்பை ஒட்டியிருப்பதாக கூறுவது, எனக்கு கடும் கோபத்தை ஏற்படுத்துகிறது.

பந்து துடுப்பில் உரசுவதை மறைக்க நான் முயற்சிப்பதாக கூறுவது முட்டாள் தனமானது. முதல் இன்னிங்ஸின் போது எனது துடுப்பில் பந்து உரசியதை ஹொட் ஸ்பொட் தொழில்நுட்பத்தில் தெளிவாக தெரிந்ததை எண்ணி பார்க்க வேண்டும்'' என்றார்.

எனினும் ஆஸ்திரேலிய தொலைக்காட்சியின் குற்றச்சாட்டை ஐ.சி.சி. மறுத்துள்ளது.

ஐ.சி.சி பொது மேலாளர் ஜெப் அலார்டைசி ஆஸி. இங்கிலாந்து வீர்ர்கள், நடுவர்களை சந்தித்து பேசினார். அப்போது அடுத்து வரும் டெஸ்ட் போட்டிகளில் டி.ஆர்.எஸ். முறையை எப்படி சிறப்பாக பயன்படுத்துவது என்பது குறித்து ஆலோசித்தார். மற்றபடி எந்த வீரர்களிடம் விசாரணை நடத்தவில்லை. ஊடகத்தின் தகவல் தவறானது என்று ஐ.சி.சி.யின் தலைமை செயல் அதிகாரி டேவ் ரிச்சட்சன் கூறியுள்ளார். (ற)

A/L ICT 2015 திரு.இ.குமரன் - B.Sc.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
12 வருடங்களாகக் கணினிக் கற்கையில்
Digital Electronics Python Programming
2011/2012 - 100% pass Time: Sat/Sun at 3 pm
74, Sabapathy Lane, Jaffna - Near Kokuvil
0776577359

உடனடி வேலைவாய்ப்பு
கேற்வே நிறுவனத்தின் கிளிநொச்சி கிளையில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
01. கணினி போதனாசிரியர் (முழுநேரம்)
02. கணினி போதனாசிரியர் (பகுதிநேரம்)
03. ஆங்கில போதனாசிரியர் (முழுநேரம்)
04. ஆங்கில போதனாசிரியர் (பகுதி நேரம்)
★ கிளிநொச்சியில் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்
★ கல்வி மற்றும் தகைமைச் சான்றுதழ்களுடன் 10.08.2013 காலை 9.00 மணிமுதல் பி.ப.2.00 மணிக்குள் நேரில் வரவும்.



முகவரி
கேற்வே,
A9 வீதி,
கரடிப்போக்குச்சந்தி,
கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு:-
(T)- 021 5674433
(M)- 071 8697697
(e) gatewaykilinochchi@gmail.com

Multimedia மூலம்
பௌதிகவியல்
By.M.கருணாநிதி B.sc(spl)
(0776183064) 2015 A/L - பொறியியல்
சனி, ஞாயிறு -4.00pm
2014 A/L வெப்பவியல்
சனி, ஞாயிறு -9.00 Am
Aptech மேல்மாடியில் (Science Corner முன்னால்)

வாகன பாதுகாப்பு நிலையம்
அமைப்பதற்கான
கேள்வி அறிவித்தல்
நல்லூர் வருடாந்த திருவிழாவின் போது யாழ். வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்மன் ஆலய வளவில் வாகன பாதுகாப்பு நிலையம் நடத்துவதற்கு (அமைப்பதற்கு) ஆகக் கூடிய கேள்வி கேட்போருக்கு வழங்க உள்ளதால் ஆர்வமுடையோர் 2013.08.11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு ஆலய முன்றலில் சமூக மளித்து கேள்விகளில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின் றேன். ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூ.150, 000/= ஆகும். கேள்வித் தொகை யை உடனேயே அவ்விடத்தில் ஆலய திருப்பணி நிதிக்கு செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
நு. சிறீமோகன், பெறுநர்/பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



இடர்கள் குறைந்த,
வரிகள் அற்ற
**நிலையான வருமான**
**வழியொன்றில்**
முதலீடு செய்யும் இலாவகமான
முறையை நீங்கள் அறிவீர்களா?

இலவசக் கருத்தரங்கு

சிறந்த வருமானத்தை* வழங்கும் நிலையான வருமான வழியொன்றில் முதலீடு செய்யும் முறை சம்பந்தமாக நாம் நடத்தும் இலவச கருத்தரங்கில் பங்குபற்றி புதிய முதலீட்டு வழி பற்றிய சகல புதிய தகவல்களையும் அறிந்துகொள்ளுங்கள்.

| திகதி | இடம் | விபரங்களுக்கும் பதிவிற்கும் | நேரம் |
|---|---|---|---|
| ஓகஸ்ட் 10 | கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ் - கிளை, 147- 2/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | தொலைபேசி: 021-2221455 0777-822014 | மு.ப. 9.00 – நண்பகல் 12.00 |

*தற்போதய திறைசேரி உண்டியல் வீதத்தைவிடக் கூடுதலானது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

(C/10842)



# இரையைத் தேடி அலையும் புதிய சிலந்தி இனம்

தென்கிழக்காசிய நாடான லாஹோஸில் புதுவகை சிலந்தியொன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். குறித்த சிலந்தி இனத்துக்கு Ctenus monaghani எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ஸ்ரீஆவணப்படமொன்றை தயாரித்துக் கொண்டிருக்கும் போதே ஆராய்ச்சியாளர்கள் இதனைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தச் சிலந்தி யானது 0.4 அங்குலமென்பது குறிப்பிடத்தக்கது.

இவை தமது இரையைப் பிடிப்பதற்காக வலை எதனையும் உருவாக்குவதில்லையெனவும் மாறாக இரையைத் தேடி அலைபவை எனவும் தமது பார்வையில் சிக்கும் இரையைப் பிடித்து உண்கின்றன என்றும் ஆராய்ச்சியாளர் கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தென்கிழக்காசியாவில் பல்வேறு அரிய உயிரி னங்கள் வாழ்ந்து வருவதாக ஆராய்ச்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். அழிவின் விளிம்பில் இருக்கும் பல்வேறு தவளை மற்றும் பல்லியினங்களை ஆராய்ச்சியாளர்கள் அங்கு கண்டுபிடித்துள்ளனர்.

இதேபோல் இலங்கையின் மாங்குளம் பகுதியில் அண்மையில் மனித முகமொன்றின் அளவை ஒத்த சிலந்தியொன்று கண்டுபிடிக்கப்பட்டது.


குறித்த சிலந்தி டரான்டூலாஸ் tarantulas எனப்படும் இராட்சத சிலந்தி குடும்பத்தைச் சேர்ந்த பொயிசிலோதேரியா Poecilotheria இனத்தைச் சேர்ந்தது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித் திருந்தனர்.



ST. ANTHONY'S
HOME MART

SINCE 1942

புதிய வாழ்க்கைக்கு நவீன தெரிவுகள்





-D&B-

70 வருட காலமாக இலங்கையர்களின் நம்பிக்கையை வென்ற நிர்மாணத்துறை சார்ந்த தயாரிப்புகளை வழங்கும் சென். அந்தனீஸ், இன்று வெள்ளிக்கிழமை தனது காட்சியறையை கிளிநொச்சியில் கோலாகலமாக அங்குரார்ப்பணம் செய்கிறது.

புதிய வாழ்க்கைக்கு உகந்த அனைத்துவிதமான நவீன நிர்மாணத் தயாரிப்புகளையும் ஒரே கூரையில் கீழ் கொண்ட **Home Mart** காட்சியறைக்கு விஜயம் செய்து உங்கள் வாழ்க்கையில் புது மலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய நிர்மாணத்துறை சார்ந்த தயாரிப்புகளை மனம் விரும்பியதை போல் தெரிவு செய்யுங்கள்.

ST. ANTHONY'S
HOME MART

முகவரி: சென்.அந்தனீஸ் ஹோம் மார்ட், ஏ9 வீதி, கிளிநொச்சி. தொ.பேசி:021-57676720, தொ.நகல்: 021-5676721

(C/10841)

WATERTEC Simply Better · PRINCE · CROWN · Husqvarna · DARI · COTTO · KAKT · 7CF · VENUS · ST. ANTHONY'S SOLAR · KENT

St.Anthony's
Hardware (Pvt) Ltd.

சென்.அந்தனீஸ் ஹோம் மார்ட். ஏ9 வீதி. கிளிநொச்சி. தொ.பேசி:021 -57676720. தொ.நகல்: 021 -5676721

www.stanthonys.lk

Reaching for Excellence

## உலாவிகளில் முதலிடம் கூகுள் குரோமுக்கு

தற்போதைய நிலையில் மக்களால் விரும்பிப் பயன்படுத்த உலாவிகளில் முதலிடம் பிடித்துள்ளது குரோம் உலாவி.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் குரோம் உலாவி அறிமுகமான காலகட்டத்தில் இன்டர்நெட் எக்ஸ் புளோரர் தான் முதலிடத்தில் இருந்தது.

ஆனால் அறிமுகமானதில் இருந்தே குரோம் உலாவியின் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து பல்வேறு வசதிகளும் அறிமுகப் படுத்தப்பட்டன. இந்தநிலையில் அண்மையில் இணையச் செயற்பாடுகளைக் கண்காணித்து வரும் Stat Counter, குரோம் உலாவி தற்போது முதலிடத் தைப் பிடித்துள்ளதாக அறிவித்துள்ளது.


ஜ"ன் மாதம் இறுதியாகக் கிடைத்த புள்ளி விவரங்களின் படி, குரோம் உலகளாவிய அளவில், 43 சதவிகித இணையப் பயனாளர்களை வாடிக்கையாளர்களாகக் கொண்டுள்ளது.

ஆனால் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 25 சதவீத வாடிக்கையாளர்களையே தன்னிடத்தில் கொண்டுள்ளது. பயர்பொக்ஸ் ஏறத்தாழ 20 சதவீதமானோருக்கு சேவை செய்து வருகிறது. அடுத்து நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் சபாரி மற்றும் ஆப்பரா உலாவிகள் உள்ளன.




## ஒரு நிமிடத்தில் என்னவெல்லாம் நிகழ்கிறது தெரியுமா ?




நாம் தினமும் பயன்படுத்தும் இணையத்தில் நொடிப்பொழுதில் பல தகவல்கள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அதைப்பற்றி நாம் துல்லியமாக அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இணைய உலகில் ஒரு நிமிடத்தில் என்னவெல்லாம் நடக்கிறது என்பதை இணையத் தளம் ஒன்று விளக்கமாகக் கூறியிருக்கிறது.

அதன்படி. 1 நிமிடத்தில் 2 மில்லியன் தேடல்கள் கூகுளில் நிகழ்கின்றன. 72 மணித்தியால காணொலிகள் யுடியூப்பில் தரவேற்றம் செய்யப்படுகின்றன. 70 டொமைன்கள் பதியப்படுவதுடன், 571 இணையத் தளங் களும் புதிதாக உருவாக்கப்படுகின்றன.

சமூகவலைத்தளமான பேஸ்புக்கில் 1.8 மில்லியன் (likes)களும், டுவிட்டரில் 278,000 டுவிட்டுக் களும் பதிவாகின்றன.

அதேபோல 204 மில்லியன் மின்னஞ்சல்கள் ஒரு நிமிடத்தில் அனுப்பப்படுகின்றன. இன்னும் பல இணைய சேவைகள் ஒரு நிமிடத்தில் வியக்கத்தக்க வகையில் நிகழ்கின்றன.

இந்த வளர்ச்சி வருடா வருடம் பல மடங்கு உயர்ந்துள்ளது. உதாரணமாக கடந்த வருடத்தை விட இந்த வருடம் 36 மில் லியன் மின்னஞ்சல்கள் கூடுதலாக அனுப்பப்பட்டுள்ளன.



## ஒன்லைன் சேமிப்பு வசதியைத் தரும் Yandex.Disk

ரஷ்யாவில் ஆதிக்கம் செலுத்திவரும் இணைய தேடுபொறியான ஜன்டெக்ஸ் (Yandex) ஒன்லைன் சேமிப்பு வசதியையும் பயனர்களுக்கு வழங்கி வருகின்றது. இது றொப்பொக்ஸ் (Dropbox) மற்றும் கூகுள் டிறைவ் (Google Drive) போன்றவற்றுக்குப் போட்டியாக காணப்படுகின்ற போதிலும் இலவச சேவையை வழங்குவதில்லை. மாறாக 10ஜிபி கொள்ளளவை மாதம் ஒன்றுக்குப் பயன்படுத்துவதற்கு கட்டணமாக ஒரு டொலரும், வருடத்துக்கு 10 டொலரும் செலுத்த வேண்டும். அதே போன்று 100ஜிபியினைப் பெற்றுக்கொள்வதற்கு மாதத்துக்கு 5 டொலரும் வருடத்துக்கு 50 டொலரும் கட்டணமாகச் செலுத்தவேண்டும். 1ரிபி சேமிப்பு வசதியை பயன் படுத்த வேண்டுமாயின் மாதத்துக்கு 30 டொலர்களும் வருடத் திற்கு 300 டொலர்களும் கட்டணமாக செலுத்த வேண்டும்.

## உடல் நலத்தை பாதுகாக்கும் உலகின் சிறிய மின்சுற்று




தொழில்நுட்பத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியின் காரணமாக புதிதாக உருவாக்கப் படும் இலத்திரனியல் சாதனங்களின் அளவு மிகவும் சிறிதாகிக்கொண்டே செல்கின்றது.

அதேபோன்று தற்போது உலகிலேயே காணப்படும் இலத்திரனியல் மின்சுற்றுக்களில் மிகவும் மெலிதானதும், பாரம் குறைந்ததுமான புதிய சுற்று ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்சுற்று, எதிர்காலத்தில் உடல் நலங்களைப் பாதுகாக்க உருவாக்கப்படவிருக்கும் அப்பிளிக்கேஷன்களுடன் இணைத்து பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



தற்போது உலகிலேயே காணப்படும் இலத்திரனியல் மின்சுற்றுக் களில் மிகவும் மெலிதான தும் பாரம் குறைந்ததுமான புதிய சுற்று இது.

## 300 GB கொள்ளளவு உடைய இறுவட்டை உருவாக்கும் முயற்சியில் சொனி மற்றும் பனசொனிக்

கணினியில் தரவு, தகவல்களைச் சேமிப்பதற்கு பல்வேறு ஊடகங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றில் ஒளியியல் ஊடகத்தின் அடிப்படையாக உருவாக்கப்பட்டதே இறுவட்டு ஆகும். இவற்றில் பல்வேறு கொள்ளளவுகள் காணப்படுகின்ற போதிலும் முதன் முறையாக 300 ஜிபி கொள்ளளவுடைய இறுவட்டை சொனி மற்றும் பனசொனிக் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. இது தொடர்பான அறிவித்தலை இரு நிறுவனங்களும் வெளியிட்டுள்ளதுடன் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு இவை விற்பனைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

